# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ.,
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. | விரோதிகிருது௵ ஆனி௴ —JUNE 1911. | ஸஞ்சிகை 6. No. 6.


# Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion ...lish in book form articles which have been paid for ...ime of publication in the journal.

...oney should be paid to any Agent. All remit... ...d letters should be addressed to the Publishers, ...G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunku... ...etty Street, Georgetown, Madras.

# பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு | .. 4 0 0 | .. | 6 0 0 |
| தனிப்பிரதி | .. 0 6 0 | .. | 0 8 0 |
| மாதிரி காபி | .. 0 2 0 | .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.
## PRACTICAL LIFE.

புஸ்தகம் 3 | Vol. 3. — விரோதிகிருது௵ ஆனி௴—JUNE 1911. — ஸஞ்சிகை 6. | No. 6.


### பொருளடக்கம்.


**பத்திராதிபர் குறிப்புகள்** — பக்கம்

அரசனுக்கு முடி சூட்டு-பாங்கிகளில் உன் பணத்தைப் போட்டுவை-மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகுதல்-தங்க வெள்ளி ஜரிகைகள்-இலவை மரம்-நெல், நாற்றுகள்-தீண்டாதவர்கள்-கைப்பழக்கம் .. .. 283-288

**விசேஷ வியாஸங்கள்**

கம்போடியாப் பருத்தி ஸாகுபடி —வி. எஸ். நாராயணஸாமி அய்யர் 289

ஆகாயக் கப்பல்களும், கீல் பறவைகளும் —எம். வி. எஸ். அனந்தபத்மநாப ராவ் 293

ஸ்திரீகளுக்குற்ற சிறு தொழில்கள் —எஸ். சோமசுந்தர தேசிகர் .. 299

எலிகளைத் தொலைத்தல் —வெ. ப. திருமலையப்ப முதலியார் 301

ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவின் ஆரம்பமும் நோக்கமும் .. 303

**விசேஷத்திரட்டு**

இஞ்சிவற்றல் (முற்பா) செய்தல் .. 305

ஸென்ஸஸ் கதைகள் .. 306

இந்தியாவினால் இங்கிலாந்துக்கு என்ன பிரயோசனம் .. 307

குழந்தைகளுக்குக் கைத்தீனி கொடுப்பது 309

ப்ளேக் வியாதி .. .. 310

**பத்திரிகை ஆராய்ச்சி**

விவஸாயிக்கு ஒரு யோசனை .. 313

வரசுல்கம் .. .. 313

இந்திய சரித்திரத்திலிருந்து சில புத்திமதிகள் .. .. 315

**புஸ்தக ஆராய்ச்சி** .. .. 316

**சிறுவர் பகுதி** .. .. .. 317–318

**ஸ்திரீகள் பகுதி** .. .. 319–320

**பகுதிக் குறிப்புகள்**

விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. 321–330

**மாஸ வர்த்தமானம்** .. .. 331-333

**மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.** .. 334-336


### CONTENTS.


PAGE.

**Editorial Notes**

THE CORONATION OF THE KING-DEPOSIT YOUR MONEY IN BANKS-NOSE BLEEDING-GOLD AND SILVER YARNS-KAPOK-PADDY SEEDLINGS - THE DEPRESSED CLASSES-MANUAL TRAINING ... ... ...283-288

**Special Articles**

CULTIVATION OF CAMBODIA COTTON V. S. Narayanaswami Aiyar ... ... 289

DIRIGIBLES AND AEROPLANES M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T. ... 293

SMALL INDUSTRIES FOR WOMEN S. Somasundara Desikar ... .. ... 299

RAT EXTERMINATION V. P. Thirumaliappa Mudaliar ... ... 301

THE ORIGIN AND SCOPE OF THE REGISTRATION DEPARTMENT ... ... ... ... 303

**Selections**

PREPARATION OF GREEN GINGER ... ... 305

CENSUS STORIES ... ... ... 306

THE BENEFITS TO ENGLAND FROM INDIA ... 307

ARTIFICAL FEEDING OF CHILREN ... ... 309

PLAGUE ... ... ... 310

**Review of the Press**

A Suggestion to the Ryot ... ... ... 313

Varasulkam ... ... ... 313

Some Lessons from Indian History ... ... 315

**Reviews of Books** ... ... ... ... 316

**The Boys' Section** ... ... ... ...317-318

**The Ladies' Section** ... ... ... ...319-320

**Departmental Notes**

Agricultural Notes ... ... ... ... 321

Industrial Notes ... ... ... ... 3[illegible]

Educational Notes ... ... ... ... [illegible]

Scientific Notes ... ... ... [illegible]

Medical Notes ... ... ... [illegible]

Legal Notes ... ... ... [illegible]

Personal Notes ... ... ... [illegible]

Fun and Anecdote ... ... ... [illegible]

Curiosities ... ... ... [illegible]

**News of the Month** ... .. ... .. [illegible]

**Madras Market Reports** ... ... [illegible]

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

**The Coronation of the King.**

அரசனுக்கு முடிசூட்டு.—நாளது மாஸம் 22-ம் தேதியன்று இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் நம்முடைய சக்ரவர்த்தி அவர்களுடைய மகுடாபிஷேகம் வெகு விமரிசையோடும் குதூஹலத்தோடும் நடந்ததாக அங்கிருந்து வந்த தந்திகள் மூலமாய் அறிகிறோம். இந்த மகோற்ஸவத்திற்கு குடியேற்ற நாடுகளிலிருந்து மந்திரிகளும், அயல்தேசத்து ராஜாக்களும், இந்தியாவிலிருந்து சிலசிற்றரசர்களும், இன்னும் பல கனவான்கள், தனவான்கள், விற்பன்னர்கள் ஆகிய பிரமுகர்களும் வந்திருந்தார்களாம். இந்த உற்ஸவத்தைப் பார்ப்பதற்காக வந்த ஸாதாரண ஜனங்களின்எண்ணிக்கை இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. ஊர்வலம்போன ரோடுகளில் எள்ளைப்போட்டால்எள் விழாமல் அவ்வளவு ஜன நெருக்கம் இருந்ததாம். தெருக்களில் செய்திருந்த அலங்காரங்கள் விநோதம் விநோதமாக இருந்தனவாம். உலகத்திலுள்ள நாலில் ஒரு பங்கு நிலத்தையும் ஐந்திலொரு பங்கு ப்ரஜைகளையும் ஆளும் நம்முடைய ஜார்ஜ் அரசருக்கும் மேரி அரசிக்கும் உள்ள தசைக்குத் தகுந்தபடியே மகுடாபிஷேகம் நடந்தது. இவர்கள் இருவரும் நீதி நெறி தவறாது நெடு நாளும் அரசாள வேண்டுமென்பதே அவர்களுடைய அத்யந்த பக்தியுடைய ப்ரைஜைகளின் கோரிக்கையாம்.

**Deposit Your Money in Banks.**

பாங்கிகளில் உன் பணத்தைப்போட்டுவை.—ஒவ்வொருவனும் அவனுக்குள்ள மிகுதிப் பணத்தை பாங்கிகளிலேயே போட்டுவைக்க வேணும். ஏனென்றால்,

(1) ஒருவன் பணத்தைத் தன் ஸொந்த வீட்டில் வைத்துக்கொண்டிருந்தால், அதைக் கொண்டுபோகத் திருடன்வருவான். பணத்தை எடுக்கவந்த திருடன் உயிரையும் எடுத்து விடுவான்.

(2) வீட்டில் வைத்திருக்கிற பணத்துக்கு வட்டியில்லை. பாங்கிகளில் போட்டிருந்தால், போட்ட பணத்துக்கு 6 மாஸத்துக்கு ஒரு தடவை வட்டி கொடுப்பார்கள்.

(3) பாங்கிகளில் போட்ட பணம் வேண்டியபோது கிடைக்கும். அதனால் தொந்தரவும் குறைச்சல். எப்படி என்றால் பணம் வேண்டுமானால், உள்ளைத் திறந்து, பெட்டியைத் திறந்து, பையை அவிழ்த்து, எண்ணியெடுத்துக்கொடுத்துவிட்டு மறுபடியும் பணத்தைப் பத்திரப்படுத்தி உள்ளே வைக்கவேண்டும். பாங்கியில் பணம் போட்டிருந்தால், ஒரு செக்கை எழுதியனுப்பினால், பணம் கொடுக்க வேண்டியவர்களுக்கு பாங்கிக்காரர் கொடுத்து விடுவார்கள். இதே மாதிரியாக பாங்கியோடு பத்து வரவு வைத்துக்கொண்டிருக்கிறவனுக்குப் பணத்துக்கு பதிலாக செக்கு கிடைக்கும்பக்ஷத்தில், கிடைத்த செக்குக்கு, தானே போய் பணத்தை வசூல் செய்ய வேண்டியதில்லை. பாங்கிக்கு அனுப்பிவிட்டால், அவர்கள் ஒரு செலவுமில்லாமல் பணத்தை வசூல் செய்து வரவு வைத்துக்கொண்டு விடுவார்கள்.

(4) பாங்கிகளில் பணம் போட்டு வைப்பதற்கு யாதொரு செலவுமில்லை. இன்னும் ஆறு மாஸத்துக் கொருதடவை வட்டி வருகிறது. வீட்டில் பணத்தை வைத்துக்கொண்டிருப்பதனால், அதற்கு பந்தோபஸ்தான இடம் தேடி கட்டிக் காப்பது ரொம்ப கஷ்டம்.

(5) இந்தியாவில் ஜனங்களெல்லாரும் வீட்டில் பணத்தை வைத்துக்கொள்ளாமல்

பாங்கிகளில் போட்டு வைப்பார்களானால், செல்வம் விர்த்தியாகும். உதாரணமாக, தலைக்கு ஒரு ரூபாய் பாங்கியில் போடுவதாகவும் அதற்கு வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு மூன்று வீதம் வட்டி கொடுக்கப்படுவதாகவும் வைத்துக்கொண்டால், இந்தியா ஒவ்வொரு வருஷமும் ஒரு கோடி ரூபாய் அதிக செல்வமுள்ளதாகும்.

**Nose Bleeding.**

மூக்கிலிருந்து ரத்தம் ஒழுகுதல்.—ஒருவன் அவனுக்கு ப்ரியமுள்ள பழத்தையோ, அல்லது வேறு பதார்த்தத்தையோ கண்டுவிட்டால், அவனுடைய நாக்கில் ஜலம் ஊறிவிட்டதாகச் சொல்லுகிறான். தின்னவேண்டுமென்று மனவில் ப்ரியம் தோன்றிய மாத்திரத்தில் நாக்கில் ஜலம் ஊறிவிடுகிறது. அதுபோலவே மனவின் எண்ணத்தின்படியே உடம்பிலுள்ள ரத்த ஓட்டமும், என்று லாரென்ஸ் ஹாட்ஜெஸ் என்னும் ஒருவர் பலதடவை பரிசீலனை செய்து கண்டுபிடித்திருக்கிறார். மூக்கிலிருந்து ரத்தம் வந்தால், மாடிக்குப் படிவழியாக மூட்டையைத் தூக்கிக்கொண்டு வேகமாய் ஏறுவதாக எண்ணிக்கொள்ளச் சொல்லியோ, அல்லது வேறு ஏதோ கடுமையும் தேக சிரமமுமான வேலை செய்வதாக எண்ணிக்கொள்ளச் சொல்லியோ ரத்தம் வருவதை நிறுத்திவிட்டாராம். நாம் ஓடும்பொழுது நம்முடைய கால்களில் ரத்த ஓட்டம் அதிகப்படுகிறது. இது தெரிந்த விஷயம். ஓடுவதாக மனவில் எண்ணிக்கொண்டு விட்டால், வாஸ்தவத்தில் ஓடினால் எப்படி ரத்தம் அதிகரிக்கிறதோ, அதைப்போல் கால்களில் ரத்த ஓட்டம் அதிகரித்து விடுகிறது ஆகவே மூக்கில் ரத்த ஓட்டம் குறைந்து போய்விடுகிறது.

**Gold and Silver Yarns.**

தங்கவெள்ளி ஜரிகைகள்.—தங்கம், வெள்ளி இவைகளாலான ஜரிகை செய்வது ரொம்பவும் கஷ்டமான வேலை. ரொம்பகாலம் பிடிப்பதோடுகூட நல்ல கெட்டிக்கார வேலையாட்கள் வேண்டும். தவிர, இதற்கென்றே ஏற்பட்ட யந்திரங்களும் வேண்டும். இப்பொழுது ஜரிகை எப்படிச் செய்கிறார்களென்றால், நூலின்மேல் எந்த உலோக ஜரிகை வேண்டுமோ, அந்த உலோக இழைகளைச் சுற்றுகிறார்கள். இதனால் ஜரிகை ஒரே ஸமனாய் வழுவழுப்பாயிருப்பதில்லை. ரொம்ப சேதமும் நேரிடுகிறது. நூலைவிட்டு ஜரிகை பிரிந்தும்போகிறது. இந்தக் கஷ்டங்களெல்லாம் ஒருவாறு நீங்கிவிடும்போல் தோன்றுகிறது. ப்ரான்ஸ் தேசத்து ப்ரதான பட்டணமாகிய பாரிஸ் பட்டணத்தில் ஒரு புதியமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. முதலில் நூலை சில வஸ்துக்கள் கரைக்கப்பட்ட ஜலத்தில் நனைக்கிறார்கள். இப்படி நனைத்த நூலை எந்த உலோக ஜரிகை வேண்டுமோ, அந்த உலோகத்து ஸன்னமான பொடியில் தோய்த்து எடுக்கிறார்கள். நூலிலுள்ள ஈரத்தினால் உலோகப்பொடி நூலோடு ஒட்டிக்கொள்ளுகிறது. இப்படிப்பொடி ஒட்டிக்கொண்ட நூலை முதலில் கரைத்த ஜலத்தில் மறுபடியும் நனைக்கிறார்கள். இப்படிச்செய்வதால், உலோகப்பொடி நூலோடு கெட்டியாய் ஒட்டிக்கொள்வதோடு ஜரிகைக்கு ஒரு பளபளப்பு ஏற்பட்டு அது கறுத்துப் போகாமலும் செய்துவிடுகிறது. ஸதாரணமாய்பித்தளை ஜரிகை சிலகால மானதும் கறுத்து விடுகிறது. புதிய முறையில் இப்படிக் கறுத்துப் போவதில்லை. தவிர, ஜரிகை செய்வதற்கு, செலவும் முன்ஆனதில் மூன்றில் இரண்டு பங்குதான் ஆகிறது. எல்லாவற்றையும் உத்தேசிக்கும் போது ஜரிகை சேர்ந்த வேலைகளின் விலை சீக்

கிரத்தில் ரொம்ப இறங்குமென்று தோன்று கிறது.

**Kapok.**

இலவை மரம்:-இந்த மரத்தை அநேக ஊர்களிலும் கோவில்களிலும் பார்க்கலாம். இலவம் பஞ்சு தலையணைகளுக்கும், மெத்தைகளுக்கும் அடைப்பதற்கு மட்டும் இந்தியாவில் உபயோகப்படுகிறது. இப்பொழுது இந்த இலவம் பஞ்சுக்கு நல்ல தசை பிறந்திருக்கிறதுபோல் தோன்றுகிறது

இந்தப் பஞ்சை இதுவரையில் இதர தேசங்களில் அவ்வளவாக உபயோகித்ததில்லை. சில காலமாக ஹாலெண்ட், ஜெர்மனி, ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள், இவைகளில் மெத்தை, தலையணை, நாற்காலி முதலியவைகளுக்கு அடைக்க ஆரம்பித்து விட்டார்கள். இங்கிலாந்தில் இன்னும் அவ்வளவாகமேற்சொன்னவாறு உபயோகிக்க ஆரம்ம்பிக்கவில்லை ஆனல் இங்கே இலவம்பஞ்சை இன்னெரு புதிய விதமாக உபயோகப்படுத்தலா மென்று கண்டுபிடித்திருக்கிருர்கள். ஆறு, ஸமுத்திரம் முதலிய பெரும் வெள்ளங்களில் ஜனங்கள் மூழ்கிப் போகாமல் உபயோகிக்கும் தெப்பங்களுக்கு இதுவரையில் நெட்டி, மயிர் முதலியவைகளை உபயோகித்து வந்தார்கள். இப்பொழுது இலவம் பஞ்சை உபயோகிக்க ஆரம்பித்திருக்கிருர்கள். ஒரு ராத்தல் இலவம்பஞ்சு 30 அல்லது 35-ராத்தல் கனமுள்ள பளுவைத் தண்ணீரில் மிதத்தும். இதனுலும், நெட்டியைவிட மலிவானதாலும், இலவம் பஞ்சுக்கு ரொம்ப கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் தவிர மற்றதேசங்களில் பத்து வருஷத்துக்குமுன் இதைக் கேட்பா ரில்லை. இப்பொழுதோ இதில் வியாபாரம் பலத்துவிட்டது. ஐரோப்பாவில் ஹாலண்டு தேசத்தில் ராட்டர்டாம்என்னும் பட்டணத்தில்தான் இதில் கனத்த வியாபாரம். இண்டோ சைன, இந்தியா, பினங்கு, சிங்கப்பூர், மலேதீவுகள் முதலிய இடங்களில் இலவ மரங்க ளிருந்தபோதிலும் முதல்தர இலவம் பஞ்சு ஜாவா தீவிலிருந்துதான் ஏற்றுமதியாகிறது. இதற்கு விலையும் ஜாஸ்தி கிடைக்கிறது இந்திய இலவம் பஞ்சுக்கு நல்ல விலை கிடைக்காதது இலவங்காயை உடைத்துப் பஞ்சை அடித்து மூட்டை கட்டி அனுப்புவதில் ஸரியான கவன மில்லாமையால்தான் என்றுசிலர் சொல்லுகிருர்கள். இன்னும் சிலர் இந்தியாவின் இலவ மரத்தின் வாசிஎன்றும், இந்தியாவின் சீதோஷ்ணஸ்திதி என்றும் பலவாருகச் காரணம் சொல்லுகிருர்கள். இலவமரத்துப்பட்டையிலிருந்து மருந்துக்கு உபயோகமான ஒருவித பிசினி அகப்படுகிறது.மரத்தைத் தோல் பதனிடுவதில் உபயோகிக்கிருர்கள். ஸாதாரணப்பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைப்போல் ஒருஎண்ணெயும் இலவம் பருத்திக்கொட்டையிலிருந்து இறக்குகிருர்கள். 100-க்கு 28-வீதம்எண்ணெய் காண்கிறது. இந்தஎண்ணெயை ஹாலண்டில் சாப்பாட்டுக்கும்ஸோப்புசெய்வதற்கும் உபயோகிக்கிருர்கள். பிண்ணுக்கு மாடுகளுக்கு நல்ல தீனியாகிறது. மரம் அவ்வளவாகப் பிரயோஜனப்படுகிறதில்லை. பொம்மைகள் செய்ய உதவும். இந்த மரத்தைப் பயிர்செய்வதில் அதிக சிரமம் இல்லையாதலால், அதை வளர்க்கக்கூடிய இடங்களி லெல்லாம் வைத்து வளர்ப்பது லாபகரமா யிருக்கும். ப்ரான்ஸ், ஜெர்மனி குடியேற்ற நாடுகளிலும், ஆப்ரிக்கா, அமெரிக்கா, இந்தக் கண்டங்களிலும் இதில் ரொம்ப கவனம் செலுத்தி வருகிருர்கள். ஆப்ரிக்கா, அமெரிக்கா இவைகளிலிருந்து மாதிரி இலவம் பஞ்சு ஐரோப்பாவுக்கு ஸமீபத்தில் அனுப்பப்பட்டதாம். அந்தப் பஞ்சு ஜாவா

பஞ்சுக்குத் தாழ்ந்ததாக இல்லையாம். இந்த இரண்டு கண்டங்களிலும் இலவ மரம் நன்ருய் வளரக்கூடியதால், சீக்கிரத்தில் அங்கிருந்து இலவம் பஞ்சு ஏராளமாக ஏற்றுமதியாகு மென்று எண்ண வேண்டியதாயிருக்கின்றது. இந்தியர்களே! முந்துங்கள்!

**Paddy Seedlings.**

நெல் நாற்றுகள்.—சில ஸமயங்களில் நெல் நாற்றுகளை ஒரு ஊரில் வாங்கி வேறு ஊர்களுக்குக் கொண்டு போகும்படி நேரிடுகிறது. இப்படி ஊர் விட்டு ஊருக்குக் கொண்டு போகப்படும் நாற்றெல்லாம் பிழைத்துத் துளிர்க்க வேண்டுமானல், அவைகள் விஷயத்தில் கொஞ்சம் ஜாக்ரதை எடுத்துக்கொள்ளவெண்டும். இந்த விஷயமாக வடக்கே தர்பங்காவில் டிப்டிகலெக்டராகிய மிஸ்டர் ஏ. எஸ். பால்ட்வின் என்பவர் சில ஆராய்ச்சிகள் செய்திருக்கிருர். நாற்றைப் பறித்து ஒரு நாள் முழுவதும் வண்டியில் ஏற்றி வைத்திருந்தார். பிறகு இந்த நாற்றை ஒரு ரெயில் ட்ரக்கில் (கூட்ஸ் வண்டியில்) போட்டு மூன்றுநாள் கதவு சாத்தியிருந்தது. இந்த ட்ரக்கிலிருந்து எடுத்து மறுபடி கட்டை வண்டியில் ஏற்றி ஒருநாள் கிடந்தது. இப்படிப் பரீக்ஷித்துப்பார்த்து முக்காலே அரைக்கால் நாற்றுகள் பிழைத்து நடக்கூடியவைகளென்று மிஸ்டர் பால்ட்வின் சொல்லுகிருர்.

நாற்றுகளை ஒரு இடத்திலிருந்து இன்னெரு இடத்துக்குக் கொண்டு போவதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல உள. ரெயில்வே ட்ரக்கில் ஏற்றுவதற்கு முதல் நாள்தான் நாற்றைப் பறிக்கவேணும். அவைகளைப் பறித்து சிறு முடிச்சுகளாகக் கட்டி, நன்ருய் ஜலம் தெளித்து, பிறகு கட்டை வண்டியில் ஏற்ற வேண்டும். ஜலம் தெளிப்ப தென்ருல், தண்ணீரை வாரி ஊற்றி, வேரைச் சுற்றிலுமுள்ள மண் கரைந்து போய்விடும்படிச் செய்வதல்ல. வேரில் மண் ஒட்டிக்கொண்டிருந்தால், நாற்று இன்னும் அதிக நாள் கூட நிற்கும்.

கட்டை வண்டியிலிருந்து ரெயில் ட்ரக்கில் ஏற்றும்பொழுது மறுபடியும் கொஞ்சம் ஜலம் தெளிக்க வேண்டும். ஜலத்தை அதிகமாக ஊற்றிவிட்டால், ட்ரக்கில் புழுக்கங் கண்டு நாற்று உலர்ந்து போய்விடும். ஆகையால் ஜலம் சீராய்த் தெளிப்பதற்குத் தோட்டங்களுக்குத் தண்ணீர் தெளிக்க உபயோகிக்கும் பூச்செடித் தகரங்களை உபயோகிப்பது நலம்.

இன்னெரு விஷயம். நாற்று பக்வமாயிருப்பது அதை ட்ரக்கில் அடுக்கும் விதத்தையும் பொறுத்திருக்கிறது. இது விஷயமாகச் செய்த சோதனையில் இரண்டு மூன்று தட்டு ஒன்றுக்கு மேல் ஒன்ருய் வைத்திருந்தபோதிலும், படுக்கையாய் வைத்திருந்த நாற்றைவிட செங்குத்தாய், அதாவது, வேர் கீழே இருக்கும்படி வைத்த நாற்றே காயாமலும் ஜாஸ்தி நாள் நிற்கக்கூடியதாயு மிருந்தது. செங்குத்தாய் வைத்தால், நாற்றுப் பறித்த ஐந்தாம் நாள் ஆருவது நாள்கூட கெட்டுப்போய்விடாமல் நடக்கூடியதாகவே இருக்கும்.

ட்ரக்குகளில் செங்குத்தாய் அடுக்குவதற்கு என்ன செய்யவேண்டு மென்ருல், 12 அல்லது 15 சிறு முடிச்சுகளை ஒன்ருய்ச்சேர்த்துக் கட்ட வேண்டும். சிறு முடிச்சுகளை இறுக்கிக் கட்டிவிடாமல் முடிச்சைத் தளரவே விடவேண்டும். இப்படிச்செய்த பெரிய முடிச்சைக் கயிற்றைப் போட்டுக் கட்டாமல் அந்த நாற்றையே ஆக்கையாகப் போட்டுக் கட்டவேண்டும். நாற்றை ரெயில்வே ட்ரக்கைவிட்டு கீழே இறக்கினதும் கொஞ்சம் ஜலம் தெளித்துப் பிறகு கட்டை வண்டியில் ஏற்றவேண்டும்.

**The Depressed Classes.**

தீண்டாதவர்கள்:—கொஞ்ச காலமாக பஞ்சமர் முதலிய தீண்டாதவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்தா லொழிய நாம் கவர்ன்மெண்டாரிடத்தில்அரசாட்சியில் ஸ்வதந்திரங்கள் பெறவும், தேசம் முன்னுக்கு வரவும் முடியாதென்று இந்தியாவில் படித்தவர்கள், ப்ரமுகர்கள் முதலிய எல்லா புத்திசாலிகளும் பலவிதமாக முயற்சி செய்து வருகிறார்கள். இவைகளில் முக்கியமானவைகள் என்னவென்றால், தீண்டாதவர்களுக்குப் படிப்புச்சொல்லிக் கொடுத்தல், அவர்கள் குடிக்காமல் பார்த்துக் கொள்ளுதல், அவர்களுக்குகிணறு முதலிய ஜல வஸதிகள் செய்துகொடுத்தல், நிலம் வாங்க ஸௌகரியங்கள் செய்தல், இன்னும்பொதுவாக அவர்களை ஜன ஸமூகத்தில் மரியாதையாகநடத்தல் முதலியவையாம்.

போன மே மாஸத்தில் நடந்த சென்னை ப்ரொவின்ஷியல் கான்பரென்ஸில் அக்ராஸனாதிபதியா யிருந்த ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் இன்னொரு உபாயமும் சொன்னார். இப்போது தீண்டாதவர்கள் கிராமங்களில் ஒதுப்புறமாய் ஒரு பக்கத்தில் வாஸ யோக்கிய மில்லாத இடங்களில் குடிசைகளில் குடியிருந்து வருகிறார்கள். இந்தக் குடிசை போட்டிருக்கும் நிலம் தீண்டாதவர்களுக்கு ஸொந்தமல்ல. அந்த நிலங்களுக்கு ஸொந்தக்காரர்கள் வேறு. குடியிருக்கும் தீண்டாதவர்களுக்குஒரு தகவலுமில்லாமல்கீழ்நிலத்தை ஸொந்தக்காரர்கள் அவர்கள் இஷ்டம்போல் விற்று விடுகிறார்கள். இப்படிப் புதிதாய் நிலம் வாங்கினவர்கள் இஷ்டப்பட்டால், தீண்டாதவனை வைத்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால், அவனைக் குடிசையை விட்டுத் துரத்தி விடலாம். இதனால் தீண்டாதவனுக்கு ஒரு வித பாத்தியதையு மில்லாமல் அவன் பிறருக்கு உள்ளடங்கியே இருக்க வேண்டியிருக்கிறது. நிலம் தனக்கு ஸொந்த மில்லாததால், வீட்டைப்பணம்செலவுசெய்து கட்டவுங் கூடவில்லை. குடியிருக்கும் நிலங்கள் தீர்வையில்லாத கிராமநத்தங்கள். இருந்தபோதிலும் தீர்வை யில்லாததனால் உண்டாகும் பலனைக் குடியிருக்கும் தீண்டாதவர்கள் அடைவதில்லை. ஆகையால், இவர்கள் குடியிருக்கும் மனைக்கட்டுகளை வாங்க ஸௌகரியங்கள்செய்து கொடுக்கவேணும். இப்படிச் செய்துகொடுக்க முடியாமற்போனால், அவர்கள் க்ரமமான நில வாடகை கொடுக்கிற வரையில் அல்லது அதற்கு பதிலாக வேலை செய்கிறவரையில் நிலத்தின் ஸொந்தக்காரன் அவர்களை வீட்டை விட்டுத் துரத்த முடியாமல் அவர்கள் குடியிருந்து வரும்படி செய்யவேண்டு மென்று மிஸ்டர் ராமானுஜாசாரியார் சொன்னார். ராமானுஜாசாரியார் கருத்து இன்ன தென்று தெளிவாகத் தெரியவில்லை. அவர் சொல்லுகிறபடி யார் செய்யவேணும்? நிலக்காரர்களைச் செய்யும்படி கேட்டுக்கொண்டா ரென்றும், அல்லது கவர்ன்மெண்டாரைச் செய்யவேணு மென்று கேட்டுக் கொண்டாரென்றும் வ்யக்த்தமாக விளங்க வில்லை.

தீண்டாத பறையர் பள்ளர்கள் ஸ்திதி பரிதபிக்கத்தக்கதுதான். பொதுவாய் உயர்ந்த ஜாதியார், முக்கியமாய் ப்ராமணர்கள், கீழ் ஜாதியார்களை நிலம்வாங்கவொட்டாமல் இடைஞ்சல் செய்வதும் வாஸ்தவந்தான். ஆனால் இந்த இடைஞ்சல்களையெல்லாம் மீறி கீழ்ஜாதியார்கள் நிலங்களும் வீடுகளும் வாங்கியே வருகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் சோழபுரம் என்னும் க்ராமத்தில் ப்ராமணர்கள் குடியிருந்த ஒரு அக்ரஹாரம் முழுமையும் துலுக்கர்கள் வாங்கிக் குடியிருந்துவருகிறார்கள். அதே ஜில்லாவில் ஸ்வாமிம க்கு அடுத்த கங்கா

தாபுரத்தில் ஒரு பறையன் நிலம் வாங்கி மிராசு ஆள்கிறு னென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். சூத்திரக் குடிகள் அநேக க்ராமங்களில் சில காலமாக நிலங்கள் வாங்கி மிராசு ஆண்டு வருகிறது ஸர்வ ஸாதாரணமாகிவிட்டது. ஆகையால், 'துட்டுள்ள' பறையனுக்கும் பள்ளனுக்கும் நிலம் வாங்குவது சிரமமென்றாலும் அஸாத்தியமொன்று மில்லை. தற்காலத்தில் பணமிருந்தால், கீழ் ஜாதியாரெல்லாம் உயர் ஜாதியார்களாக ஆகிவிடுவார்கள். பணமில்லாதவனுக்குப் பணங் கிடைக்க இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று உழைத்து ஸம்பாதிக்கவேண்டும். இதுதான் ஸரியானவழி. இதற்காக உலகத்தில் ஒவ்வொரு நாகரிகமுள்ளதேசத்திலும் கவர்மெண்டுகளும் ஜனஸமூகங்களும், ஸுகாதார அபிவிருத்தி, சட்டங்கள் மூலமாய் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை நீக்குதல், முதலிய ஸௌகரியங்களைச் செய்து ஜனங்கள் பொருள்ஸம்பாதித்துஸுகப்படும்படி செய்துவருகிறார்கள். இப்படி உழைத்துப் பணம் ஸம்பாதிப்பது அவனவனுடைய திறமையைப் பொறுத்திருப்பதால், கையாலாகாத ஏழைகளுக்கு இந்தவழி ஸரிப்படுவதில்லை. அதற்காக அவர்கள் என்ன செய்கிறார்களென்றால், கவர்ன்மெண்டார் ஸொத்துள்ளவர்களிடத்திலிருந்து ஒரு பாகத்தை சட்டபூர்வமாய்ப் பிடுங்கி அதை அவர்களைச் சார்ந்த ஏழைகளுக்கும் வேலையாட்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்று மன்றாடி வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களில் இருக்கிறார்கள். இவர்களுக்கு 'ஸோஷயலிஸ்ட்ஸ்' என்று பெயர்.

**Manual Training.**

கைப் பழக்கம்.—குழந்தைகள் சிறுவர்களாகப் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே அவர்கள் பெரியவர்களாகும்பொழுது என்ன வேலை செய்து ஜீவனம் செய்வார்களென்று சொல்லுவது அஸாத்தியம். அவர்கள் பிற்காலத்தில் ஜீவனம் செய்யக்கூடிய வழிகளை சிறுவயதிலேயே சொல்லிக்கொடுக்க முடியாமல் போனாலும், எந்தத் தொழிலைச் செய்ய நேர்ந்தாலும் அதைச் செய்யக்கூடிய திறமையைத் தரும்படியான பழக்கங்களைச் செய்விப்பது நலமாகும். இப்படிப்பட்ட பழக்கங்களில் கைப்பழக்கம் ஒன்று. இதற்கு இங்கிலீஷில் 'மான்யுயல் ட்ரெயினிங்' என்று சொல்லுவார்கள். 'மான்யுயல் ட்ரெயினிங்' என்றால், குறித்ததொழிலைச் செய்வதற்கான பழக்கமல்ல. பொதுவாக எந்த ஆயுதமானாலும் அதை எடுத்து உபயோகிப்பது, மரம் முதலிய ஸாமான்களை வேண்டிய வேலைகளுக்கு உபயோகிப்பது, வேண்டிய ஸாமான்களுக்கு முதலில் டிஸைன், அதாவது படம் எழுதிக் காண்பிப்பது, முதலியவைகளைச் சொல்லிக்கொடுப்பதே 'மான்யுயல் ட்ரெயினிங்'காகும். முதலில் அதிகச் சிக்கலில்லாத வேலைகளையும் ஆயுதங்களையும் ஆரம்பித்தெடுத்து பிறகு போகப் போக சிக்கலான வேலைகளை நுட்பமான ஆயுதங்களைக்கொண்டு செய்யவேண்டும். சிறுவர்கள் படிக்கும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயம் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தற்காலம் ஸ்கூல்களில் சொல்லிக் கொடுக்கப்படும் தச்சுவேலை, சித்திரம் வரைதல், ட்ராயிங் எழுதுதல் முதலியவைகள் மேற்கண்ட நோக்கத்துடனேதான் செய்யப்படுகின்றன.

## CULTIVATION OF CAMBODIA COTTON.

BY

V. S. NARAYANASWAMI AIYAR.

# கம்போடியாப் பருத்தி ஸாகுபடி.*

இந்தியாவில் ஸாகுபடியாகிற பயிர்களில் முக்கியமானது பருத்தி. உணவும், உடையும் மனிதர்களுக்கு இல்லாமல் தீராது. வெகு நாளாக, இந்தியாவிலும் அமெரிக்காவிலும் மட்டுமே, பருத்தி ஸாகுபடி செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய மனு தர்ம சாஸ்திரங்களை யெடுத்துப் பார்ப்போமாகில், பருத்தியானது அந்தக் காலம் முதற்கொண்டே ஸாகுபடியாய்க் கொண்டிருக்கிற தென்று தெரியவருகிறது. ஐரோப்பா முதலான இடங்களுக்கு இவ்விந்தியாவிலிருந்துதான் பருத்தி ஸாகுபடி பரவியிருக்கிற தென்றும் தெரியவருகிறது, பருத்தி ஸாகுபடி வருஷா வருஷம் அதிகப்படவே, பருத்தியைப் பஞ்சாகவும் கொட்டையாகவும் பிரிக்கிற யந்திரங்களும், அதை நூல் நூற்றுத் துணிகள் நெய்யும் யந்திரங்களும் விருத்தியாயின. பழைய காலத்தில் துப்பட்டிகள்போல் கெட்டியான துணிகளை விசேஷமாய் உடுத்திக்கொண்டு வந்தார்கள். நாகரிகம் அதிகப்படவே பழைய கெட்டித் துணிக ளெல்லாம் போய் உயர்ந்த மல்லுகளுக்குக் கிராக்கி யுண்டாயிற்று. உயர்ந்த ஸன்ன இழைகளுடனுள்ள வஸ்திரங்கள் செய்ய நல்ல யந்திரங்களும், நல்ல இழைகளும், அதனால் நீளமானவும், ஸன்னமான நூல் தரக்கூடியனவுமான பஞ்சுகளும்வேண்டியிருந்தன. அமெரிக்கா கண்டத்தில் பருத்தி ஸாகுபடி விஷயமாக அநேக சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். இந்தியாவிலும், முன் காலங்களில் முதல்தரமான பஞ்சு ஏற்றுமதி செய்துகொண்டிருந்தார்கள்.

உதாரணமாக, டக்காவில் நல்ல மஸ்லின் செய்கிறார்க ளென்று எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

சிலாக்கியமாயும் ஸன்னமாயுமுள்ள இழை நூல்களைத் தரும்படியான பருத்தியைப் பயிரிடவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் பல பிரயத்தனங்கள் செய்தார்கள். அநேக பருத்திகளைப் பல இடங்களில் பயிரிடச் செய்தார்கள். அவைகளில் ஒன்றும் நம்முடைய தேசத்து பூமிகளில் விருத்தியாகவில்லை.

இப்படிப் பல பரீக்ஷைகளும் பிரயத்தனங்களும் செய்து பார்த்ததில் நாட்டுப் பருத்திகளையே கவனத்துடன் ஸாகுபடி செய்வதும், நல்ல திடமான பருத்திச் செடிகளிலிருந்தும் நோய் நொடி யில்லாத காய்களிலிருந்தும் விதையைப் பொறுக்கி யெடுப்பதுமே அதிக சிரேஷ்ட மென்று கண்டார்கள். இது விஷயமாக விவஸாய டிபார்ட்மெண்டார் ஏற்படுத்தி யிருக்கிற ஸர்க்காரப் பண்ணைகளில் விதையை வருஷா வருஷம் பொறுக்கி யெடுத்து, பருத்தி அதிகமாக விளையும்படியாகவும், பருத்திக் காய்கள் உண்டாகும்படியாகவும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, திருநெல்வேலியில் கருங்கண்ணிப் பருத்தியையும், கோயம்புத்தூர் விவஸாயப் பண்ணையில் உப்பம் பருத்தியையும், பல்லாரி, நந்தியால் பண்ணைகளில் அங்கே பயிரிடுகிற பருத்தி தினுசுகளையும் விருத்தி செய்துவருகிறார்கள். ஆனால் இப்படிச்செய்து விருத்தி செய்தால், கால தாமதம் செல்லும். ஆகையால், சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக அமெரிக்காவிலிருந்து இரண்டு மூன்று தினுசுப்பருத்திகளைவரவழைத்திருக்கிறார்கள். அதாவது டார்வார் அமெரிக்கன் என்னும்பருத்தியை வடதேசங்களிலும், கம்போடியாப்பருத்

* (கோயம்புத்தூர் ஜில்லா திருப்பூர்க் கால்நடைக் காக்ஷியில் செய்த பிரஸங்கம்)

தியைத் தென்பாகத்திலும் கொண்டுவந்து விருத்தி செய்திருக்கிறார்கள். இரண்டாவது சொல்லப்பட்ட கம்போடியாப்பருத்தியானது மற்ற பருத்திகளைப் போலில்லாமல் நம்முடைய நாட்டில் நன்றாய்விளையக்கூடியதாயிருக்கிறது. இது முதலில் கொச்சின் சீனாவிலிருந்து புதுச்சேரிக்குக் கொண்டுவரப்பட்டு அவ்விடமிருந்து மற்ற ஊர்களுக்குப் பரவிற்று. அமெரிக்காதேசத்து இதர பருத்தியைப்போல மாசூலை அனுபவிக்க இரண்டு மூன்று வருஷம் வேண்டியதில்லை. நாட்டுப் பருத்தியைப் போல் 6 மாத காலத்திலேயே பலன்பூராவையும் எடுத்துவிடலாம். உப்பம் பருத்தியை விதைக்கும் காலத்திலேயே இதையும் விதைக்கலாம். பருத்தி வெடிக்கிற காலமும் உப்பம் பருத்திவெடிக்கும்காலமேதான். ஸாகுபடியும் சற்றேறக்குறைய அதைப் போலவே. இதற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தோட்டக்கால் பூமிகளில் நன்றாய்ப் பயிராகிறது. பஞ்சு நீளமாயும் உறுதியும் ஸன்னமும் உள்ள நூல் செய்யக்கூடியதாயுமிருக்கிறது. புஞ்சைநிலங்களில் (இறங் காட்டில்) நல்ல மழைகள் பெய்யும் வருஷங்களில் நாட்டுப் பருத்தியைவிட அதிகமாசூல்கொடுக்கும். 1909-ம்வருஷத்தில் திருச்சிராப்பள்ளி ஜில்லா பிரம்பலூர் தாலூக்காவில் விவஸாயடிபார்ட்டுமெண்டார்சோதனைக்காகச் சிலகுடித்தனக்காரர்களுக்கு ஸாகுபடி செய்ய இவ்விதையைக் கொடுத்து அவர்கள் பயிரிட்டார்கள். அந்தவருஷத்தில்கால அனுகூலத்தால் கால் மடங்கு அதிகம் விளைந்த போதிலும், நிச்சயமாய் ஜாஸ்தியாகவேவிளையுமென்று சொல்லுவதற்கில்லை. ஆகையால், நாட்டுப் பருத்தியைப்போல் மழைத்தட்டான காலங்களில் கிணற்றிறவையில்லாத புன்செய் பூமிகளில் இந்த சென்னை ராஜதானியில் பயிரிடுவதற்கு ஏற்றதாக இல்லை

கூடலூர் ஜில்லா, பாலூர்விவஸாயப்பண்ணையில் விசேஷமாக மழை காலங்களில் வரகுப் பயிரை ஸாகுபடி செய்து அது அறுவடையானதும் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் நிலக்கடலையைத் தோட்ட நிலங்களில் போடுவது வழக்கம். அல்லது டிஸம்பர் மாதத்தில் ராகிப் பயிர் செய்து அந்தப்பயிரில் களைக்கொத்தால் கடலையைப் போடுவதுண்டு. மழை காலத்தில் விதைக்கிற வரகுப் பயிருக்குப் பதிலாக வேறு அதிக லாபம் தரக்கூடிய பயிர்கள் என்னவென்று பார்த்தார்கள். இப்படி இந்தப்பயிர்களிலிருந்து தகுந்த லாபம் வருகிறதா யிருந்தால், விசேஷமாகவும் கொஞ்சகாலமாக நன்றாய் விளையாததுமான அந்தஜில்லாவில் பயிரிடுகிற நிலக்கடலைக்குப் பதிலாக இந்தப் பயிர்களில் ஒன்றை ஸாகுபடிசெய்யலாமென்றுசோதனை செய்து கொண்டிருந்தார்கள். அப்படிச் சோதனை செய்த பயிர்களில் ஒன்று கம்போடியாப் பருத்தி. நல்ல எருவிட்ட தோட்டக்கால் பூமியில் அரை ஏக்கரில் விதைத்தார்கள். ஏக்கரா 1-க்கு 1,500 பவுன், அதாவது 6 பொதி பருத்திகண்டது. இப்போது இருக்கிறவிலைக்கு ரூ. 200-க்கு மேலாகிறது. சாகுபடிச் செலவு ரூ. 50 போக ரூ. 150 லாபம் வந்திருக்கிறது. அதே பண்ணையில் பாய்ச்ச லில்லாத புன்செயில் 2 பொதி கிடைத்தது. இப்போது இக்கம்போடியாப் பருத்தியை திருநெல்வேலி ஜில்லாவில் ராகி, தினை, மிளகாய் முதலான தோட்டக்கால் பயிர்களுக்குப்பதிலாக ஸாகுபடி செய்து வருகிறார்கள். இப்போது மதுரை ஜில்லாவிற்கும் பரவிவிட்டது. இதனால் மேற்கூறிய தோட்டக்கால் பயிர்கள் குறைந்துவிட்டன. இவ்வருஷத்தில் இவ்விராஜதானியில் 3,30,00 பேல் பஞ்சுக்கு மேல் 52,800 பொதிப் பஞ்சு விளையுமென்று மதித்திருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் மற்ற ஜில்லாக்களைவிட கிணற்றிறவையில் தோட்டக்கால் பயிர்கள் விசேஷமாய் செய்து வருகிறார்கள். ஆகையால், இந்த ஜில்லாவிலும் இப்பருத்தியை ஸாகுபடிசெய்துவிருத்திக்குக்கொண்டு வரவேண்டியது ரொம்ப அவசியம். இந்த ஜில்லாவிலும் கோடை காலத்துச் சோளமும், கோதுமையும், ராகியும், சில ஸமயங்களில் புகையிலையும், மிளகாயும் போடுவது வழக்கம். நான் பார்த்த இடங்களி லெல்லாம், மிளகாயைப் பூச்சிகள் முதலியவைகள் அது அடித்து விளையாமல் போகிறது. புகையிலையின் விலை முன்னிருந்தது போலில்லை. ஆகையால், குடித்தனக்காரர்களுக்கு நஷ்டம் உண்டாகிறது. இதைத் தவிர அதைப் பதம் பண்ணுவதும் சிரமம்.

கோதுமை ஸாகுபடியைப்பற்றிக் கவனிக்கும்பொழுது ஏழு தண்ணீர் பாய்ச்சவேண்டியதா யிருக்கிறது. இது போனாலும் போகட்டும். விளைவைப் பார்த்தாலோ செலவு போக ஏக்கரா 1-க்கு ரூ. 10 அல்லது 15-க்கு மேல் கிடைக்கிறதில்லை. இதுவும் தவிர, தான்யப் பயிர்களையே ஒன்றின்பின் ஒன்றாக அதே பூமியில் ஸாகுபடி செய்வதால், அப்பயிர்களுக்கு வேண்டிய ஸத்துக் குறைந்துகொண்டு வருகிறது. மேற்சொல்லிய மிளகாய், கோதுமை, புகையிலைப் பயிர்களுக்குப் பதிலாக கம்போடியாப் பருத்தியை ஸாகுபடி செய்வது அதிக சிரேஷ்டம். ஏனென்றால், பருத்தியின் வேர்கள் ஆழமாகப் பரவி, பூமிக்கு அடியில் இருக்கும் ஸத்துக்களை யெல்லாம் வீண்போகாமல் உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றன. இதையும் தவிர, தானியப் பயிருக்கு வேண்டியது போல இந்தப் பருத்திக்கு அவ்வளவு தண்ணீர் வேண்டியதில்லை. ஆகையால், தண்ணீர் இறைப்பதற்கு உபயோகிக்கும் மாடுகளை இதர வேலைகளுக்கு உபயோகப்படுத்த முடியும். இதுவும் தவிர, அதிக விஸ்தீரணத்தில் பருத்தி ஸாகுபடி செய்யவும் முடியும்.

கோயம்புத்தூருக்கடுத்த பூனமேடு என்னும் கிராமத்தில் இந்த வருஷம் தோட்டக்கால் பூமியில் இப்பருத்தியைப் பயிரிட்டிருக்கிறார்கள். அந்த பூமியானது கொஞ்சம் களராயிருந்தபோதிலும் பயிர் நன்றாயிருந்தது. இரண்டே தண்ணீர்தான் பாய்ச்சினார்கள். விளைவு இது வரையில் 4 பொதி கிடைத்திருக்கிறது. இப்பொழுதும் அந்தப் பயிரைப் போய் பார்க்கலாம். இன்னும் சில கிராமங்களிலுங்கூடப் பயிரிடுகிறார்கள். இப்பருத்திக்கு இன்னும் ஒன்றிரண்டு தண்ணீர் இறைத்திருந்தால், இதிலும் அதிகம் விளைந்திருக்கும்.

### ஸாகுபடி செய்யும் விதம்.

இப்பருத்தி ஸாகுபடி ஏறக்குறைய நாட்டுப் பருத்தி ஸாகுபடிபோல்தான். நல்ல எரு விட்டவும் தண்ணீர் சுலபமாய் வடியக்கூடியவுமான பூமிகளிலும் நன்றாய்ப் பயிராகும். நாட்டுப் பருத்தி விதைக்கும் காலத்திலேயே இந்த விதையையும்கையால் விதைத்து விதையை மண்ணில் மறைக்க, நாட்டுக் கலப்பையைக் கொண்டு உழுதுவிடலாம். பருத்தியே பயிர் செய்யாத ஊர்களில் அக்டோபர் மாதத்தில், கனமாய்ப்பெய்யும் மழை நின்றவுடன், இதை விதைக்க வேண்டியது. 10 பவுன் விதை, அதாவது 3 வீசை விதை போதுமானது. விதைத்த பிறகு மற்ற தோட்டக்கால் பயிர்களுக்குச் செய்வது போலவே தண்ணீர் பாய்ச்சப் பாத்தி பிடிக்கவேண்டும். அல்லது லயனாக விதைக்கவேண்டு மென்றால், நிலக்கடலை விதைப்பதுபோல நாட்டுக் கலப்பையால் உழும்படைசாலில் விதையைப்போட்டு, பின்னால் இரண்டு மூன்று கலப்பைகளை விட்டு விதையை மூடலாம். இப்பருத்தி

படர்ந்தாற்போல் வளர்வதால், கை விதை விதைத்தாலுங்கூட செடிகளை அடர்த்தியாய் விடாமல் ஒரு செடிக்கும் மற்றச் செடிக்கும் இரு புறத்திலும் இரண்டு முதல் மூன்றடி வரையில் காலியிடம் விட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், செடிகளில் பருத்த காய்கள் உண்டாவதால் செடிகள் தாங்காது. அதனுல் செடிகள் கீழே சாய்ந்து காய்கள் மண்ணில் விழுந்து கெட்டுப்போகும்.

பாலூர் விவ்ஸாயப் பண்ணையில் 1909-ம் வருஷத்தில் இந்தப் பருத்தியை $1\frac{1}{2}$ அடியுள்ள சாலில் போட்டார்கள். செடிகள் நன்ருய் வளர்ந்ததும் ஒன்றை விட்டு ஒன்று சால்களிலுள்ள பயிர்களை யெல்லாம் பிடுங்கிவிட்டார்கள். அப்படிச் செய்ததால் நல்ல மாசூலைக் கொடுத்தது.

இதற்கு இரண்டு களை எடுக்க வேண்டும். முதல்தரம் கைக்கொத்தாலும், இரண்டாந்தரம் மண்வெட்டிகொண்டும் கொத்த வேண்டும். செடிகள் வாடினுல்தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பருத்தி காய் வெடிக்க ஆரம்பித்தவுடன் தண்ணீர் பாய்ச்சக் கூடாது. கால் பருத்தியெடுத்து முடிந்தவுடன், கார்ப்பருத்தி உண்டாகும்பொருட்டு ஒரு தண்ணீர் பாய்ச்சலாம். காய்கள் பருமனுக யிருக்கிறதால், ஒரு பெண்பிள்ளை நாட்டுப் பருத்தி யெடுக்கிறதைப் போல மூன்று மடங்கு பருத்தி இந்தச் செடிகளிலிருந்து ஒரு நாளைக்கு எடுக்க முடியும். ஆகையால், கூலியும் குறைவாக இருக்கிறது. ஒரு பெண்பிள்ளை ஒரு நாளைக்கு 4 மணுப் (100 பவுன்) பருத்தி எடுக்க முடியும்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களால் இப்பருத்தி ஸாகுபடியானது ரொம்பவும் ஸாமான்னியக் குடித்தனக்காரர்களுக்குக்கூட யாதொருசிரமமு மில்லை என்று ஏற்படுகிறது. பஞ்சும் நல்ல வெளுப்பு நிறமுள்ளதாயும், அதிலிருந்து நூற்கப்படும் நூல் பலமாகவும் ஸன்னமாகவும் இருக்கிறது.

நாட்டுப் பருத்தியைவிட ஒரு பொதிக்கு ரூ. 5 முதல் ரூ. 7 வரையில் அதிக விலையும் கிடைக்கும். 100 பவுன் பருத்தியைப் பருத்தி அரைக்கும் ராட்னத்தில்கொடுத்தால், 33 பவுன் பஞ்சு, அதாவது 3-ல் ஒரு பாகம் பஞ்சு கிடைக்கிறது. நாட்டுப் பருத்தியை அரைத்தால், நான்கில் ஒரு பாகந்தான் பஞ்சு கிடைக்கும். ஆகையால், எல்லா விஷயத்தையும் உத்தேசித்து இதை ஸாகுபடி செய்வது சிலாக்கிய மென்று ஏற்படுகிறது.

ஸாகுபடியின் செலவு விவரம்.

| | ரூ. அ பை. |
|---|---|
| உழவு 4 தரம் ரூ. 1-8-0 வீதம் | 6—0—0 |
| 10 வண்டி எரு ... | 10—0—0 |
| விதையும் விதைக்கும் கூலியும் | 2—0—0 |
| முதல் களை ... ... | 1—4—0 |
| மண்வெட்டி களை ... | 2—8—0 |
| தண்ணீர் 2 ... ... | 10—0—0 |
| பார்வையும் சில்லரைச் செலவுகளும் | 6—4—0 |
| கிஸ்தி ... ... | 2—0—0 |
| ஆக மொத்தம் | 40—0—0 |
| பருத்தி 4, பொதி ரூ. 35 வீதம் | 140-0—0 |
| லாபம் ரூ. | 100-0—0 |

வி. எஸ். நாராயணஸாமி அய்யர்.

# DIRIGIBLES AND AEROPLANES.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M. A., L. T

# ஆகாயக் கப்பல்களும் கீல் பறவைகளும்.

ஆகாயத்தைவிட லேசான வாயுக்கள் நிறைந்த பெலூன் கூண்டில் ஏறிச் சென்று ஆகாய மண்டலத்தில் உலாவி பாரச்சூட் என்னும் குடையின் உதவியால் அபாயமின்றி கீழே இறங்கலாம் என்று மார்ச் மாதத்திய ஸஞ்சிகையில் விவரித்தோம். இதை மான்ட்கோல்பியர் என்னும் குலப் பெயரையுடைய இரண்டு ஸகோதரர்கள் 1783-ம் வருஷத்தில் நிரூபித்துக் காட்டியது, முதல் அநேகர் வேடிக்கைக்காக பெலூனில் ஏறி இறங்கி வந்தார்கள். வரவர பெலூனை வெவ்வேறு விஷயங்களுக்காக உபயோகிக்க எத்தனித்தார்கள். அநேக ஸயன்டிஸ்ட்ஸ் தத்வ விசாரணை சாஸ்திரிகள் இதன் உதவியால் ஏறிச் சென்று ஆகாய மண்டலத்தின் மேல்தட்டுகளில் தென்படும் தோற்றங்களையும் மாறுதல்களையும் பற்றி முதல் முதல் எழுதினார்கள். ஒரு பெரிய பெலூனில் க்லெஷர் என்னும் ஸயன்டிஸ்ட் ஸுமார் 30,000 அடி உயரம் வரையில் சென்று, தான் அநுபவித்த சீதோஷ்ண வித்யாஸங்களைப்பற்றி எழுதியிருக்கிறார். உயரம் அதிகரிக்க அதிகரிக்க டெம்பரேச்சர் குறைந்து கொண்டே இருந்ததாம். 29,000 அடி உயரத்தில் ஜலம் தானே குளிர்ந்து இறுகக்கூடிய டெம்பரேசரைவிட 16 டிக்ரீ குறைவாய் இருந்ததாம். ஆகாய வாயுவின் அழுத்தம் மிகவும் மெலிந்து மூச்சுவிட அதிகக் கஷ்டப்பட்டாராம். ஆகாயம் அதிக நீல நிறத்துடன் காணப்பட்டதாம். நிஸ்சப்தமாக இருந்ததாம். ஆகாயத்தில் நீராவி அதிகமாய்க் குறைந்து வரண்டு இருந்ததால், அவர் கொண்டுபோன காகிதத்துண்டுகள் பதம்தப்பி, நெருப்பின் முன் வைத்தவைபோல் சுருங்கிப் போயினவாம்.

## பெலூனில் தோன்றிய குறைகள்.

நாளடைவில், வேடிக்கைக்காக உபயோகித்துக்கொண்டிருந்த பெலூனை உபயோகித்து சண்டை இலாகாதார் எதிரிகளின் கோட்டைகளிலும்போர்க்களங்களிலும் நடப்பவைகளைக் கொடி யசைத்தல் முதலான ஸமிக்ஞைகளால் தெரிந்துகொள்ள முயன்றார்கள். 100 வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சண்டையில் பெலூனுக்கு நீண்ட கயிறு கட்டிக் கீழே பிடித்துக்கொள்ள அதன்மேல் சென்றவர்கள் பார்த்தவைகளைத் தங்கள் நண்பர்களுக்குச் சொல்லி வந்ததாக சரித்திரங்களில் எழுதியிருக்கிறார்கள். 40 வருஷங்களுக்குமுன் ஐரோப்பாவில் நடந்த யுத்தங்களில் இம்மாதிரி பெலூன்களை அநேகமாய் உபயோகித்து வந்தார்கள். ப்ரான்ஸ் தேசத்தில் சண்டை நேரிட்ட காலத்தில், பாரிஸ் என்னும் முக்கிய பட்டணத்தை எதிரிகள் சூழ்ந்துகொண்டார்கள். அக்கோட்டையில் அடைபட்டவர்கள் காகிதங்களை எழுதி பெலூனுக்குக் கட்டிப் பறக்கவிட வெளிப்பிரதேசங்களிலுள்ள அவர்களுடைய நேசர்கள் அதைப் பிடித்து ஸமாசாரம் தெரிந்துகொண்டார்கள், ஆனால், இதேமாதிரி வெளியிலிருந்து உள்ளேயிருந்தவர்களுக்கு ஸமாசாரம் அனுப்ப முடியாமற் போயிற்று. காற்றடித்த வழியே தானே பெலூன் செல்லும். இக்கஷ்டத்தை அநுபவித்தது முதல் ப்ரான்ஸ் தேசத்தார் தாங்கள் விரும்பிய இடத்திற்குக்கொண்டுபோகக்கூடிய சூத்திரங்களையுடைய பெலூனைக்கட்டி முடிக்க எவ்வளவோ விதமாய் ப்ரயத்தனம் செய்தார்கள்.

## டிரிஜிபில் பெலூன்.

கப்பல்களை ஸமுத்திரத்தில் ஓட்டுவதற்கு நீராவி யந்திரங்களை உபயோகிப்பதுபோல், பெலூன்களுக்கும் இந்த யந்திரங்களைக் கட்டி நடத்தமுதல் முதலில் எத்தனித்தார்கள். இந்த யந்திரங்களெல்லாம் அதிக பளுவுள்ளவைகளாதலால், இந்த யுக்தி பிரயோஜனப்படாமல் போயிற்று. இவ்வாறு இருக்க, மிகவும் லேசானதும் அதிக சக்தியுள்ளதுமான கெரோஸின் எண்ணெயை உபயோகித்து நடத்தும் மோட்டாரைக் கண்டுபிடித்து மோட்டார்காரைக் (ரஸ்தாக்களில் தானே செல்லும்வண்டிகளை) கட்ட ஆரம்பித்தார்கள். இதுமுதல் மோட்டாரை உபயோகித்து பெலூனை நடத்த எத்தனித்து இப்போது அநேக விதமான கூண்டுகளைக் கட்டியிருக்கிறார்கள். ஜெப்பெலின் என்னும் எஞ்சினீரால் கட்டப்பட்ட லேசான ஆகாயக் கப்பல் ஒன்று 8-ப் பேரை ஏற்றிக்கொண்டு $37\frac{1}{2}$ மணி நேரத்தில் 700 மைல் தூரம் சென்றதாம். அநேக இடங்களுக்குச் சென்று தான் புறப்பட்ட இடத்திற்கே சுலபமாய் வந்து சேர்ந்ததாம். இம்மாதிரியான ஆகாயக் கப்பல்களுக்கு டிரிஜிபில் பெலூன் என்று பெயர். இவை காற்றையும் எதிர்த்து வேகமாய்ச் செல்லும். இவைகளில் சுருட்டுப் போன்ற நீண்ட வடிவமுள்ள புகைக் கூண்டுகள் உள. இக்கூண்டுகள் உறுதியுடைய லேசான உலோகமாகிய அலூமினியக் கம்பிகளால் செய்த சட்டங்களை உள்ளே உடையன. 8-ப் பேரைத் தாங்கக் கூடிய டிரிஜிபில் ஒன்று 420 அடி நீளமும் 38 அடி உயரமும் உள்ளது. இவைகளைச் சண்டை காலத்தில் உபயோகிப்பதற்கென்றே அநேக மேல்நாட்டு ராஜாங்கத்தார் கட்டி வைத்திருக்கிறார்கள்.

## டிரிஜிபிலின் கஷ்டங்கள்.

இப்பெலூன்களை உபயோகிக்கும்போது சில ஸங்கடங்கள் நேரிடுகின்றன. இக்கூண்டுகள் பெரியன வாகையால், எதிரிகளின் கண்ணுக்குத் தெரியாதபடி பறக்க அதிக உயரம் செல்லவேண்டியிருக்கிறது. ஸாதாரண உயரத்தில் பறந்தால், பகைவர்கள் எளிதில் கண்டு குறிப்பிட்டுச் சுட்டுவிடலாம். யுத்தகாலங்களில் இவைகளில் காற்று நிரப்பியே எப்போதும் தயாராக இருக்கவேண்டும். வெயிலாலும் மற்ற ஆகாயத்தோற்றங்களாலும் கெடாதபடி இக்கூடுகளை விசாலமான பந்தோபஸ்தான இடத்தில் வைத்திருக்கவேண்டும். சண்டை காலத்தில் இவைகளைக் காப்பாற்ற கொட்டடங்களையும் சேனையுடனே எடுத்துச் செல்லவேண்டும். இவைகளில் எளிதில் தீப்பற்றி எரியும் வாயு பதார்த்தங்கள் நிறைந்திருப்பதால், ஆகாய மார்க்கமாய்ச் செல்லும்போது மின்னல் பாய்ந்ததானால் கப்பல் எரிந்து போய்விடும். இக்கப்பல் பெரிய பருமனையுடையதாகையால், மின்னல் பாயும்படியாக ஆகாயத்திலுள்ள மின்சாரத்தை கிரஹிக்கவும் சக்தியுடையதாகிறது.


## பக்ஷிகளைப்போல் பறக்க எத்தனங்கள்.

அநேக ஆண்டுகளாக, பக்ஷி ஜாதிகளைக் பறக்கும்போது கவனித்து, அம்மாதிரியாகவே இறக்கைகளைக் கட்டிக்கொண்டு அவைகளை அசைப்பதால் பறக்க அநேகர் முயன்றும், பலிக்காமல் ஏமாந்துகொண்டே வந்தார்கள். வர வர பக்ஷி ஜாதிகளைக் கவனித்துத் தெரிந்து கொண்டதென்ன, செய்த யுக்திகளெல்லாம் வீணானதென்னவென்பதைப் பரிசோதிக்க எத்தனித்ததில், நம் தேகத்தின் அமைப்பு பக்ஷிகளைப்போல் பறக்க ஒவ்வாததென்றுமனதில் பட்டது. பக்ஷி ஜாதிகள் அதிக பளுவில்லாதவை யென்றாலும், ஆகாயத்தைவிட


பளுவுள்ளவைகளே. இறக்கைகளைச் சாய்வாக விரித்துவைத்துக்கொண்டு அடித்துக்கொள்வதால், அவைமேலேகிளம்புகின்றன. பின்புறத்துள்ள அகன்ற புச்சத்தை அசைப்பதால், படகுகளில் பின்புறத்துள்ள சுக்கானைத் திருப்புவதால் படகுகள் செல்லும் நேரான திசையைவிட்டுப்பக்கமாய் திரும்புவதுபோல பக்ஷிகள் புச்சத்தின் உதவியால் வலமிடமாகவும் மேல் கீழாகவும் திரும்புகின்றன. பக்ஷிகளின் இறக்கைகள் அகன்று வழவழப்புள்ள பரப்புள்ளவைகள் அவற்றின் எலும்புகள் போலாக இருப்பதால், அதிக வலுவுள்ளனவாகவும் லேசாகவும் இருக்கின்றன. இறக்கைகளை அடித்துக்கொள்வதற்காக அவைகள் உபயோகிக்கும் தசைகள் அதிக உறுதி உடையன. நம் கைகால்களிலுள்ள தசைகளின் சக்தியையும் நம் தேகத்தின் பளுவையும் ஒப்பிட்டுப் பார்க்க, பளுவுக்குத் தக்க தசையின் வலு பக்ஷிகளுக்கு இருப்பதைவிட நமக்குக் குறைவே என்று எளிதில் கண்டுகொள்ளலாம். இக்காரணத்தாலேயே பறப்பதற்கென்று செய்த எத்தனங்களெல்லாம் நிஷ்பலனாகிவிட்டன என்று தோன்றுகிறது. நம் தேகத்தின் எடையைக் குறைக்க முடியாதே. ஆகையால், பறப்பது முடியாததென்று கைவிட வேண்டியதுதானோ? என்று ஆலோசிக்கையில், இறக்கைகளை அசைத்துக் கொண்டேதான் பறக்கவேண்டியது என்பது அவசியமோ? என்னும் சந்தேகம் தோன்றி, வேறு வழியால் பறக்க எத்தனித்தால் நல்லதென்று தோன்றிற்று. இவ்வாறு யோசித்து உடம்பில் இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறக்கவேண்டுமென்ற ஆசையை ஒழித்து, வேறு யுக்திகளைப் பரிசோதித்து வந்தார்கள்.

## புதிய யுக்தி.

ஸம பரப்புள்ள ஒரு வஸ்துவை வேகமாக ஆகாயத்தில் வீசி எறிந்தால் எவ்வளவுக் கெவ்வளவு விசையாகப் பாய்கிறதோ அதற்குத் தக்கபடி அதிக தூரம் வரையில் ஆகாயத்திலேயே சென்று பிறகு பூமியில் விழுகிறதென்று நாம் அனுபவத்தில் காண்கிறோம். ஒரு தகட்டைச் சாய்வாகப்பிடித்து வேகமாய்த் தள்ள அது ஆகாயத்தால் தாங்கப்பட்டுப் பறந்து செல்லுகிறதென்பதை லேங்லே என்னும் ஸயன்டிஸ்ட் நிரூபித்த காலம்முதல், இந்த யுக்தியை உபயோகித்துப் பறக்கும் யந்திரம் கட்ட அநேகர் எத்தனித்தார்கள். பக்ஷிகள் இறக்கைகளை அடித்துக்கொள்வதுபோலன்றி, நிலையான இரண்டு இறக்கைகளைப் பக்கத்துக்கு ஒன்றாய் சாய்வாய் வைத்துக்கொண்டும், பக்ஷிகளின் புச்சங்களைப்போல் அகன்ற துடுப்புகளைப் பின்புறமாக அசைத்துக்கொண்டும், முன் வேகமாய்ச்செல்வதற்கு மோடாரிலுள்ள விசையை உபயோகித்தும் உள்ள பறக்கும் சூஸ்திரப் பறவைகளைக் கட்ட எத்தனித்து, விதம் விதமான உருவங்களை அமைத்து இப்போது பறந்து வருகிறார்கள். இவைகளுக்கு ஏரோப்ளேன் என்று பெயர். (ஏர்-ஆகாயம், ப்ளேன்-தகடு). வெவ்வேறு விதமான யந்திரங்களை ஒப்பிட்டுச் சிறந்தது எது என்று தெரிந்தெடுக்க வென்றே ஐரோப்பாவில் அனேக ராஜாங்கத்தார் பல பறக்கும் பந்தயங்களுக்கு ஏற்பாடு செய்து ஜெயித்தவர்களுக்கு அதிக வெகுமதியும் கொடுத்து வருகிறார்கள்.



படம். I. ப்ளெரியாட் மானோப்ளேன்.




படம். 2. மானோப்ளேனின் பாகங்கள்.

## மானோப்ளேனின் பாகங்கள்.

A. A. இரு பக்கத்து இறக்கைகள்.

B. H. P. இறக்கைகளைத் தாங்கும் கம்பிகள்.

D. D. மேல் கீழ் செல்லச்செய்யும் புச்சங்கள்.

E. வலம் இடம் திரும்பச் செய்யும் புச்சம்.

H. முன்புறம் சுழலும் காற்றுடியின் ஒரு இதழ்.

M. மோட்டார் வைத்த இடம்.

R. மோட்டாருக்கு வேண்டிய எண்ணெய்க் கலயம்.

C. இருப்புக் குழாய்களாலாகிய கெட்டியான உடல் பாகம்.

இதன் மொத்த அகலம். 28 அடி.


மொத்த நீளம் 30 அடி.

ஆள், எண்ணெய் உள்பட மொத்த பாரம். 705 பவுண்டு.

காற்றடியின் குறுக்களவு. 7 அடி.

1250 தடவை ஒரு நிமிஷத்தில் சுற்றும்.

மையத்தில் மனிதன் உட்கார்ந்திருக்கிறான்.



படம். 3. பார்மன் பைப்ளேன்.

### ப்ளேரியாட் மானேப்ளேன்.

கீல் பறவைகளில் அநேக விதம் உள. 1,3 படங்களில் இரண்டு விதமான பறவைகள் வரையப்பட்டிருக்கின்றன. முதல் படத்தில் காட்டிய மாதிரியான ஒரு யந்திரம் சென்னை ஐலண்ட் க்ரௌவுண்டில் சென்ற பிப்ரவரிமீ 17,18 தேதிகளில் காலையில் வட்டமிட்டுப் பறந்ததை நாம் பார்த்தோம். இது 2000 அடி உயரம் பறந்ததாம். இதன் உருவம் பக்ஷியைப் போலவே இருக்கிற தல்லவா? இதில் ஏறிச்சென்றவர் ப்ரான்ஸ் தேசத்து மான்ஸியர் டிக் என்பவர். இவர் இக்கீல் பறவையை முதல் முதல் கட்டிய ப்ளேரியாட் என்பவருடன் சேர்ந்து வேலை செய்தவர். இவர் மையத்தில் உட்கார்ந்து கொண்டு தன் பக்கத்திலுள்ள சூத்திரங்களால் மோட்டாரையும், புச்சங்களையும், இறக்கைகளையும் வேண்டியபடி திருப்பிக் கொண்டு சென்றார். இந்த மாதிரி யந்திரத்திற்கு ப்ளேரியாட் மானேப்ளேன் என்று பெயர். இதில் ஒரு தட்டுப் போலி இறக்கைகளே உண்டு இதன் கட்டிடம் தெளிவாய்த் தெரியும்பொருட்டு 2-வது படம் வரையப்பட்டிருக்கிறது. இது பூமியில் இறங்கும்போது பூமியில் பட்டு உடைந்துபோகாத வண்ணம் ரப்பர்க் குழாய்க் கட்டுகளையுடைய சக்கரங்களின் மேல் கட்டியிருக்கிறது. இது பறக்க ஆரம்பிக்கும்போதும் இறங்கும்போதும் பக்ஷிகளைப் போலவே தோன்றும். இருதட்டுப் போலி இறக்கைகளையுடைய ஹென்ரிபார்மன் என்பவரால் கட்டப்பட்ட பைப்ளேன் (இரண்டு தட்டுகள்,) என்னும் சூத்திரப் பறவையின் வடிவத்தை 3-வது படத்தில் காணலாம்.

### தட்டுகளின் உபயோகம்.

காகிதக்காற்றாடிகளைச்சாய்வாகப்பிடித்துக் காற்றடிக்கும்போது முன் இழுத்தால் மேலே கிளம்புகிறதையும், காற்றடிக்காமலிருந்த போதும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு முன்னால் வேகமாய் ஓடினால், படம் மேலே போவ

தையும் பார்த்திருக்கிறோம். பறவை யந்திரத்தில் இரண்டு இறக்கைகளும் சாய்வாகவே கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பாகச் சுழலும் காற்றாடியைப்போல இரண்டு தட்டையானவும், கொஞ்சம் திருகலானவுமான சட்டங்கள் மோட்டாரின் உதவியால் அதிவேகமாய்ச் சுழலுகின்றன. இப்படிச் சுழலுவதால், காற்று வேகமாய் அடிக்க கீல்பறவை முழுவதும் முன்புறமாகத் தள்ளப்படுகிறது. சென்னையில் பறந்த யந்திரத்தில் காற்றாடி சுற்றினபோது 7,8 மனிதர்கள் அதைப் பின்புறமாகத் தள்ளிப் பிடித்துக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வளவு வேகமாகச் சுற்ற ஆரம்பித்தும் அவர்கள் யந்திரத்தை விட்டுவிட, அது பறந்தது. இறக்கைகள் முன்னால் தள்ளப்பட்டவுடனே, காகிதப் படத்திற்குச் சொன்னபடி, இவ்விறக்கைகளும் மேலே கிளம்ப வேண்டியது தானே? காற்றின் விசை அதிகமானால், பளுவுள்ள கதவு படங்களும் மேலே ஏறுவது போல், அதிக பளுவுள்ள கீல் பறவைகள் பறக்க, அதிலுள்ள காற்றாடி அதிக வேகமாய்ச் சுற்ற வேண்டியதுதானே? இறக்கைகளைத் தவிர பின்புறத்தில் சில ஸன்னத் தகடுகள் உள. இவற்றை முன்புறத்து உட்கார்ந்த மனிதன் சில கம்பிக் கோர்வைகளால் எளிதில் திருப்பலாம். இவற்றில் இரண்டு வலம் இடம் திரும்பவும், வேறிரண்டு மேல் கீழாகப் பாயவும் உதவும். மெல்லிய இரும்புக் குழாய்களையும் ஸன்னச்சட்டங்களையும் வேண்டியபடி கட்டி மெழுக்குத் துணியால் போர்த்து இறக்கைகளைச் செய்கிறார்கள். இத்துணி வழவழப்பாய் இருப்பதால், மேல்படும் காற்றை சுலபமாய்த் தள்ளிக்கொண்டு செல்லலாம்.

### கீல் பறவைகளின் நடு நிலைமை.

காகிதப் படங்களில் கயிறு ஸரியான இடத்தில் கட்டியிராவிட்டாலும், வால் தகுந்த பளுவில்லாவிட்டாலும், பளு வித்தியாஸத்தால் படம் தத்தளித்து தலை கீழாகச் சுழலுவதைப்போல் இந்த யந்திரம் சுழன்றால், பிரயாஸையெல்லாம் வீணாகுமல்லவா? காற்றடிப்பதாலும், யந்திரம் வலம் இடம் திரும்புவதாலும், மைய நிலை தப்பி குடை சாயாதபடி, யந்திரத்திலுள்ள பளுவை முன்னதாகவே கணக்கிட்டு ஸரியான இடங்களில் வைத்திருப்பார்கள். திடீரென்று காற்றடித்தாலும் தள்ளாடாமல் இது செல்லவேண்டியது அத்தியாவசியமல்லவா?

### சூத்திரப் பறவைகளின் சிறப்பு.

இவை பெலூன் கூண்டைவிட அதிகச் சிறியனவாக இருப்பதுமன்றி, மேலே கொஞ்ச தூரமாகப் பறந்தாலும், எதிரிகளின் கண்ணிற் படாமலும், அவர்கள் சுட்டுவிடாமலும் எளிதில் செல்லலாம். வண்டிகளைப்போல வேண்டுமானபோது உடனே உபயோகிக்கலாம். காற்றால் நிரப்பிவைத்திருக்கவேண்டுமென்பது இல்லை. சிறிதாகையால், உபயோகப்படாதபோது வீட்டிற்குள் கொண்டு வைத்து விடலாம். விளக்கினாலும் மின்னலாலும் அபாயம் ஒன்றும் இல்லை. மற்றெந்த வித்தியிலும் இவ்வகைப் பறவை யந்திரங்கள் டிரிஜிபில்களைவிட மேலானவை யென்று சொல்லலாம். என்றாலும், இவ்விரண்டு வித வாகனங்களையும் கைவிடாமல் நாளுக்கு நாள் சீர் திருத்தங்கள் செய்துகொண்டே வருகிறார்கள்.

இப்போது வேண்டுமானபோது மேலே பறக்கும்படியான படகுகளைக் கட்ட எத்தனிக்கிறார்கள். இவற்றின் உதவியால் சமுத்திரங்களைத் தாண்டியும் மலை வனாந்தரங்களைக் கடந்தும் எளிதில் செல்லலாமல்லவா?

### கீல் குதிரை.

இதை வாசிக்கையில், நம் தேசத்தில் முன் காலத்தில் பறக்கும் சக்தியையுடைய கீல் குதிரைகள் இருந்ததுதானே, அதைத்தானே இக்காலத்தில் ஐரோப்பியர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள், நாம் கதைகளில் கீல் குதிரைகளை அரசர்கள் உபயோகித்து வந்ததாகக் கேள்விப்படுகிறோமல்லவா ? நம் முன்னோர்களுக்குத் தெரிந்திராதது ஒன்றும் இல்லை என்று சிலரும், வேறு சிலர் வேதங்களிலும் ஆகாயத்தில் பறப்பதைப்பற்றிச் சொல்லியிருகிறதே என்றும் எண்ணலாம். கீல் குதிரை எனப் பெயர் வழங்குகிறதே தவிர, அது எவ்வாறு இருந்தது, அதை எவ்வாறு கட்டினார்கள், அது எந்த யுக்தியால் பறந்தது, அதன் உருவம் எவ்வாறு இருக்கும் என்பதைச் சொல்லுபவர்களை நாம் கண்டதில்லை. கீல் குதிரைகளைப் பற்றிய குறிப்புகள் பழய க்ரந்தங்களில் கண்டவர்கள் எவரேனும் இதை வாசிக்க நேரிட்டால், அவர்கள் அவ்விஷயத்தை இப்பத்திராதிபருக்கு உடனே தெரிவிக்கவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். இது வாஸ்தவமேயானால், நம் முன்னோர்கள் இவ்வளவு புத்திசாலிகளாக இருக்க, நாம் ஏன் இப்போது அவர்களுடைய சந்ததியார் என்பதையும் சொல்ல நாவெழாதபடி அஞ்ஞான இருளில் மூழ்கி யிருக்கிறோம்? மேல் நாட்டார் தங்கள் மனதில் தோன்றியதை அடிக்கடி செய்ய எத்தனித்து, அநேக தடவைகளில் அபஜெயமானாலும், அதனாலே தோல்வி யடைந்த காரணத்தைத் தெரிந்துகொண்டு மேன்மேலும் அபிவிருத்தி செய்து கடைசியில் தாங்கள் எண்ணியதைக் கைக்கொள்வது இப்போது விவரித்த கீல் குதிரையின் வரலாற்றால் தெரிகிறதல்லவா ? இந்த ஐரோப்பியர்களுடைய ஊக்கத்தையும் விடா முயற்சியையும் கண்டு நாமும் அவ்வாறே மனதில்தோன்றியதைச் செய்து பரீக்ஷித்துப் பார்த்து வருவோமானால், நம் தேசம் தானே முன்னுக்கு வரும் எனபதில் ஸந்தேகமில்லை. இவ்வழியே நாம் முன்னுக்கு வருவதற்குச் சிறந்த வழி என்னலாம்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாபராவ்.

---

## SMALL INDUSTRIES FOR WOMEN.

BY

S. SOMASUNDARA DESIKAR.

## ஸ்திரீகளுக்குற்ற சிறுதொழில்கள்.

இந்து ஸ்திரீகள் நமது தென்னாட்டில் யாதொரு தொழிலும் செய்வதை நாம் பார்த்தறியோம். இந்து ஸ்திரீகளிலும் முக்கியமாக உயர் வகுப்பாரெனக் கூறும் பிராமணர் வகுப்பிலும், இரண்டாவதென்று சொல்லிக் கொள்ளப்படும் சைவவேளாளர் வகுப்பிலும் ஸ்திரீகள் யாதொரு தொழிலும் செய்வதில்லை. ஆயினும் செய்வதேயில்லை யென்று சொல்லுவதற்கு இல்லை. இதற்கு மாறாக மகமதிய ஸ்திரீகளும் தாழ் வகுப்பு இந்து ஸ்திரீகளும் ஏதாவது ஒரு தொழில் செய்துதான் வருகிறார்கள். இந்து கீழ்வகுப்பு ஸ்திரீகள் செய்யும் தொழில் சற்று கடினமும் சிரமும் உடையனவாயினும், மகமதிய ஸ்திரீகள் செய்யும் தொழில்கள் அப்படிப்பட்டவையல்ல. தஞ்சாவூர் ஜில்லாவில் ஸமுத்திரக் கரையோரங்களிலுள்ள மகமதிய ஸ்திரீகள் மெத்தைப் பாய் என்று சொல்லும் தாழம் பாய் பின்னுகிறார்கள். இந்தப் பாய்கள் குறைந்தது 8 அணா முதல் இரண்டுரூபாய்வரையில் விற்கப்படுகின்றன. மெத்தைக்குமேல் மெதுவாக இருப்பு

தால், இது மெத்தைப்பாய் என்றழைக்கப்படுகிறது. இதற்கு வேண்டிய ஸாமக்கிரியைகளோ தலையில் சூட்டிக்கொள்ளும் தாழம்பூ உண்டாகும் தாழை ஓலைகளே. இவற்றில் முதிர்ந்த ஓலைகளைத் தள்ளி மேலே குருத்துடன் நான்கு ஓலைகளைச் சேர்த்துக் குத்தியெடுத்துக் கொண்டுவந்து ஸன்னமாகக் கிழித்து நிழலில் உலர்த்துகிறார்கள். இவை குருத்துகளாயிருப்பதற்குத் தக்கபடி வெண்மையுடையனவாகின்றன. இவற்றிலேயே இன்னும் இளங் குருத்துகளாயிருப்பவைகளை யெடுத்து வேண்டிய சாயங்களைச் சேர்த்து இந்த ஓலைகளையும் போட்டு வேகவைத்து எடுக்கிறார்கள். இச்சாயம் ஒருநாளும்போகிறதில்லை. பிறகு வேண்டிய மாதிரிகளை உபயோகப்படுத்திப் பாய் பின்னுகிறார்கள். பாய் முடைவதில் இரண்டு பாய்களைப் பின்னிஒன்றுடன் ஒன்று சேர்த்து பிரப்பம்பாய்களுக்கு ஓரம் கட்டுவதுபோல் மேலே கூறிய ஓலையாலேயே பின்னிவிடுகிறார்கள். இதிலும்மேல்பாய் ஸன்னமாகக்கிழித்த ஓலையால்பின்னப்பட்டதாயும், கீழ்தட்டு சற்று பெரிய கீற்றுகளுடையதாகவும் செய்யப்படுகின்றன. இவை இரண்டும் சேர்ந்தவுடன் வெகு மிருதுவாக இருக்கின்றன. ஓய்வு நேரங்களில் மாத்திரம் ஒரு பாய் பின்னுவதாயின் ஒருவாரத்திற்குள்பின்னக்கூடும். வீணே கழிக்கும் காலத்தை இப்படி உபயோகமான வேலையில்செலவிடுதல் உள்நாடுகளிலும் உசிதமாகும். உட்கிராமங்களிலுமிருக்கும் பிராமணர் போன்ற சில வகுப்பார் தம் வீட்டிற்கு வேண்டியமட்டும் கோரையாற் செய்த பாய்களைப் பின்னுவதைப் பலரும்பார்க்கிறோம். இந்தக்கோரைப்பாய் மழைகாலத்திற்கு வெகு ஸௌக்கியமானது. ஈரத்தை மேலே செல்ல விடுகிறதில்லை. உஷ்ணத்தையே கொடுத்துக் கொண்டிருக்கும். ஆயினும் இது அபரிமிதமாகச் செய்யப்பட்டும், வாங்கவும் படுவதில்லை.

இரண்டாவதாக உள்நாட்டிலிருக்கும் மகமதிய ஸ்திரீகள் பட்டு இழைத்தல் வேலையைக் கைக்கொண்டிருக்கிறார்கள். ஒரு வீசை பட்டிழைத்தால், இரண்டு ரூபாய் கிடைக்கும். ஸாதாரணமாக ஒரு மாதத்தில் இரண்டு வீசைப் பட்டிழைக்கக்கூடும். இந்தமாதிரி அநேகர் பட்டிழைக்கிறார்கள். எல்லாம் ஓய்வு நேரங்களில் செய்யப்படுகின்றனவே யொழிய மற்றப்படி வீட்டுவேலைகள் இதன் பொருட்டுத் தடைபடுவதில்லை. இப்பட்டு இழைப்பதற்கு இவர்கள் தேடவேண்டியது ஒன்றுமில்லை. பட்டுச் சாயம் போடவேண்டியவன் பட்டையும் திரிவிட்டம் என்னும் ஒரு கருவியையும் கொண்டுவந்து வீடுகளில் கொடுத்துவிடுகிறான். இவர்கள் அவற்றை சிக்கலில்லாமல் இந்தத் திரிவிட்டத்தில் சுற்றிக்கொடுத்துவிட வேண்டியதுதான். வேறொன்று மில்லை.

இப்படிச் சில சிறு நுட்பமான தொழில்களிருக்க வீட்டு ஸ்திரீகள் வீணே காலத்தைக் கழிக்கிறார்கள். எப்பொழுதும் ஒருவருக்கு வேலை யில்லையாயின் யாருடனாவது பொழுதுபோகப் பேசச் சொல்லும். பேச ஆரம்பித்தால், அவற்றைத் தடுக்க இவை உத்தமமான தொழில்களாகும்.

சோமசுந்தர தேசிகர்.

## RAT EXTERMINATION.

BY

V. P. THIRUMALIAPPA MUDALIAR.

## எலிகளைத் தொலைத்தல்.

இந்தப் பத்திரிகை 3-ம் வால்யம் 4-வதுலக்க ஸஞ்சிகை 174-ம் பக்கத்தில் தஞ்சை ஜில்லா சம்பாப் பயிர் மாசூல் எலிகளால் நஷ்டமான தாகவும், பரிகாரம் கூறும்படியும் எடிட்டோரியல் கலத்தில் வினவப்படுகின்றன.

மற்ற ஜில்லாக்களில் விளைவு தீவு ஸம்பவத்தைப் பொறுத்து நிலம் உயர்வு தாழ்வு மதிக்கப்படும். தஞ்சாவூர் ஜில்லாவிலோ பாதை ஸௌகரிய மில்லாத கிராமத்தை உயர்வாகக் கொள்வதில்லை. வருஷத்தில் 3 போகம் விளையும் நிலமானாலும் பாதை ஸௌகரியங் குறையின்பிரயோஜனமல்லாத நிலமாகவே கொள்ளப்படுகிறது. பைவிக்ளிலில் சவாரிபோய் நிலம் பார்ப்பதாயின் பாழான களர் நிலமாயினும் மேன்மையாகக் கொள்வார். பெலூன்கூண்டு வேகம் மட்டாய் பூமியைத் தொட்டுக்கொண்டு போமாகில், பெலூன் ஏருளமாய் வாங்கி ஆனந்திப்பர். அப்போதேனும் நிலங்களைச் சுற்றிப்பார்த்துகுறைதெரிந்துபரிகாரந்தேடப்படுமோ என்பதும்ஸந்தேகப்பாடே. நிலங்களை அப்போதைக் கப்போது பார்வை செய்து வந்தால், குற்றங் குறை தெரிய ஹேதுவாகும். சம்பா அறுவடைக்கு முன் கிருஷி இலாகா ஸ்பெஷல் ட்யுடி பாரம் மானேஜர் மிஸ்டர். வி. நாரணய்யரவர்களிடம் தெரிவித்திருந்தால், பரிகாரங் கிடைத்திருக்கும். சம்பா மாசூல் நஷ்டமாயிராது. அஸ்தத்தில் ஆச்சியமிருக்க மேலும் மேலும் ஆச்சியம் தேடி யலைவார் கதை போல தஞ்சை ஜில்லா விவஸாயப்போக்கு இருக்கின்றது. அரசுரிமை, விவகாரம், இவைகளைச் செய்வதில் காட்டும், புத்தி சாதுரியத்தைத் தஞ்சை ஜில்லா விவஸாயத்தில் செலுத்தினால், எவ்வளவோ மேம்பாடாக விருக்கும். தஞ்சை ஜில்லா விவஸாயத் தாழ்வு பூராவும் தெரிவிப்பதாயின் சில அத்தியாயம் வரையவேண்டும். அப்படி எழுத சாவகாசமும் போதாது. வருகிற அக்டோபர் மாதத்துக்குள் கிருஷி இலாகா நிரூபண பண்ணை ஏற்பாடாகும். அப்போது திருந்தலாமென்று நிறுத்தி எலி பரிகார மட்டும் பேசுவோம்.

1. தஞ்சை ஜில்லா நஞ்செய் வரப்புகள் ஒரு பக்கம் ½ அடி யிருந்தால், மற்றொரு பக்கம் 5 அடி யிருக்கும். அவைகளில் பல புற்பூண்டு குழைத் தழையுண்டாய் செத்தை யடைந்திருப்பது எலிகுடிகொள்ளஹேதுவாகும். தழைகளை அப்போதைக் கப்போது அறுவடை செய்து நிலத்துக்கு உரமாக்கலாம். பயிர்மித்தியகாலம் முளைக்குந் தழைகளை அறுத்து எருக் குழியில் சேர்த்து உரமாக்கவேண்டும். 1 அடி உயரத்துக்கு அதிகமான வரப்புகளை அப்புறப்படுத்த வேண்டியது அவசியம், செலவு மிகு மென்றால், வருஷந்தோறும் எலி, சாரைப் பாம்புகளால் மாசூல் குறைந்து நஷ்டமே யுண்டாகும்.

2. பக்ஷிகளில் ஆந்தையைக் காணில் அபசகுனக் குறி என்று சொல்வதுண்டு. ஆந்தைக் கூண்டுகளில்ஆந்தைக்குஎலிகள்இரையாவதைப்பன்முறை சோதனை செய்யப்பட்டிருக்கிறது. எலி ஆந்தைக்குப் பிரியமான உணவு. எலிகள் ராத்திரிகாலமே இரைதேடப்புறப்படும். அப்போதுதான் ஆந்தைகளும் இரைதேடப் போவதால்,எலியைப்பக்ஷிக்கும் ஆந்தை பகல் இரை எடுப்பதில்லை. நெற்பயிரின் உயரத்துக்கு ½–1 அடி உயரமாகும்படி சில கழிகள் நடவும்.

அந்தக்கழியின் உச்சியில் வைக்கோலினால் தலைப் பாகைபோல் கட்டவும். அந்தத் தலைப்பாகை மேல் ஆந்தை உட்கார்ந்து எலியைப்பக்ஷிக்கும். ஆந்தைச்சத்தங் கேட்ட சாரைப் பாம்புகளும் அகன்றுபோம். சாரைப்பாம்புகள் வாலினால் கதிரையும் நெற்பயிரையும் வெட்டும் தொல்லை ஒழுந்துபோம்.

3. வீடுகளில் கழித்த சில மட்பாண்டங் களை எடுத்து நெற் பயிரில் ஜலங் கட்டிய உயரத்துக்கு $\frac{1}{4}$, $\frac{1}{2}$ அடி உயரமாயும் பாண்ட வாய் ஆகாயம் பார்த்தும் பதிக்கவும். பாண் டத்தில் காலே அரைக்கால் பாகம் உயரம் வரை சாணிப் பாலைக் கரைத்துவிட வேண்டி யது. பாண்டங்கள் 2, 3, 4 காலன் (காலன் என்பது 6 புட்டி) ஜலங் கொள்ளுவது போதும். பாண்டவாயில் ஒரு சிறு கோலைப் போடவும். அதன் குருக்கே காம்பு உள்ள வாழை இலை போடவும். பாண்ட வாயவ் வளவே இலை போதும். இலையின்மேல் கொஞ்சம் வறுத்த உளுந்தும் நெற் பொரியுந் தூவ வேண்டியது. நெற் பொரி உணவுக்கு ஆசைப்பட்ட எலி தெப்பம் போலுள்ள இலையில் ஏறியவுடன் பாண்டத்தில் விழுந்து விடுகிறது. பாண்டத்தில் விழுந்த எலி மேலே வர முடிவதில்லை. சாணிப்பால் எலியின் ஸ்வா தீனத்தை இழக்கச் செய்கிறது. பாண்டத்தில் தினம் 7,8 எலி விழும். விழுந்த எலிகளை தினம் அப்புறப்படுத்தவேண்டும். நெற்பொரிப் பாண்டத்தில் எலிகள் விழவிழ வேறு பொரி தூவவும் வேண்டும். பல பாண்டங்களில் ஏராளமான எலி விழும். மாசூல் அழிவு மிக வுந் தீரலாம்.

4. தென்னாப்பிரிக்கா மைதான வனங்களில் சுயேச்சையாய் லிகித பக்ஷி சஞ்சரிக்கிறது. அந் தப்பக்ஷி பாம்பையும் எலியையும் தீவிரமாய் பக்ஷிக்கிறது. அதைப் பிடித்துப் பழக்கிப் பாம்பையும் எலியையும் நிர்மூலமாக்க ஆப்பி ரிக்கா வாஸிகள் உபயோகிக்கிறார்கள். அவர்க ளுக்கு லிகித பக்ஷியில் பிரியம் ஜாஸ்தி. அங்கு புலங்களுக்கு மனிதர் செல்லும்போது கூடவே லிகித பக்ஷியும் போய் நிலங்களிலிருக் கிற எலி பாம்பு இவைகளைத் தொலைக்கிறது. வீட்டிலும் எலி பாம்பு பாதை கிடையாது. அதைக் கிருஷி இலாகா மூல்யம் தருவித்துப் பயனடையலாம்.

5. அமெரிக்காவில் பரிகாஸ பக்ஷி ஒன் றுண்டு. அது எல்லா பக்ஷிகள் குரல்போல் தவறாது பாடும். பழகிய பக்ஷி மனிதர்போல் தவறாது பாடுகிறது. பாம்பு எலிகளையும் அழிக்கும் வல்லமையும் உண்டு. ஸங்கீத ஆவல் மிகுந்த தஞ்சை ஜில்லாவுக்குப் போனகிருப் மாதிரியான சுகம் பெறலாம், இதையுந் தரு வித்துப் பயனடையலாம். இங்குள்ள மயில் கருடன்களால் எலி பாம்பழிவு மிகக் குறைவு. ஒன்று மற்றொன்றைத் தவறி சந்திக்கும்போது அழிவாகிறதே தவிர உண்மையில் மயில் முதலியவைகள் வேட்டைநாய்போல் எலி பாம்பை யழிப்பதில்லை.

6. பைஸல்பைட் ஆப் கார்பன் என்ற இங்கி லீஷ் விஷ மருந்து மதராஸ் ஸிமித் அண்டு கம் பெனி போலொத்த பெரிய மருந்து ஷாப்பில் கிடைக்கும். அந்த மருந்தைத் துணியில் நனை த்து எலி வளையில் செலுத்த மூச்சுத்திணறி எலி கள் சாகும்.

7. பேரியம் கார்பனேட் என்ற இங்கிலீஷ் மருந்து ஒரு பாகம், ஏதேனும் மா, தவிடு களில் 3 பாகமுங் கலந்து கோலிக்காய் அளவு உருண்டை செய்து வரம்புகளில் சிதறி வைக்க எலி தின்று சாகும். இந்த 6, 7 லக்க விஷ மருந்துகள் புண்ணுள்ளவர்கள் கையாடப் படாது. மற்றோரும் மருந்தை உபயோகித்த பின் கையை ஜலம் விட்டுக் கழுவவேண்டும்.

மருந்தில் கைவிட்டு முகங் கால் முதலிய அங்கங்களைத் தடவவும் கூடாது.

8. அமெரிக்கா விவஸாய விருத்தி எவ்வளவு உயர்வோ அவ்வளவு தூரம் எலி பாதையும் ஜாஸ்தி. எலிகளால் வருஷந்தோறும் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டமாகி மாகூல் அழிவாகிறதாம். பல ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். நிகோலா டெஸ்லா என்ற சாஸ்திரி மின்சார விசை தயாரிப்பதில் வல்லவராம். அவர் எலி பிடிக்கும் யந்திரம் தயாரித்திருக்கிறார். யந்திரத்தில் எலிக்கு உணவும் சாக ஏற்பாடு முண்டாம். விபரமாயறிய விரும்புவோர் கும்பகோணம் வைத்திய போதினி பத்திராசிரியரிடங் கேட்கலாம். வைத்திய போதினியின் முதல் வால்யும், 8-ம் லக்கஸஞ்சிகை 169-ம் பக்கம் பார்க்கத்தெரிய வரும்.

நமது அனுபோகத்தில் அறிந்ததைப் பூராவும் கூறிவிட்டோம் தேவையானவர்கள் இஷ்டமானதை அங்கீகரிக்கட்டும்.

இந்த விடை எடிட்டோரியல் கலத்தில் வினவியதால் எழுத நேர்ந்தது.

தேனீ பல புஷ்பங்களிலிருந்து தேன் திரட்டும். அவ்வாறே நமது 'பிழைக்கும் வழி'யில் வர்த்தகாபி விர்த்தி, தொழில் அபிவிர்த்தி, வித்தியா அபிவிர்த்தி, விவஸாய அபிவிர்த்தி, பொருளபி விர்த்தி முதலிய பல விஷயங்களாராய்ச்சி செய்து தொகுக்கப்படுகின்றன. இந்தப் பத்திரிகை ஒன்றைப் பார்வையிடுவதால், தேசாபி விர்த்திக் குரிய ஸகல விஷயமும் தெரிந்து கொள்ளலாம். ஆகவே பத்திரிகாபிமானிகள் யாவரும் ஆதரிக்கும்படி வேண்டுகிறோம். தென்னிந்தியா வாஸிகளுக்கு சிரேஷ்டமான செவிக்குணவு 'பிழைக்கும் வழி' யொன்றேயாம்.—வெ. ப. திருமலையப்பமுதலியார்.

## THE ORIGIN AND SCOPE OF THE REGISTRATION DEPARTMENT.

## ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவின் ஆரம்பமும் நோக்கமும்.

விதிகளை ஏற்படுத்திக்கொள்வதெல்லாம் ஏதாவது ஒரு காரியத்தை உத்தேசித்தேயாம். இப்போது நாம் பேசுவதாக எடுத்துக் கொண்ட பத்திரப் பதிவு அதாவது ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவைப் பற்றிய விதிகள் ஏற்பட்டமைக்கு அநேக காரணங்கள் உண்டு. முதலாவது, எழுதப்படும் தஸ்தாவேஜிகளின் பதார்த்தத்தைப் பற்றிப் போதுமான ருஜூ ஏற்படுத்திக்கொள்வது; இரண்டாவது, அப்படிப்பட்ட தஸ்தாவேஜினால் செய்துகொண்ட நடவடிக்கை எல்லோருக்கும் தெரியும்படி பகிரங்கமாக்கப்படுவது; மூன்றாவது, அந்த நடவடிக்கையை எழுத்து மூலமாக ரிகார்டு செய்து கொள்வதினால், அதன் விபரங்கள் இன்னின்னவையென்று நிச்சயமாகத்தெரிந்து கொள்ளும்படி கட்சிக்காரர்களைக் கட்டுப் படுத்துவது; நான்காவது, ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட ஸொத்தை கிரயமாகவோ, தானமாகவோ வேறொருவர் ஏமாற்றிப் பெற்றுக்கொள்ளாமலிருப்பதற்கு வேண்டிய தடங்கல்களைச் செய்வது; ஐந்தாவது, ஏற்பட்ட தஸ்தாவேஜிகள் நாசமாய்ப் போனாலும், கை சோர்ந்து போனாலும், அதனால் ஸ்தாவர ஸொத்துக்கு யாதொரு பாத்திய ஹானியும் நேராதபடி தகுந்த முன் ஜாக்கிரதை செய்துகொள்வது. பொதுப்

படக் கூறுமிடத்து, ஏதாவது ஒரு நடவடிக் கையைப்பற்றி நம்பக்கூடிய சாட்சியத்தைத் தேடிக்கொள்வதுதான் ரிஜிஸ்ட்ரேஷன் விதி களின் பிரதான நோக்கமாம்.

ரிகார்டுகள் ஏற்படாத பூர்வ காலங்களில் சொத்து விஷயமாகச் செய்யப்பட்ட நடவடிக் கைகள் எல்லாம் கிராமத்தார் அறியவே செய் யப்பட்டனவாதலால், அக்காரியங்கள் பகிரங்க மாகவே இருக்கும். ரோமர்களுக்குள், ஒரு சொத்து கிரயமாகவேண்டுமானால், விற் போனையும் வாங்குவோனையும் தவிர ஐந்து சாட்சிக்காரர்களும், பணத்தை நிறுத்துக் கொடுக்க ஒரு தராசுக்காரனும் அவசியம் இருக்கவேண்டும். ஐரோப்பாவில் முன்னாளில் போர்ச்சேவக மான்ய நிலங்களைக் கிரயம் செய்யும்போது, விற்போனும்வாங்குவோனும் விற்கப்படும் நிலத்தின் மீது நடந்து சென்று முன்னவன் கொடுக்கப் பின்னவன் பெற்றுக் கொள்ளவேண்டு மென்னும் வழக்க மிருந்தது. இவ்வித முறைகளின் நோக்க மெல்லாம், அக்காரியம் பலருக்கும் தெரியவேண்டு மென் பதுதான். நெடுங் கணக்கு ஏற்பட்டு, ரிகார்டு கள் தலையெடுத்த பின்பு, இவ்விதத் தொல்லைகள் வேண்டாவாயின. நாகரீகமும் வியாபாரமும் விருத்தியடைய அடைய, நட வடிக்கைகளை எழுத்து மூலமாக எழுதிவைத் துக் கொள்வதில் விசேஷ நன்மையும் அனு கூலமும் இருப்பது தெரியவந்தது. அவ்வித ரிகார்டுகளும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களால் உறுதி செய்யப்பட்டு, பின்னால் மாறுட்டத் துக்கு உட்படாதபடி முன் ஜாக்கிறதை பண் ணப்படுவதனால், கக்ஷிக்காரர்களுக்கு அதிக நன்மையும்ஸௌகரியமும்உண்டாகும்என்பதே இப்போது நாம் விவரிப்பதாக இருக்கும் பத்தி ரப்பதிவு இலாகா தோன்றியதற்கு முதற் காரணமாம்.

ரிஜிஸ்ட்ரேஷன் ஸம்பந்தமாக இந்தியா முழுவதிலும் செலாவணியாகும்படியான சட்டம் 1864-ம் ஆண்டில் உண்டாயிற்று. அதற்கு முன்னால் ஒவ்வொரு மாகாணத்துக் கும் தனித்தனியே இவ்விஷயமாக விதிகள் ஏற்பட்டிருந்தன. 1793-ம் ஆண்டில் 36-வது சட்டமாகப் பங்காள மாகாணத்தில் ஏற் பட்ட சட்டந்தான் ரிஜிஸ்ட்ரேஷன் விஷய மாக இந்தியாவில் முதன் முதல் உண்டான சட்டம். பம்பாய் ராஜதானியில் 1827-ல் இவ்விதச் சட்டம் ஏற்பட்டது. நமது சென்னை ராஜதானியில் 1802-ம் ஆண்டில் ஏற்பட்டது. பின்பு இச்சட்டம் 1831, 1843, 1845, 1856, 1859, இவ்வருஷங்களில் சிற் சில மாறுதல்களைப் பெற்று 1864-ம் வரு ஷம் வரையில் செலாவணியாய்க் கொண் டிருந்தது. இந்தியா முழுவதுக்கும் ஏற் பட்ட 1864-ம் வருஷத்து 16-வது ஆக்டு பழைய சட்டங்களை யெல்லாம் ரத்து செய்து 1865-ம் வருஷம் முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்டம் 1866-ம் வருஷத்து 20-வது ஆக் டினாலும், 1871-ம் வருஷத்து 8-வது ஆக்டி னாலும் ரத்தாயிற்று. பின்னர் 1877-ம் வரு ஷத்து 3-வது ஆக்டு 31 வருஷங்கள் வரை யில் நடைமுதலில் இருந்து, 1908-ம் வரு ஷத்து 16-வது ஆக்டினால் ரத்தாயிற்று. 1909-ம் வருஷம் முதல் இப்புதிய 1908-ம் வருஷத்து ஆக்டே நடை முதலில் இருந்து வருகிறது. ஐம்பது வருஷங்களுக்குள் இந்த ஆக்டு ஐந்து தரம் புதுப்பிக்கப்பட்ட விஷ யம் ஒன்றே, ஜனங்களுடைய நாகரிக அபி விருத்திக்கும் அதனா லுண்டாகும் சிக்குச் சிடுக்குகளுக்கும் ஸமமாகவே, விதிகளும் ஏற்படவேண்டிய அவசியத்தை நன்கு தெரி விக்கிறது.

---

## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### PREPARATION OF GREEN GINGER.

### இஞ்சி வற்றல் முற்பா செய்தல்.

மங்களூரிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ஜே. ஐ. சல்தாறு அவர்கள், விவஸாய டைரெக்டர் அவர்களுக்கு இஞ்சி வற்றலைப்பற்றி (முற்பா) எழுதிய குறிப்பு:—மங்களூரில் 'தோஷி' என்று பெயர்வழங்கும் இஞ்சிவற்றல் அல்லது முற்பா போட உத்தேசிப்பவர்கள் இஞ்சிப் பயிரை செப்டம்பர்௴ முதல் வாரத்தில் (அதாவது பயிர்நட்ட நாலாம் மாதத்தில்) வெட்டியெடுத்து அதில் இளசாயிருக்கும் அந்த வருஷம் பிடித்த இஞ்சிக்கிழங்கை மாத்திரம் வற்றல்போட உபயோகப்படுத்தி, விதையாய் நட்ட மீந்த முற்றின பாகத்தைக் கடைகளில் 'அஜ்ஜி' என்று பெயர்கொண்ட இஞ்சியாய் ஸாதாரண உபயோகங்களுக்காக விற்கிறார்கள்.

மங்களூரில் இஞ்சி வற்றல் பின்வருமாறு செய்கிறார்கள் :—

இளசாய் வெட்டியெடுத்த இஞ்சியைத் துண்டுகளாக்கி கத்திகொண்டு சீவி அந்த இஞ்சியின் கீழ்த்தோலை அப்புறப்படுத்தி அப்பால் அதைத் தலைமயிர் குத்திவைக்கும் கவர்கொண்ட ஊசிகளை ஒரு பிடியில் சொருகி வைத்த ஆயுதம் போலொத்த ஒரு கருவியால் நெருங்கக் குத்துகிறார்கள். இப்படிச் செய்துகொண்டிருக்கும்போது இஞ்சியைக் குளிர்ந்த தண்ணீர்வார்த்து வைத்திருக்கும் ஒரு அகன்ற கிண்ணம்போலொத்த பாத்திரத்தில் 4 நாளைக்குப் போட்டு, நாளொன்றுக்கு மூன்றுதரம் அந்தப் பாத்திரத்தி லிருக்கும் தண்ணீரைக் கொட்டிவிட்டு, ஒவ்வொருதரமும் புதுத் தண்ணீர் கொட்டுகிறார்கள். கிண்ணியி லிருக்கும் தண்ணீரை வெளியேகொட்டும்போதெல்லாம் இஞ்சியைக் கையால் நன்றாய் அமுக்கிப் பிழிந்துவிடுகிறார்கள். ஐந்தாவதுநாள் நல்ல தண்ணீரில் நாள் ஒன்றுக்கு மூன்று தடவை வேகவைக்கிறார்கள், ஒவ்வொருதரமும் சுமார் 3 மணி நேரத்திற்கு நல்லதண்ணீரில் வேகவைக்கிறார்கள். மூன்றாவதுதரம் வேகவைத்த பிற்பாடு, அந்த இஞ்சியை ஒரு துணியில் கட்டி அதன்மேல் ஒரு கனமான வஸ்துவை வைத்து அதிலிருக்கும் தண்ணீரை அப்புறப்படுத்துகிறார்கள். இச்சமயத்தில் முன் கூட்டிய சர்க்கரையைத் தண்ணீரில் கலக்கிகோழிமுட்டையின் வெள்ளைக்கருவை அதில் ஊற்றிக்காய்ச்சி அழுக் கெடுத்து அதை லேசான பாகு பதத்தில் பதம்பார்த்து எடுத்துவைத்திருக்கவேண்டும். இப்படித் தயாரா யிருக்கும் சர்க்கரைப் பாகில் மேல்சொன்னபடி தயார்செய்த இஞ்சியை ஊறப்போட்டுவிடுகிறார்கள். அப்பால் இந்தச் சர்க்கரை பாகில் போட்ட இஞ்சியை சுமார் அரைநாளைக்காவது அல்லது இன்னும் சற்று ஜாஸ்தி நேரத்திற்காவது, பாகு கெட்டியாகிற பதம்வரை காய்ச்சி அதைப் புட்டிகளில் அடைக்குமுன் ஒரு நாளைக்கு ஆற வைக்கிறார்கள்.

இப்படி இஞ்சிவற்றல் மங்களூரில் ஸம்பத்து பெற்ற அநேக கிறிஸ்தவர்கள் வீட்டில் சொந்த உபயோகத்திற்காகவும், ஸெயிண்ட் அந்தோணி பள்ளிக்கூடத்தில் விற்பனையை உத்தேசித்தும் தயார் செய்கிறார்கள். 25 இராத்தல் நிறையுள்ள ஒரு மணங்கு வற்றலுக்கு ரூபாய் 10 முதல் 12 வரை விலை கிடைக்கிறது. இப்படி வற்றல் செய்ய லாயக்கான இளம் இஞ்சிக்கு, முற்றின இஞ்சியை விட நல்ல கிராக்கியிருக்கிறது 1909-ம் ௵ செப்டம்பர்௴ முற்றின இஞ்சியின் விலை மணங்கு ஒன்றுக்கு ரூபாய் 2 மு[illegible] வரை இருந்தபோது இளம் இஞ்சி[illegible] 4 ரூபாய் வரை விற்றது.

மேல் நாட்டாரால் விலைக்கு[illegible] இஞ்சியைத் தயார் செய்யும் வி[illegible] லாக்காரர்களுக்குத்தெரியா[illegible]

## CENSUS STORIES.

## ஸென்ஸஸ் கதைகள்.

பத்து வருஷத்துக்கு ஒரு முறை ஜனகணிதம் எடுக்கப்படுவதினால், தேசத்தின் அபிவிர்த்தியும் க்ஷீணமும் ஜனங்களின் நிலைமையும் இவை போன்ற பல விஷயங்களும் தெளிவாகின்றன. 1901-ம் வருஷத்தில் ஜனகணிதம் எடுக்கப்பட்டது. இப்போது அது நடந்து பத்து வருஷங்களாயினமையால், மறுபடியும் இவ்வருஷம் எடுப்பதற்காக போன மார்ச்சு மாதம் 10 உ நாள் குறிப்பிடப்பட்டு காரியங்கள் யாவும் திருப்திகரமாய் நடந்தேறின. ராஜதானி ஸ்தலங்களாயுள்ள சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களிலே ஜனகணிதம் எடுப்பதற்காகச் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை ஆங்கிலபாஷா பத்திரிகைகளிற் படிக்கும்போது அது ஒரு கதாஸந்தர்ப்பத்தில் வருகிற வர்ணனைபோல் வெகு சுந்தரமாய் வர்ணிக்கப்பட்டிருப்பதானது வாசிப்பதற்கு அதிகமான உற்சாகத்தைக் கொடுப்பதாகிறது.

இனி இந்த ஜனகணிதத்தில் சில மூடஜனங்கள் பற்பலவிதமான தவறு நினைவுகளைக் கொண்டார்கள். ஒரு வீட்டில் உள்ளவர்களைப் பற்றிய கணக்கை யதார்த்தமாகத் தெரிவிக்குமிடத்து பிறகு அது முனிஸிபாலிட்டிக்கு எட்டி அதிகமான வரி போடுவதற்கு இடமாகு மென்று பயந்தவர்கள் பலர். இவ்வளவு திறமையாகக் கணக்கெடுக்கிறார்களே, அதை எப்படியாவது நிறைவேற்றாது தடுக்கவேண்டு மென்று சூரத்வம் பேசி மெத்தைமேல் சயனித்து உறங்கியவர்கள் பலர். தாசிகளின் வீட்டுக்கு இன்று சென்றால், நாமும் ...கெடுப்பவர்களின் கண்முன் காணும்படி ...ன்று அன்று தங்கள் ஆசை நாயகி ...டிற்குப் போகாதிருந்துவிட்டார் ...கேயோ சென்றுவிட்டுத் திரும்... மணிக்குள் கடைகள் எல்...ப் போயிருப்பதை நோக்கி ஆச்சர்யத்துடன் தன் வழி செல்வானாயினான். கடைவீதிகளில் கடைகளை மூடிவிட்டால், ஜனசந்தடி நீங்கிவிடு மென்ற யோசனைக் குறிப்புடன் செய்த மேலதிகாரிகளை ஒருவன் மெச்சலானான். கல்கத்தாவிலே ஒருவன் அ இரவில் எங்கேயோ போகப் புறப்பட்டபொழுது தன்னைத் தடுத்த போலீஸ் வீரனைக் குத்திவிட்டான். ஸ்ரீரங்கத்திலே 10-ம் தேதி நடைபெறவேண்டிய தெப்ப உற்சவத்தை 9-ம் தேதியே நடத்தும்படி ஸர்க்கார் ஆக்ஞை உண்டாக ஸ்ரீ ரெங்கநாதரும் ஸமயோசிதமாகவும் கோவில் மாமூல் தவறாதபடியும் நடக்கும்படியாகத் திருவுளம் பற்றினார். 10-ம் தேதி நடக்கவேண்டிய தெப்பத்தை 9-ம் தேதி வைத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினாலும் மாலை 6-மணிக்கு நடக்கவேண்டிய உற்சவத்தை 9-ம் தேதி இரவு 3-மணிக்கு அதாவது 10-ம் தேதி அதிகாலை 3-மணிக்கு வைத்துக்கொண்டு கோவில் மாமூலுக்கும் இராஜாங்க உத்தரவுக்கும் பிசகில்லாமல் நிறைவேற்றப்பட்டது. பட்டு நூற்காரர்களெல்லாம் தங்களை ஸௌராஷ்டிரப் பிராமணர்களாக மாற்றிக்கொண்டார்கள். தட்டார் முதலியவர்களெல்லாம் தங்களை விசுவகுலப் பிராமணர்களாக்கிக்கொண்டார்கள் பௌத்த மதத்தார்களெல்லாம் தங்களைப் பிரத்தியேகமாகக் கணக்கெடுக்கும்படி தெரிவிக்கலானார்கள். யூரேஷியர்களெல்லாம் ஆங்கிலோ-இந்தியர்களானார்கள். மராட்டியர்களெல்லாம் மகாராஷ்டிரப் பிராமணராயினர். கீழ் வங்காளத்திலே சண்டாளர்களென்று ஒரு வகுப்பார் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சண்டாளர்கள் என்ற பெயரால் பதிவு செய்யப்படாதிருக்கும்படியும் ஏற்பாடு நடத்தப்படலானது. ஒவ்வொரு வகுப்பாரும் தங்களின் கௌரவத்தை உயர்த்திக்கொள்ள முயல்வாரானார்கள். தாசிகளெல்லாம் தங்களைத் "தேவடியாள்" என்று சொல்லிப் பழிக்கிற நிந்தையினின்றும் விலக்கிக்கொண்டு தங்களைத் "தேவபத்தினிகள்" என்ற முறையில் கணக்கெடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்வதற்குக்கூட ஆலோசித்தார்களாம். இப்படியாக எண்ணற்ற விநோதங்களுடன் ஜனகணிதக் கதை முடிவு பெறலானது.

திராவிடாபிமானி,

## THE BENEFITS TO ENGLAND FROM INDIA.

## இந்தியாவினால் இங்கிலாந்துக்கு என்ன பிரயோசனம்.

இந்தியாவிலிருந்து வரும்படி பெறும் ஆங்கிலேயருடைய உதவி யில்லாமல் ஜீவனம் செய்யும் ஒரு குடும்பமாவது இங்கிலாந்தில் இல்லையென்று பெயர்போனபம்பாய் பத்திராசிரியரான காலஞ் சென்ற மிஸ்டர் ஜே. எம். மெக்ளின் ஒரு முறை சொன்னார். இந்தியாவானது இங்கிலாந்துக்கும், இங்கிலாந்தானது இந்தியாவுக்கும் அநேக வழிகளில் பரஸ்பரம் நன்மை செய்வதாயிருந்தாலும் இந்த வியாஸத்தில் இங்கிலாந்துக்கு இந்தியாவினா லுண்டாகும் பிரயோஜனத்தைப் பற்றி மட்டும் கவனிப்போம். முதலாவது, இங்கிலாந்தைச் சேர்ந்த அநேக சிறுவர்களுக்கு இந்தியாவில் உத்தியோகம் கிடைக்கின்றது. அநேக முதலாளிகள் இங்கு வந்து வியாபாரம் தொழில் முதலியவைகள் செய்து லாபம் பெறுகிறார்கள். பெரிய உத்தியோகம் செய்யும் அநேக ஆங்கிலேயர் பென்ஷன் பெற்றுத் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போய் அங்கே இந்தப் பென்ஷன்களைச் செலவு செய்வது மன்றி, அங்கு நடக்கும் பல பொதுக் காரியங்களில் தாங்கள் இந்தியாவில் பெற்ற அனுபோகத்தையும் அறிவையும் உபயோகித்து வருகிறார்கள். இவைகளன்றி பிரிட்டிஷ் தேசத்து ஸோல்ஜர்களுக்கும் சேனாதிபதிகளுக்கும் இந்தியாவில் பயிற்சி கிடைக்கின்றது. பிரிட்டிஷ் தேசத்தில் பேர் பெற்ற சேனாதிபதிகள் அநேகமாய் இந்தியாவில் பயிற்சி பெற்றவர்கள். இதை யுத்தேசித்து ஒருமுறை இந்தியாக் கவர்ன்மெண்டில் மிலிடெரி மெம்பராயிருந்த ஜெனரல் பிராக்கன்பரி என்பவர், இங்கிலாந்து இந்தியாவுக்குப் பிரதிவருஷம் ஒரு பெரும் பணத் தொகையை உதவியாகக் கொடுக்கவேண்டு மென்று சொன்னார். இவைகளைத் தவிர இந்தியா இங்கிலாந்தைச் சேர்ந்திருப்பதால், இங்கிலாந்துக்கு உலகத்தில் வல்லமையும் செல்வாக்கும் உண்டாயிருக்கின்றன. இந்தியா இல்லாவிட்டால், இங்கிலாந்தானது மூன்றாந்தர தேசமாகிவிடு மென்று ஜெனரல் ராபர்ட்ஸ், லார்ட் கர்ஸன் முதலிய ராஜ தந்திரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இது இப்படியிருக்க, இன்னொரு விஷயத்தில் இத்தேசம் இங்கிலாந்துக்கு வரவரப் பெரும் பிரயோஜனத்தைக் கொடுக்கத்தக்கது. இந்தியா ஜனங்கள் இப்போது அவர்களிற் பெரும்பான்மையோரைப் பாதிக்கும் வறுமை நீங்கி, ஐரோப்பிய தேசத்தாரைப் போலச்செல்வம்பெற்றவர்க ளாவார்களானால், அவர்கள் இங்கிலாந்து செய்யும் சரக்குகளை மேன்மேலும் அதிகமாய் வாங்கி அவர்கள் செய்யும் சரக்குகளையும் அவர்கள் பூமியில் விளையும் இயற்கைப் பொருள்களையும் இன்னும் விசேஷமாய் இங்கிலாந்துக்கு அனுப்பக்கூடும். இப்போது இங்கிலாந்தி லிருக்கும் ஹிஸ் ஹைனஸ் ஆகாகான் ஒரு பத்திரிகையின் பிரதிநிதியுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது, இந்தியாவானது இப்போழுது நல்ல நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறதென்றும், அதில் தொழில்களும் அதிகமாய்ச்செய்யப்படத்தலைப்பட்டுக்கொண்டிருக்கின்றன வென்றும், அதனால் இங்கிலாந்துக்கு விசேஷ பிரயோஜனமுண்டாகு மென்றும் சொன்னார். ஏகாதிபதியக் கட்டுகளும் ராஜீய உரிமைகளும் ஒரு பக்க மிருக்க, மற்றொரு பக்கத்தில் இந்தியாவில் அதிகப்பட்டு வரும் தொழில்களும் வியாபாரமும் பிரிட்டிஷ்

தேசத்தாருக்கு அவசியமானதால், அவைகளை இன்னும் முற்படுத்துவதில் அத்தேசத்தார் கவனம் செலுத்தவேண்டும். இந்திய ஜனங்களுடைய வாங்கும் சக்தியானது அதிகரித்து வருகின்றது. வரவர இந்த சக்தி இன்னும் அதிகரிக்குமென்பதில் சந்தேகமில்லை குடியேற்ற நாடுகளிலுள்ள ஜனங்கள் பிரிட்டிஷ் சரக்குகளை எவ்வளவு வாங்குகிறார்களோ அதில் பல மடங்கு குறைவாகவே இந்தியர் வாங்குகிறார்கள். இது இந்தியர் வறுமையால் இப்படி இருக்கின்றது. அவர்கள் வறுமை நீங்கிச் செல்வவான்களாகும் பக்ஷத்தில், பிரிட்டிஷ் சரக்குகளை அதிகமாய் வாங்கி அதனால் பிரிட்டிஷ் ஜனங்களுக்குச் செல்வம் பெருகக்கூடும்.

இந்தியாவில் சமீபத்தில் அமைதியின்மை யுண்டாகி பிரிட்டிஷ் ஜனங்களுக்கு ஒருவாறு அச்சத்தை யுண்டுபண்ணிற்று. அராஜகமும் ராஜத் துவேஷமும் தோன்றி யதனால், இந்தியா பிரிட்டிஷ் தேசத்துக்குத் தொந்தரவையும் நஷ்டத்தையும் உண்டுபண்ணுவதாய்த் தோன்றிற்று. இந்த நிலைமை இப்போது மாறி, இந்தியா எப்போதும் போல் அமைதியும் ராஜ பக்தியும் கொண்டிருக்கின்றது. லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை சில தினங்களுக்கு முன்னால் இந்தியாவைப்பற்றி எழுதின போது, இந்தியாவில் பெருங் கைத்தொழில்களுண்டாகும்படியாய்ப் பிரிட்டிஷ் தேசத்தார் உதவிசெய்துகொண்டு போகவேண்டும்; ரயில் பாதைகளையும் பாஸன வேலைகளையும் மேன்மேலும் அவசியமான அளவு கட்டிக்கொண்டுபோக வேண்டும்; ஜனங்களுக்குப் படிப்பையும் அதிகப்படுத்திக் கொண்டுபோக வேண்டும்; இப்படிச் செய்துகொண்டு போமானால், அராஜகமும் ராஜத்துவேஷமும் தோன்றுவதைப்பற்றி பிரிட்டிஷ் தேசத்தார் கவனிக்க வேண்டியதில்லை யென்று அந்தப் பத்திரிகை எழுதிற்று. கைத்தொழில்களை அதிகப்படுத்துவதால், அவைகளிற் சம்பந்தப்பட்டவர்கள் சொத்துள்ளவர்களாவார்கள். இதுவே திருப்திக்குக் காரணமாகும். பம்பாய் ராஜதானியில் வெங்காளத்தைவிட ஒருபொறி பட்டாலும் பெரும் நெருப்பா யெரியும் வைக்கோற்போர்போன்ற ஜனங்கள் வஸிக்கிறார்கள். வஸித்தும் ஸமீபத்தில் வெங்காளத்தில் நேரிட்ட தொந்தரவைப்போல் பம்பாயில் நேரிடவில்லை. இதற்குக் காரணம் பம்பாய் ஜனத்தலைவர்கள் தொழில்கள் செய்கிறபடியால், அத்தொழில்களுக்கு ராஜீகக் கலகங்கள் நேரிடுவது விரோதமென்று நினைத்தார்கள். கைத்தொழில்கள் அதிக மாவதற்கு ரயில் வேக்களும் பாஸன வேலைகளும் படிப்பும் பேருதவியாகும் இவைகளை யெல்லாம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முற்படுத்திக்கொண்டு போவார்களானால், இந்திய ஜனங்கள் இப்போது அவர்களைப் பாதிக்கும் வறுமையினின்று நீங்கிச் செல்வவான்களாவார்கள். இந்தியா எப்போதாவது வறுமையே இல்லாத தேசமாகுமென்று நாம் சொல்லவில்லை. மேல் நாடுகளில் கைத்தொழில்கள் எவ்வளவு அபிவிர்த்தியா யிருந்தாலும் ஜனங்களில் ஒரு பாகத்தினர் கடும் வறுமையால் வருந்துகிறார்கள். அப்படியே இந்தியாவிலும் வறுமை இருந்துகொண்டிருக்கும். ஆனாலும் மேற்சொன்ன உபாயங்களால் இந்திய ஜனங்கள் இன்னும் அதிகமான நாகரிகம் பெற்று சொத்துள்ளவர்களாய் சுகத்துக்குரிய வஸ்துக்களை நாடி அவைகளை அன்னிய தேசங்களிலிருந்து வாங்கத் தலைப்படுவார்கள். அப்போது இங்கிலாந்து நன்மை பெறுமென்பதில் என்ன சந்தேகம்.—ஸ்வதேசமித்திரன்.

## ARTIFICIAL FEEDING OF CHILDREN.

## குழந்தைகளுக்குக் கைத்தீனி கொடுப்பது.

தாய்ப் பால் கொடுத்து வளர்க்கவாவது, அல்லது தாதி ஏற்படுத்திப் பால் கொடுக்கவாவது அஸந்தர்ப்பமா யிருக்குங் காலங்களில் குழந்தைக்கு கைத்தீனி கொடுத்து வளர்க்கும் விதத்தைப் பற்றிச் சிறிது கவனிப்போம். குழந்தைகளுக்குக்கைத்தீனிகொடுத்துவளர்ப்பதைப்போல் அதிக சிரத்தை யெடுக்கவேண்டிய தொழில் யாதொன்று மில்லை. ஏனெனில், முழுவதும் கைத்தீனி கொடுத்து வளர்க்கும் குழந்தைகளில் நூற்றில் 26 தான் பிழைக்கிறதாகத் தெரியவருகிறது. ஆகையால், தாயானவள் அதிக முயற்சி யெடுத்துத் தன் குழந்தைக்கு எப்படிப்பட்ட ஆகாரம் தகுந்தது என்று அனுபோகத்தில் கண்டுபிடித்து, அதிக ஜாக்கிரதையுடன் அதை வளர்த்துக் கொண்டு வருகிறதா யிருந்தால் மட்டுமே அக் குழந்தை சுகதேகியா யிருக்கு மென்பதற்கு யாதொரு ஸந்தேகமு மில்லை.

குழந்தைக்கு பாலையே ஆகாரமாக இயற்கையிலேயே அமைக்கப்பட்டி ருப்பதால், அதற்குப் பதிலாக உபயோகப்படுத்துகிற ஆகாரமும் பாலாகவே யிருக்க வேண்டும். தாய்ப் பாலுக்கு பதிலாக கழுதைப் பால், வெள்ளாட்டுப் பால், பசுவின் பால் ஆகிய மூன்று பால்களில் ஏதாவ தொன்றை உபயோகிக்கலாம். இவைகளில் கழுதைப் பாலே கொஞ்சம் குறைய தாய்ப் பாலுக்கு நிகரானது. ஆனால் அது கிடைப்பது அருமையாயிருப்பதால், அதை ஸாதாரணமாய் உபயோகிக்கிறதில்லை. அதற்கடுத்தது வெள்ளாட்டுப் பால். இதில் ஓர்வித துர்வாஸனை யிருப்பதால், சில குழைந்தைகளுக்கு வாந்தியுண்டாவதுண்டு. அதுவு மல்லாமல் வெள்ளாடு மடியில் மயிருள்ள ஜெந்துவானதால், பால் கறக்கும்போது, பாலுக்குள் அம்மயிரும் உதிரும். ஆகையால், வடிகட்டி அதிக ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும். ஒரே ஆட்டுப் பாலா யிருந்தால்தான் மிக்கநலம். கழுதைப்பாலானாலும் ஆட்டுப் பாலானாலும் எதையும் தண்ணீர் கலந்தே உபயோகிக்க வேண்டும்.

பசுவின் பாலும் அதிக ஸத்துள்ளதாகையால், அதையும் தண்ணீரில் கலந்தே உபயோகிக்கவேண்டும். தாய்ப் பாலுக்கும் மற்றப் பால்களுக்கும் உள்ள ஓர் பெரிய வித்தியாஸம் யாதெனில், தாய்ப் பாலைக் குழந்தைகள் தாமாகவே உறிஞ்சிக் குடிக்கிறார்கள். ஆனால் மற்றப் பால்களைக் கறந்து அதன் பின் தான் அதை உபயோகப்படுத்துகிறோம் பால் கறக்கும்பொழுது அந்தப் பாத்திரத்திலும் கறப்பவன் கையிலுமுள்ள கிருமிகளும் ஆகாயத்திலுள்ள கிருமிகளும் அப்பாலுடன் கலக்கின்றன. எப்படிப்பாலானது குழந்தைகளின் வளர்ச்சிக்குக் காரணமா யிருக்கிறதோ, அதே விதமாக கிருமிகளும் பாலில் வெகு சீக்கிரத்தில் புலுகிப் பெருகிவிடுகின்றன. ஆகையால், எந்தப் பாலானாலும் நன்றாய்க் கொதிக்கக் காய்ச்சி வடிகட்டிக் கொடுப்பதனால், அதிலுள்ளகிருமிகள்நாசமடைகின்றன. தாய்ப்பாலைவிட மற்றப் பால்களில் சர்க்கரையின் அளவு சிறிது குறைவாயிருப்பதால், சிறிது சர்க்கரையும் கலந்து கொடுக்கவேண்டும். பசுவின் பால் ஸாதாரணமாகவே புளிப்புள்ள தாகையால், அத்துடன் சிறிது சுண்ணாம்பு ஜலம் கலந்து கொள்வது உத்தமம். சில குழந்தைகள் பால் குடித்துச் சிறிது நேரத்தில் பால் உறைந்து வாந்தி பண்ணுகிறார்கள். அதைத் தாய்மார் கண்டு வயிற்றில் புளிப்பேறிவிட்டது என்று

பயப்பட்டு பல மருந்துகளையும் கொடுக்கிறார்கள். ஆனால் வாந்தியல்ல, மலத்தில் பால் திரைந்து காணப்பட்டால், அதுவே அஜீரணத்தைக் காட்டுங் குறி.

அந்தந்த நேரத்திற்கு வேண்டியதை அப்போதைக்கப்போது தயார் செய்ய வேண்டுமேயன்றி, இரண்டு மூன்று தடவைகளுக்கு மொத்தமாகச் செய்து வைக்கக் கூடாது. ஒவ்வொரு தடவையும் புதிது புதிதாகக் கொடுத்தால், குழந்தையின் சுகத்திற்கு அனுகூலமாயிருக்கும். சில குழந்தைகளை எவ்வளவு கவலையாகப் பார்த்தாலும் அவர்களுக்கும் சுகவீனமுண்டாகிக் கஷ்டப்படுவதுண்டு. அப்பொழுது உடனே வைத்தியருக்குத் தெரிவித்து வேறே ஆகாரமும் மாற்றிக் கொடுக்க வேண்டும்.

தாய், பால் கொடுக்கும்போது குழந்தையைத் தூக்கி நெஞ்சோடணைத்துக் கொண்டு எப்படி கொடுப்பாளோ, அதே விதமாகக்குழந்தைக்குப் புட்டிப்பால் கொடுக்கும் போதும், அதைத் தூக்கி நெஞ்சோடணைத்துத் தலையை மாத்திரம் கொஞ்சம் நிமிர்த்தி வைத்துக்கொண்டு பால் கொடுக்வேண்டும். சில தாய்மார் குழந்தைகளுக்கு அவர்கள் படுக்கையிலே புட்டிகளை வைத்துத்தானுகவேபால் குடிக்க விடுகிறார்கள். இப்படிச் செய்வதில் குழந்தை பாலைக் குடித்த பின்னும் உறிஞ்சிக் கொண்டேயிருப்பதால் வயிற்றிலுள்ள காற்று புகுந்து அஜீரணம், வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுப்பிசம் முதலிய வியாதி கண்டு உபத்திரவப்பட இடமாகும். ஆகையால், குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு தான் பால் கொடுப்பது நல்லது. பால் குடித்து முடித்தவுடனே கொஞ்ச நேரம் தலையை நிமிர்த்தி வைத்திருந்து மெதுவாகத்தொட்டிலில் படுக்க வைக்கவேண்டும். ஏனெனில், பால் கொடுத்தவுடன் குழந்தையை அங்குமிங்கும் அசைத்தால், சில வேளை குடித்த பாலை வாந்தி பண்ணிவிடும்.

சிலர் பசுவின் பாலுக்குப் பதிலாக, ஷாப்புகளில் தகர டப்பாக்களில அடைத்து விற்கப்படும் கட்டிப் பாலை உபயோகப் படுத்துவதுண்டு இதில் அதிகம் சர்க்கரை சேர்ந்திருக்கிறது இதினல் குழந்தைகள் கொழுத்து புஷ்டியாகிறதேயன்றி, தேகத்துக்கு அத்தனை பலம் உண்டாவதில்லை. அநேக குழந்தைகளுக்கு இந்தப் பால் வயிற்றுக்கு ஒத்துக் கொள்ளாமல் வயிற்றோட்டங்கண்டு கொடிய ஆபத்துக்கிடமாகிறது ஆகையால், சுயமான பசும்பால் கிடைக்கக்கூடிய ஸமயத்தில் அதையும் உபயோகிக்க வேண்டுமேயன்றி இந்தக் கட்டிப் பாலை உபயோகிக்கிறது நல்லதல்ல.—இரஞ்சித போதினி.

## PLAGUE.

## ப்ளேக் வியாதி.

ஓர்வகைப் பூச்சி மனுஷ தேகத்திற்குள் பிரவேசிக்கிறதினல், ப்ளேக் உண்டாகிறது. இந்தப் பூச்சி கண்ணுக்குத் தெரியாது. பலமான பூதக் கண்ணுடியால் பார்க்கலாம்.

### ப்ளேக் விர்த்தியாவதற்குக் காரணம்.

சோள விதையை சும்மா வைத்திருந்தால், சிலநாள் கெடாம லிருக்கிறது. மண்ணுக்குள் போட்டுத்தண்ணீர் விட்டால், மண்ணின் சுபாவத்திற்கும் தண்ணீரின் சுபவாவத்திற்கும் சீதோஷ்ணத்திற்கும் தக்கபடி சோளம் பயிராகிறது. மண்ணில் நல்ல எரு விருந்தால், பயிர் அதிக பலத்துடன் முளைத்து வளருகிறது. அதுபோலவே ப்ளேக் பூச்சி சூரியனுடைய வெயிலில் உஷ்ணமாய்க் காயும்போது வெளியில் போட்டால், சுமார் 4 மணி நேரத்தில் செத்துப்போம். அதிக காங்கையான வெயிலாயிருந்தால், இன்னும் சீக்கிரத்திலும் செத்துப்போம். மோர் முதலாகிய புளிப்பு வஸ்துக்களில் அதுசெத்துப்போகிறது பாலில் புளிப்பேறும் வரையில் அது உயிருடன் இருக்கும். பட்டுவஸ்திரம், கம்பளி, துணி, நூல்வஸ்திரம், சாக்குத்துணி இவைகளில் அது ஒரு வாரம் வரையில் சாகாமல் இருக்கிறது. தானியங்களில் அது இரண்டு வாரம் வரையில் சாகிறதில்லை. உப்புத் தண்ணீரில் அது வளர்ந்து

விர்த்தி அடைகிறது. கொதிக்கிற தண்ணீரில் போட்டால், அது உடனே செத்துப்போம். சீதோஷ்ணங்கள் அநுகூலமா யிருந்தால், மனுஷர் உடுத்திக்கொள்ளும் துணிகளில்ஒருமாதம் இரண்டு மாதங்கூட அது சாகாமலிருக்கிறது. காற்றோட்ட மில்லாததும், இருண்டதும், ஈரமுள்ளதுமான வீடுகளில் அதுவிர்த்தியாகிறது. ஆகையால், நெருக்கமான ஜெந்துக்கள் உள்ள கிராமங்களில் ப்ளேக் வியாதி சீக்கிரமாய் பரவுகிறது. ஒரு ஊரில் ப்ளேக் வியாதி உண்டாகி நின்றுவிட்டால், மறுபடியும் அதே ஊரில் அடிக்கடி உண்டாகும்.

ப்ளேக் வியாதி எந்தப் பிராணனை பீடிக்கிறது.

ப்ளேக் வியாதியால் மனுஷாள் மட்டும் அல்ல, மற்றும் எலிகள், சுண்டெலிகள், பெருச்சாள்கள், குரங்கு, பூனை முதலிய பிராணிகளும் சாகின்றன. எலிக்கு மட்டும் இந்த வியாதி வெகு சீக்கிரத்தில் தொத்துகிறது. ஆடு, மாடு, குதிரைகள், பக்ஷிகள் இவைகளைப் ப்ளேக் வியாதி பீடிக்கிறதில்லை.

ப்ளேக்வியாதி தேகத்தில் வெளிப்படையாய்த் தெரிவதற்குச்செல்லுங் காலம்.

இந்த வியாதியின் அபாயகரமான குணங்களில இது ஒரு முக்கியமான குணம். என்னவென்றால், ப்ளேக் பூச்சி தேகத்தில் பிரவேசித்தவுடன் தனக்கு வியாதி உண்டா யிருப்பதாக அந்தவியாதியஸ்தனுக்கு தெரிகிறதில்லை அவன் ஸாதாரணமாய் எப்பொழுதும் போலவே சாப்பிட்டுக்கொண்டு தன் வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறான். சுமார் 5 நாள் முதல் 10 நாள் வரையில் இப்படி யிருக்கிறான் ஆனால் வியாதியஸ்தன் அஸௌக்கியமாய் இருக்கிறானென்று மற்றவர்களுக்குத் தெரியாதே யல்லாமல் வியாதியஸ்தன் தான் அஸௌக்கியமாய் இருப்பதாக நினைக்கிறான். ஆனால் அது அவனுக்கு ஒரு பொருட்டாயிருக்கிறதில்லை யாகையால், அவன் அதை வெளியில் சொல்லுகிறதும் இல்லை, கவனிக்கிறதும் இல்லை. இந்தக்காலத்தில் அவனுக்கு ராத்திரிகளில் கெட்ட கனவு காணும், தூங்கும்போது பயந்து விழிப்பான், தன்னை ஒருவன் ஈட்டி கத்தி முதலிய ஆயுதங்களால் குத்துவது போல் கனவு காணுவான். இந்த காலத்தில் என்ன நடக்கிறது என்றால், இவன் தேகத்தில் புகுந்த ப்ளேக் பூச்சி வெளியில் கிடக்கும்போது அசந்துபோய் விர்த்தியா காமலிருந்த போதிலும், தேகத்தில் புகுந்து ரத்தத்தில் சேர்ந்தவுடன் அதிக விர்த்தியாகின்றது. ஆனால் மனுஷ தேகத்துக்கு ஒரு சுபாவமுண்டு. அதாவது தேகசுகத்துக்கு விரோதமான எதையும் நீக்க முயற்சி செய்யும். உதாரணமாய் காயம் பட்டால், தானே ஆறிவிடும். இதுபோலவே தேகத்தில் 1,10,100,1000 என்று விர்த்தியாய்க் கொண்டிருக்கிற ப்ளேக் பூச்சியைக் கொல்லும் படியான ஒரு வஸ்து தேகத்தில் உண்டாய்க் கொண்டிருக்கிறது. இந்த வஸ்துவினால் கொல்ல முடியாதபடி அவ்வளவு பூச்சி உண்டானால் மட்டுந்தான் தேகத்தில் வியாதி அதிகரிக்கிறது. இப்படிவிர்த்தியாகி ப்ளேக் பூச்சி அதிகப்பட்டுவிட்டால், வியாதி வெளிப்படையாய்த் தோன்றும். இது ஸாதாரணமாய் 5 நாள் முதல் 10 நாள் வரை செல்லும். சில ஸமயங்களில் 10 நாளுக்கு மேலும், சில ஸமயங்களில் ஒரே நாளிலும் தோன்றும். இது தேகவாக்கு முதலியவைகளைப் பொறுத்திருக்கிறது. ப்ளேக் பூச்சிகள் விர்த்தியாகிக் கொண்டே யிருக்கிறது மல்லாமல் அவைகளின் மலம் செத்த பூச்சிகளின் தேகம் முதலியவைகளும் மனுஷ தேகத்தில் தங்கிவிடுகின்றன. மனுஷனுக்கு உண்டாகும் வியாதிக்கு இந்த மலமே காரணமா யிருக்கலாமோ என்று நினைக்கவேண்டி யிருக்கிறது.

ப்ளேக் பூச்சி தேகத்தில் பிரவேசிக்கும் விதம்.

தேகத்தில் சிறிய காய மிருந்தால், அதன் வழியாகவும் வாய் மூக்கு இவைகளின் வழியாகவும் ப்ளேக்பூச்சி மனுஷ தேகத்தில் பிரவேசிக்கிறது. கொசு, மூட்டைப்பூச்சி முதலியவைகள் மனிதனைக் கடித்தால், உடனே சொரிகிறான். அப்போது தேகத்தில் காயமுண்டாகிறது. இந்தக் காயத்தின் வழியாக ப்ளேக் பூச்சி தேகத்தில் பிரவேசிக்கிறது. ப்ளேக் வியாதினால் செத்துப்போன எலியின் பேரில் அநேக பூச்சிகள் இருக்கின்றன. ஆகையால், இந்த எலியைக் கையினால் தொட்டால், இந்தப் பூச்சிகள் மனிதனைக் கடிக்கின்றன. இதனால் ப்ளேக் பூச்சி மனிதனுடைய தேகத்தில் பிரவேசிக்கிறது.

ப்ளேக் வியாதிக்குரிய குறிகள்.

கிச்சு, துடைச்சந்து, பிடறி முதலிய இடங்களில் கட்டி காணும். மனிதன் அயர்ந்துபேசாமலிருக்கிறான். பல் கொஞ்சம் வெளியில்

தெரியும். அது உலர்ந்து போயிருக்கும். உடம்பு காயும். கண் சிவந்திருக்கும். படுக்கையில் புரளுவான். வீடு ஊர் இவைகளை விட்டு அப்புறம் போகவேண்டுமென்று ஆசையுண்டாகும். புத்தி நிலையில்லாமலிருந்து பின்பு மாருட்டமாகும். குடித்து வெறிகொண்டவன் போல் உளறுவான். காய்ச்சல் 104டிகிரி வரையில் இருக்கும். அடிக்கடி மூச்சு விடுவான். நாக்கு அழுக்குப் பிடித்து பிளந்திருக்கும். வாந்தி காணும். மலம் ஸரியாய் வெளிப்படாது. சில ஸமயத்தில் மூக்கிலும் ஆஸனத்திலும் ரத்தம் வடியும். சிலஸமயம் காலராமாதிரியாக வாந்தியும் பேதியும் கண்டு மனிதன் அயர்ந்து போவான். ஆனால் காலரா மாதிரியாக கஞ்சி கஞ்சியாய் வயிற்றில் போகிறதில்லை. சில ஸமயம் ஜன்னி காணும். ஆனால் காலரா கண்டால், உடம்பில் காய்ச்சல் இராது. உடம்பு குளிர்ந்திருக்கும், ப்ளேக் வியாதி கண்டால், உடம்பு காயும், சிலஸமயம் இருமல் காணும். கர்ப்பமாயிருக்கிற பெண்களுக்கு ப்ளேக் வியாதி கண்டால், கரு வெளிப்பட்டுப்போம். பின்பு அவர்கள் தவருமல் செத்துப்போகிருர்கள்.

## மனுஷ தேகத்திலிருந்து ப்ளேக் பூச்சி எப்படி வெளிப்படுகிறது?

மனுஷனுடைய தோலின் வழியாக ப்ளேக் பூச்சி தேகத்துக்குள் புகுந்தால், தேகத்தில் உள்ள அவயவங்கள் அவைகளை தேகத்தில் ஓடவிடாமல் தடுக்கின்றன. அப்படித் தடுத்து நின்றுகொண்டால், கட்டிகள் உண்டாகின்றன. அப்படி நில்லாமல் ப்ளேக் பூச்சிகள் ரத்தத்தோடு கலந்து ஓடினால், அவைகளிலிருந்து உண்டாகும் மலத்தினால் ப்ளேக் வியாதி காணுகிறது. ஆகையால், கட்டி காணுகிற ப்ளேக்குகளில் மனிதனுடைய எச்சில், மலம், மூத்திரம் இவைகளில் ப்ளேக் பூச்சிகள் முதலில் காணப்படுகிறதில்லை. ஆனால் வியாதி முதிர்ந்தபின் ப்ளேக் பூச்சிகள் காணப்படுகிறது. மற்ற வியாதிகளில் ஆரம்பத்திலேயே மனிதனுடைய மலம், மூத்திரம், எச்சில் இவைகளில் ப்ளேக் பூச்சிகள் நிறைந்திருக்கின்றன.

## ப்ளேக் வியாதியை எப்படி ஓட்டுகிறது?

ஒரு இடத்தில் எவ்வளவு அழுக்கு இருந்தாலும் ப்ளேக் பூச்சி வெளியிலிருந்து வந்தாலொழிய அங்கே ப்ளேக் வியாதி உண்டாக மாட்டாது. ப்ளேக் வியாதி கண்ட மனுஷாள் ப்ளேக் இல்லாத ஊரில் போனால், அங்கே ப்ளேக் பூச்சிகளைக் கொண்டுபோய் விட்டுவிடுகிருர்கள். அவர்கள் போகும்போது அவர்கள் கொண்டுபோகும் துணி தானியம் முதலிய வைகளின் வழியாகவும் ப்ளேக் பூச்சிகளைக் கொண்டுபோய் விட்டுவிடுகிருர்கள் எலிகளுக்கு இந்த வியாதி சீக்கிரத்தில் ஒட்டிக் கொள்ளுகிறபடியால், வியாதி கண்ட எலிகள் வியாதி இல்லாத ஊருக்குள் போனால் அங்கே ப்ளேக் பூச்சிகளைக் கொண்டுபோய் விட்டுவிடுகின்றன. அதிலும் ஒரு எலிக்கு வியாதி கண்டால், மற்ற எலிகளெல்லாம் அதைத் தின்றுவிடும் குணம் அவைகளுக்கு உண்டு. ஆகையால், அவைகளுக்குள் வியாதி சீக்கிரத்தில் பரவுகின்றது. அல்லாமலும் ஒரு இடத்தில் எலிகள் அதிகமாய் சாகிறதைக் கண்டால், மற்ற எலிகளெல்லாம் அந்த இடத்தை விட்டு ஓடிப்போம். அப்படி அவைகள் போகும்போது வியாதியைக் கூடவே கொண்டுபோகிறபடியால், வியாதி வெகு சீக்கிரத்தில் பரவுகிறது. ஆனால் ஒரு ஜாதி எலி மற்ருெரு ஜாதி எலியைப் பக்கத்தில் சேர்க்கிறதில்லை. ஒரு ஊரிலிருக்கிற வியாதியை எலிகள் பக்கங்களில் உள்ள ஊர்களுக்குக் கொண்டுபோகக் கூடுமானாலும், அநேகமாய் எலிகளின் மூலமாய் வியாதி பரவுகிறதில்லை. மனிதனே ஒரு இடத்திலிருக்கும் வியாதியை மற்ருெரு இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிருன். தானியங்களில் ப்ளேக் பூச்சி ஒட்டியிருந்தால், அந்த தானியம் எந்த ஊருக்குப் போகிறதோ, அந்த ஊரில் உள்ள எலிகள் அந்த தானியத்தைத் தின்பதினால், முதல் முதலில் ப்ளேக் பூச்சி அவ்விடத்தில் குடிகொள்ளுகிறது. ப்ளேக்வியாதி கண்ட எலிகளின் மலம், மூத்திரம், தானியங்களில் கலந்திருந்தால், அந்த மலம் மூத்திரங்களின் வழியாக ப்ளேக் பூச்சிகளும் வேறே ஊர்களுக்குப் போகக்கூடும். எப்படியானாலும் ஒரு ஊரில் எலி செத்து விழுந்தால், ப்ளேக் வியாதி ஊருக்குள் வந்திருக்கிறது என்று நிச்சயமாய்த் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது. இதற்கு மருந்து ப்ளேக் இருக்கும் இடத்தை விட்டு அப்புறம் போய் விடவேண்டியதுதான்.

## REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### A SUGGESTION TO THE RYOT.

### விவஸாயிக்கு ஒரு யோசனை.

நிச்சயமாய் ஜல முண்டு என்று ஏற்படாத நிலங்களில் கொஞ்ச ஜலத்தையும் மழையையும் நம்பி நெல் பயிரிட்டு அடிக்கடி மோசம் போவதைவிட வேறு பயிரை ஸாகுபடி செய்வது நலம். இந்த விஷயத்தைப்பற்றி ஜூன் மாஸத்துக் 'கிருஷினில்' ஒரு நல்ல யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மேல் சொன்ன நிலங்களில் நெல்லுக்கு பதிலாக மக்காச் சோளத்தைப் பயிரிடுவது.

இந்த மக்காச் சோளம் அமெரிக்காவில் ஏராளமாய்ப் பயிரிடப்பட்டு அங்குள்ள ஜனங்கள் அதை நெல், கோதுமை, போலவே சாப்பாட்டுக்கு உபயோகித்து வருகிறார்கள். அதை மாவாக்கி ரொட்டி செய்து சாப்பிடுகிறார்கள்.

"இந்தியாவிலும் அயோத்தியா முதலிய இடங்களில் இதை ரொட்டி செய்து சாப்பிடுகிறார்கள். தற்காலத்தில் நமது கடைகளில் சிறு பொட்டணங்களாகக் கோதுமை மாவு என்று விற்கப்படும் மாவு மக்காச் சோளமாவேயொழிய கோதுமை மாவல்ல, குதிரைகளுக்கும் மாடுகளுக்கும் சென்னப்பட்டணம் முதலான பட்டணங்களில் கோதுமைத் தவிடு என்று பேர்பெற்று வழங்குக் தவிடு மக்காச் சோளத் தவிடேயொழிய கோதுமைத் தவிடல்ல, தற்காலம் நம்மில் அனேகர் பல காரங்களுக்கும் ரொட்டி பிஸ்கோத்துகளுக்கும் கோதுமை மாவென்று பாவித்து இதைத் தான் உபயோகப்படுத்தி வருகிறார்கள். ஆகையால், இதை அரிசிக்குப் பதிலாகவும், சோளம், கேழ்வரகு முதலான தானியங்களுக்குப் பதிலாகவும் உபயோகிக்கக்கூடு மென்று நமக்குத் தெரிந்திருந்தபோதிலும் நாம் அதை உபயோகத்திற்குக் கொண்டுவரவில்லை."

நெல்லுக்குப் பதிலாக மக்காச்சோளத்தைப்பயிர் செய்வதால், உண்டாகும் பலன்களாவன:—

1. சற்றேறக்குறைய நெல்லைப் போலவே ஸாதாரண நிலங்களில் லாபம் வரும்.

2. மாடுகளையும் மனிதர்களையும் நெல்லைப் போலவே போஷிக்கக்கூடிய வஸ்துவா யிருக்கிறது.

3. நெல் பயிருக்கு வேண்டியது போல அவ்வளவு ஜலம் வேண்டியதில்லை. ஆகையால், மழை இல்லாத காலங்களில் நஷ்டம் நேரிடாது.

4. நெல் பயிருக்கு ஏககாலத்தில் நோய் நொடி வந்துவிட்டால், அதனால் ராஜதானிக்குப் பஞ்சம் வந்துவிடாது.

---

### VARASULKAM.

### வரசுல்கம்.

தை, மாசி மாஸத்து 'வித்யாவிஹாரணி' ஸஞ்சிகைகளில் ஸ்ரீமான் எஸ்.கே. யக்ஞநாராயண அய்யர் வரசுல்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து அது ஏற்பட்டதற்குக் காரணங்களை பின்வருமாறு கூறுகிறார்.

1. வரதக்ஷிணை என்பது நாம் விவாக காரியத்தை ஸம்ஸ்காரமாகக் கொள்ளாமல் லௌகிகமாக்கி விட்டதனால் வந்த அனர்த்தம்.

2. நம்முடைய தாரித்திரியமே இதை இவ்வளவு தூரம் பிரபலிக்கச் செய்ததாகும்.

3. மற்ற சரக்குகளைப் போலவே இதுவும் கொள்வோர் கொடுப்போர் ஆகிய இருதிறத்தாருடையவும் 'அடியந்திரத்தைப்' பொறுத்தது. வரசுல்கம் கிடைப்பது இங்கிலீஷ் படித்துத் தேறுவதை யனுஸரித்து மேற்படுகிறது.

4. இங்கிலீஷ் படித்துத் தேறுவது ஒரு பெரிய அசுவமேதமாகிவிட்டதால், இதற்காக முதல் போட்டிருப்பவரும், இனிப் போடப் போகிறவரும், பெண்ணைப் பெற்றவர்களைக் கொண்டு கூடிய மட்டில் பர்த்தி பண்ணிக் கொள்ள வேண்டுகிறார்கள். ஏனெனில், இந்த வியாபாரத்தினால் கிட்டும் லாபத்தைப் பிற்காலத்தில் அந்தப் பெண்ணும் அனுபவிப்பது பிரத்தியக்ஷமானது கொண்டு.

5. ஆதலால்தான் நம்முள் ஏழை, தனவான் என்கிற நியமமில்லாமல், எல்லாரும் வேகிற வீட்டில் பிடுங்கினது லாபமாகக் கொள்ளையடிக்கிறார்கள்.

6. பணம், வித்தை, இரண்டும் அற்றவர்களும் தக்ஷிணை வேண்டுவது, ‘கூடக்கிடந்த குற்றத்தின் மகிமை’ யாம்.

7. பெண்ணைப் பெற்றவர் அப்பெண் ரஜஸ்வலையாகுமுன் அதை எந்தக் கழுதையின் காலிலாவது கட்டித் தீரவேண்டுமென்றும், அதிலும் வர்க்க விஷயத்தில் பத்தரை மாற்றுக் குறையாமலிருக்கும் வம்சத்திலுள்ள பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமென்றும் இருப்பது கொண்டு அவர்கள் படும் உபத்திரவம் வெகுவாய்க் கூடிவிட்டது.

8. இது வைசிக சம்பவமான காரியமாகிவிட்டதால், ஒருவருக்கு நஷ்டமென்றாலும், மற்றக் கக்ஷிக்கு லாபமாகக் காணுவதால், பெண்ணைப்பெற்றவர் வயிற்றெரிச்சல் படுவதில் பிரயோஜனமில்லை.

9. அழகு மாப்பிள்ளை நமக்கு வேண்டுமென்றும், அதனால் தான் நமது பெண்ணுக்கு ஸௌக்கியமென்றும் எண்ணும் வரையில் நாம் தக்ஷிணை கேட்பவருக்குக் கொடுத்துத் தான் தீரவேண்டும்.

ஸ்ரீமான் யக்ஞநாராயண அய்யர் இப்படிக் காரணங்களை எடுத்துக் காட்டிவிட்டுப் பரிகாரங்களாகச் சொல்லுவதாவது :—

1. சாஸ்திரங்களையும், மதக் கோட்பாடுகளையும்சற்று விமரிசையாகப் படித்து, அதையனுஸரித்துக் கல்யாணம் என்பது வைதிக ஸம்ஸ்காரமே யல்லாமல், வைசிக வியாபாரமல்லவென்று ஸாமான்யமாய் எல்லாரையும் அறியச் செய்வது,

2. ஸாமான்யமாய் யாரும் ‘ஊருடனொத்து வாழ’ வேண்டுவதால், அந்த ஊரை நல்லதாக்கி, அதிலுள்ளவர்களுடைய முரட்டுத்தனத்தைக் குறைத்து, விவேகத்தைப் பெருக்கி வருவது.

3. அங்கங்கே ஸபைகள் கூட்டி, அதில் உழைக்கும் மெம்பர்கள் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் பொறுத்த மட்டில் மூரிப் பணம் வாங்குவதில்லை யென்று ப்ரமாணஞ் செய்துகொண்டு அந்தப்படித் தாங்கள் நடப்பதுடன், தங்கள் தாக்ஷண்யத்திற்குக் கட்டுப்பட்டவர்களை யெல்லாம் அப்படியே நடக்கும்படி நிர்ப்பந்திப்பது.

4 பெண்குழந்தைகளுக்கு வித்தை முதலிய அழகுகளைப் பெருக்கி, அம்மூலமாக நம்மவர்கள் ‘பெண்ணை’ வேண்டிக் கல்லியாணம் அல்லது, ‘பொன்னை’ வேண்டிக் கல்லியாணத்திற்கு ஆக்கிரகப்படாமல் செய்துவருவது.

5. ப்ராம்மணர்களுக்குள் இவ்விஷயத்தில் காணும் வர்க்க பேதங்களை சீக்கிரம் ஒழித்து, இனிமேலாகிலும் ‘சிஷ்டாசாரம்’ பெருகும்படி செய்வது.

6. ‘ரஜஸ்வலை’ விஷயமாக ஏற்பட்டுள்ள ஸ்ம்ருதிகளை மறந்து (நம்பூதிரிமாராகிய ப்ராம்மணருக்குள் காணுவதுபோல் ஆசாரம் ப்ரபலிக்கும்படி செய்து,) பெண்ணைப் பெற்றவர் சிறிது சிறிதாகப் பெண்களுக்கு வயது கூடும்படி விட்டு, அப்படிக் கூடிய பிறகு நடக்கும் விவாகங்களுக்கு நிர்ப்பந்தங்களொன்றும் ஏற்படாமல் ஊரில் பெரியவர் உழைத்துவருவது.

7. வயது, ஞானம், சீலம் முதலிய குணங்கள் நன்றாயமைந்து, யாவராலும் பூஜிக்கப்படும் பெரியவர்களில் சிலர் ஒரு ஸ்ம்ருதிப் பரிஷத்தாக ஏற்பட்டு, ஆங்கங்கே போய் ப்ரஸங்கம், ப்ரவசனம் முதலிய ஸாதனங்களால் இவ்விஷயங்களை மகாஜனங்களுக்குள் பெரும்பாலர்க்கு விளக்கி, அவர்களுடைய ஸம்மதங்கொண்டு, அடிக்கடி இந்த நடவடிக்கைகளைப் பிரசுரித்து, இவ்விஷயத்தில் ஆசரணை நல்ல மார்க்கத்தில் திரும்பி ப்ரபலிக்கச் செய்வது,

## SOME LESSONS FROM INDIAN HISTORY.

## இந்திய சரித்திரத்திலிருந்து சில புத்திமதிகள்.

'வித்யாவிஹாரிணி'ப் பத்திரிகையில் சரித்திர ஸம்பந்தமான அநேக அரிய விஷயங்கள் பிரசுரமாகின்றன. ஸமீபத்தில் க்வாலியர் மகாராஜர் மாதவராவ் ஸிந்தியா அவர்கள் இந்து தேச சரித்திரத்திலிருந்து நாம் அறியக்கூடிய ரகஸ்யங்களைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்தார். அந்த உபந்யாஸத்தின் முக்கிய அம்சங்கள் வித்யா விஹாரிணியின் மாசி மாஸத்து ஸஞ்சிகையில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியா தேசம் இங்கிலீஷ்காரர் ஆளுகைக்குள் வருவதற்கு முன் வெகு துர்தசையிலிருந்தது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். அப்படிக்கு இருந்ததற்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால்,—

1. ராஜ்யபாரந் தாங்கி வந்தவர்கள் ஒழுங்காக ஏதேனும் நல்ல லக்ஷிய மொன்றை முன்னிட்டு நடத்தி வரவில்லை யென்பது ஒன்று.

2. ராஜ்ய நிர்வாக உத்தியோகஸ்தரிடத்தில் ராஜாக்களுக்கு விசுவாச மில்லாத தொன்று.

3. ராஜாக்கள் யோக்கியதையை விசாரிக்காமல் கண்டவர்களுக் கெல்லாம் அதிகாரங் கொடுத்த தொன்று.

4. தேசங்களில் நடப்பதை விசாரியாமலே ராஜ்யபாரம் நடத்திய தொன்று.

5. பரிஜனங்களுடைய கோள்களைக் கேட்டு அக்கிரமம் நடத்திய தொன்று.

6. விவகாரங்களைப் பாரபக்ஷ மில்லாமல் தீர்க்காத தொன்று.

7. ராஜ்ய மெங்கும் கலகம் அடங்கிப் பரஸ்பர ஸ்நேகம் வளரவேண்டு மென்கிற அக்கரை யாருக்கு மில்லாத தொன்று.

8. அதிகாரத்தில் அமர்ந்தவர்கள் தர்மத்ரோகிகளாகி ப்ரபலித்த தொன்று.

9. மத விஷயத்தில் ஸமபக்ஷமாய் நடவாத தொன்று.

10. வைசிக முறைகளில் தேச க்ஷேமத்தை நாடாத தொன்று.

இப்படிப்பட்ட காரணங்களால் ஜனங்கள் ஒன்று சேராமலும் தேசம் முன்னுக்கு வராமலும் போயின. மேற்சொன்ன குறைகளெல்லாம் இங்கிலீஷ்காரர் வந்த பிறகு ஒழிந்து விட்டன. ஜனங்கள் மத விஷயமாய் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளாமல் எல்லா ஜாதியாருக்கும் பகவான் ஒருவர்தா னென்றும், நம்முடைய பாப புண்ணியங்களை ஏதோ ஒரு காலத்தில் அவருக்குத்தான் ஒப்புவிக்க வேண்டு மென்றும், ஞாபகம் வைத்துக் கொண்டு தேசத்து ஜனங்களுடைய க்ஷேமம் முன்னேறும்படி சில ஸாதனங்களை எல்லாரும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டும். அவைகளாவன :—

1. தகரார்களை யெல்லாம் பைஸல் செய்வதற்குப் பஞ்சாயத்தார்கள் எங்கும் ஏற்படவேண்டும். ஜனங்கள் கோர்ட்டுகளுக்குப் போய்க் கோவணாண்டிகளாகக் கூடாது.

2. கல்வி எங்கும் பரவவேண்டும். அதுவும் கவைக்குதவக் கூடியதா யிருக்கவேண்டும்.

3 துரைத்தனத்தாருக்கும், ப்ரஜைகளுக்கும் பரஸ்பர ஸ்நேகம் விர்த்திக்கும்படி பார்க்கவேண்டும்.

4. நாம் பேசுவதிலும் எழுதுவதிலும் தேச க்ஷேமத்தைக் கோரி, உள்ள துக்கங்களை உள்ளபடி வர்ணித்து வரவேண்டும், மனதைப் புண் பண்ணும்படி பேசுவதில் யாருக்கும் ப்ரயோஜன மில்லை.

5. எல்லாக் கேடுகளுக்கும் மூலகாரணம் பசியேயாதலால், இத்தேசத்தாருக்குள் யாரும் பசியினால் வருந்தாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

# REVIEWS OF BOOKS.
## புஸ்தக ஆராய்ச்சி.

THE MYSTERY OF REVIVAL.

அக்ஞாத வாஸம் அல்லது மாண்டவன் மீண்ட மாயம்—இது ஒரு துப்பறி நாவல். ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர் பீ.ஏ., பி. எல், அவர்களால் எழுதப்பட்டு மதுரை வித்தியா பானுப் பத்திராதிபர்களாகிய ம. கோபால கிருஷ்ணய்யர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

"1885-ம் வருஷம் நாடெங்கும் பிரபலமாயிருந்த 'மங்களபுரம் கொலை' விஷயமும், அதில், மங்களபுரத்தில் வஸித்துவந்த சோமுவென்பவர் இறந்ததும், அவர் பிரேத மகப்பட்டதும், அவருடைய கொடும் பகைவனை தர்மராஜு காணுமற்போனதும், அவர் மனைவி ஜானகியம்மாள் குற்றஞ் சாட்டப்பட்டு விடுதலையானதும், எவ்வளவோ நுட்ப தர்சிகளாகிய போலீஸ் நிபுணர்களாலும் கூட இம்மாயக் கொலையின் ரகஸ்யம் இதுவரை கண்டுபிடிக்கப்படாது, மற்ற மாயங்களைப் போலவே இம்மங்களபுரம் கொலையும் மனிதர் மனத்தினின்றும் மாயப் பழங்கதையாய் மறைந்ததும், அதின் ரகஸ்யம் கடைசியாக சோமுவின் புதல்வன் ராமஸ்வாமியின் முயற்சியாலும், பாலிய வக்கீல் கைலாஸத்தின் புத்தி நுட்பத்தாலும், 20 வருஷங்களுக்குப் பிறகு வெளியாகும்படி ஸம்பவித்ததும் இச்சிறு நாவலின் முக்கிய கதாம்சமாக அமைந்திருக்கின்றன."

புஸ்தகம் டிம்மி ஸைஸில் 164 பக்கமுள்ளது. விலை அணு 8

PANDYAM.

பாண்டியம்.—போன டிஸம்பர் மாஸத்தில் ஏகலிபி கான்பரென்ஸ் என்பதாக ஒரு கூட்டம் அலஹாபாத்தில் கூடிற்று. இந்தியா தேசம் முழுவதும் ஒரே பாஷையும் ஒரே எழுத்தும் இருப்பது நலமென்றும், அதற்காக ஹிந்தி பாஷையை எல்லாரும் படித்து தேவநாகர எழுத்தையே உபயோகிக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. இந்தப்படி நிறைவேறக்கூடுமானல், தேசத்துக்கு நல்லதுதான். நிற்க, எல்லாப் பாஷைகளையும் எழுதும்படியாக ஒருவகை புது லிபியை செந்தமிழ்ப் பத்திராதிபராகிய திரு. நாராயணய்யங்கார் அமைத்திருக்கிருர். இந்த எழுந்துக்கள் இங்கிலீஷில் 'ஷார்ட்டு ஹாண்ட்' என்று சொல்லப்படும் அக்ஷரங்கள் போலிருக்கின்றன. பார்வைக்கு அழகாயும் தெளிவாயுமிருப்பதோடு எழுதுவதற்குச் சுலபமாகவும் இருக்கின்றன. இந்த லிபி ஸ்ரீமான் பாண்டித்துரை அவர்களுடைய உபகாரத்தால் முடிக்கப்பட்டதால், அதற்கு பாண்டியம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது புஸ்தகத்தின் விலை அணு. 4.

TAMIL ILAKKA ARAMBA VILAKKAM.

தமிழ் இலக்க ஆரம்ப விளக்கம்.—முனையாடுவார் சங்கத்தாரால் இயற்றப்பட்டது. கும்பகோணம் சோலையப்ப முதலியார் தெருவிலிருக்கும் வெ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது. விலை அணு ஒன்று.

VALMIKI RAMAYANAM.

வால்மீகி ராமாயணம்.—இதன் 10, 11 ஸஞ்சிகைகளை சென்னை, எல் வி. ராமச்சந்திரய்யர் அவர்களிடத்திலிருந்து வரப் பெற்ருேம். அயோத்யா காண்டம் 100-வது ஸர்க்கத்தில் முன் சென்றது போக, பாக்கி முழுமையும் ஆரண்ய காண்டத்தில் 4-வது ஸர்க்கத்தில் கொஞ்சமும் இந்த ஸஞ்சிகைகளில் அடங்கி யிருக்கின்றன.

## BOYS' SECTION.
## சிறுவர் பகுதி.

---

### A GIANT.

ஓர் ராட்சதன்.—அமெரிக்காகண்டத்தின் உத்தரத்திலுள்ள கனடா தேசத்தில் ப்ரான்சு ஜாதியனுகிய எட்வர்ட் பாவா என்பவன் 11 அடி உயரமுள்ளவனுயிருக்கிறன். அவனுக்குவயது 30. அவன் நிறை 587 ராத்தல், அவன் கை 18 இஞ்சும், பாதம் 24 இஞ்சு நீளமும் 12 இஞ்சு அகலமும் இருக்கின்றன. அவனுடைய உடுப்பு ஸாதாரண மனிதர்களில் பத்துப்பேர் அணியலாம். இவன் சிறு வயது முதல் சரீர விஷயத்தில் அதிக கவனத்தைச் செலுத்திவந்ததால், எப்போதும் உற்சாகியா யிருக்கிறன்.

### THREE OLD RULES.

மூன்று பழைய விதிகள்.—"பெலனடையும் வழி" என்பதாக வில்லியம்ப்ளாக்கியென்பவர் பின்வரும் விதிகளைக் குறிக்கிருர்.

1. நிற்கும்போதும் இருக்கும்போதும் நடக்கும்போதும் தேகம் நிமிர்ந்திருக்கட்டும். அதிகமாய்ச் சுவாசி. இப்பழக்கம் சுவாசப்பை, ஜீரண உறுப்புகளை நன்னிலப்படுத்தி வேலைகொள்ளும். ரத்தத்திலே ஆக்விஜன் நிரம்பவும் அடையப் பெறுதலால், போஜனம் ஜீரணமாகிக் கழியும்.

2. நேரத்துக்கு நேரம் சுவாசப்பை நிறையக் காற்றைப் பூரித்துக் கூடியமட்டும் நெஞ்சிலடக்கி வந்தால், குழப்பமான நாடி நாளங்கள் சீரடையும்.

3. சாப்பாடு முடிந்த பிற்பாடு கொஞ்சநேரமாவது ஆறுதலா யிருக்கப்பார். அப்பொழுது நீ உட்கொண்ட போஜனம் ஏற்ற பிரகாரம் தொழிற்பட்டு உபயோகமாகும்.

இன்னும் அவர் சொல்வது :—மெலிவான சரீரிகள் அநேகர் அமைதியாயிரார். ஆறுதலாய்க் கருமஞ்செய்யார். போதிய அளவு இளைப்பாரமாட்டார். அவர்கள் விசேஷமாகத் தங்கள் ஜீரண உறுப்புகளும் பிற அவயவங்களும் சீரடையும்படி நன்ருய்ச் சுவாசிக்கவேண்டும்.

### AN ELEPHANT THAT SAVED THE MAHOUT.

எஜமானனைக் காத்த யானை.—மே மாதம் 7-ந் தேதி ரங்கூன் கெஜட்டில் பின்வரும் ஸமாசாரம் வரையப்பட்டிருக்கிறது.—கூர்க்க ஜாதியைச் சேர்ந்த ஒரு மாஹுத்தன் தனது யானையை நன்ருய்க் கழுவிக் குளிப்பாட்டி நாணலடர்ந்தகாட்டிற்குமேய்க்க நடத்திக்கொண்டு போனன். அப்போது ஒரு புலி அம்மாஹுத்தன்மேல் பாய்ந்து தனது கூரிய நகங்களால் அவனைக் கிழிக்க யத்தனிக்கையில் மாஹுத்தன் "கூ கூ" என்று கத்தினன். தனது எஜமானனது பரிதாபக் குரலைக் கேட்ட யானை உடனே ஓடிவந்து புலியைத் தனது முன்னங்காலால் ஒரு உதை கொடுத்தது. யானைகொடுத்த உதைபால் புலி ரத்தத்தைக் கக்கிக்கொண்டு உருண்டுருண்டு சற்று தூரத்திற் கப்பால் போய் விழுந்து செத்தது. மாஹுத்தன் இப்போது ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறன். அவன் தேக ஸ்திதி குணமடைந்தே வருகிறதென ஸமாசார மெட்டுகிறது. என்ன ஆச்சரியம்! கேவலம் ஒரு யானைக் கிருக்கும் நுண்ணறிவைப் பாருங்கள்.

### BE TRUTHFUL.

மெய்யுடையோனுதக.—1. மனிதன் அனுஸரிக்க வேண்டிய விஷயங்களில் மெய்யொன்றே முக்கியமும் முதன்மையுமானது.

2. எப்போதும் மெய் முன்வந்துநிற்கும். பொய் புறங்காட்டியோடும்.

3. மெய்யுடையோனே மதிப்புடையோனுவான்.

4. மேன்மையான விஷயங்களுக் கெல்லாம் மேன்மையானது மெய்யே. அதை வெறுத்தவன் வீணனுவான்.

5. உண்மை விசுவாசி யுலகப் பிரவித்தன்.

6. உலக நன்மைகளுக்கு ஏற்ற விதை உண்மையே.

7. உன் நாவின் நுனியை உண்மையின் அஸ்திபாரமாக்கு.

8. உன் மனச்சாட்சிக்கு ஒருபோதும் பொய்யனுகாதே.

9. மெய்யை நாட்டினல் மெய்யனுகுவாய்.

10. பிசகைத் தள்ளிப் பிசாசை வெற்றிகொள்.

11. இருளானது நட்சத்திரங்களைக் காண்பிப்பதுபோல விஸனமானது உண்மையைக்காண்பிக்கும்.

12. வார்த்தையையும் செய்கையையும் பாறுபடக்காட்டாதே.

13, உண்மைப் பிரகாசம் உன்மனதில் தரித்தால், உன்னத மகிழ்ச்சி உனக்கே சுதந்தரம்.

14. மெய்யைக் கண்டால், முன்னேக்கிநட, பொய்யைக்கண்டாற் பின்வாங்கிநில்.

15. உண்மையையொத்த உறுதியான நேசர் உலகத்தில் எங்கும் ஒருவருமில்லை.

CARE OF THE EYES.

நேத்திரஸம்ரக்ஷணம்.—1. கண்கள் சோர்வடைந்திருக்கும்போதும் வெளிச்சம் குறைவாயும் அல்லது அதிகமாயிருக்கும்போதும் திருஷ்டித்துப் பார்ப்பது பிசகு. 2. நாம் படிக்கும்போதும் எழுதும்போதும் விளக்கு வெளிச்சம் இடது புறத்திலிருந்து வரும்படி வைக்கவேண்டும். 3. படிக்கும் அறை குளிர்ச்சியாயும், நமது கால்கள் சூடாயும் கழுத்து தாராளமாயும் இருக்கவேண்டும். 4. படிக்கும் புஸ்தகம் கண்களுக்கு 15-அங்குல தூரத்தில் நேராக இருக்கவேண்டும். வண்டியின்மேல் பிரயாணம் செய்யும்போதும் படுத்திருக்கும்போதும் படிக்கலாகாது. 15-அங்குலத்துக்கு மேற்பட்டால் தூர திருஷ்டியும், குறைந்தால் ஸமீப திருஷ்டியும் உண்டாய் நேத்ர ரோகங்கள் ஏற்படும். 6 காலையில் சாப்பிடும் முன் எழுதுகிறதாவது படிப்பதிலாவது அல்லது வேலைசெய்வதிலாவது கண்களை உபயோகப்படுத்தக்கூடாது. 7. வியாதிக்காரனுயிருந்து ஆரோக்கிய மடைந்த வேளையில் நேத்ரங்களை உபயோகிப்பது பிசகு. 8. விநோதார்த்தம் கண் விழிகளைத் திருப்பக்கூடாது. 9. கண்களுக்கு தூர திருஷ்டி அல்லது ஸமீபப் பார்வையுண்டாயிருந்தால், தக்க சிகிச்சை செய்துகொள்ள வேண்டும் 10. நடக்கும்போது திருஷ்டியை தூர உபயோகிப்பதும் அடிக்கடி மாற்றுவதும் நேத்ரத்துக்கு அபாயம். 11. கண்ணீர் வரும்படியான காரியங்களைச் செய்யக்கூடாது. 12. கடுமையான நோய்கள் வந்தபோது உத்தமனை நேத்ர வைத்தியனிடம் காட்டவேண்டும். 13. அஞ்சனம், கலிகம், முதலியவைகளை உபயோகிப்பது தவறு. 14. நித்திரையிலிருந்து எழுந்தவுடன் அதிக வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாது: ஒரு வெளிச்சத்துக்கு இன்னெரு வெளிச்சத்தைக் கிரஹித்துக்கொள்வதற்கு சக்தியுண்டு. சூரியனை நமது கண்கள் கண்டவுடன் தமது பிரகாசத்தை சூரியனிடம் பறிகொடுத்து விடுகின்றன. நமக்கு அப்பபோ பார்ப்பதெல்லாம் இருட்டாகவே தோன்றும். பிறகு கண் பழையபடி தனது பிரகாசத்தை யடைகிறது. 15. நிர்மல வாயு ஸஞ்சார மில்லாத அறைகளிலும், ஆகார மில்லாததாலும் அதிக போஜனத்தாலும் கண்களுக்கு நோயுண்டாகும். 16. மேகநீர் கண்களில் இறங்கி அது காரணமாகவும் பார்வை கெட்டுவிடும். இதற்கு சிகிச்சை:— ஒரு தோலா அபின், ஒரு வீசாடம் எள்ளெண்ணெய், புளியிலைச் சாறு ஒரு படி, எண்ணெயையும் சாற்றையும் கலந்துகொண்டு அதில் அபினைக் கரைத்துவிட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். அபின் வாஸனை யுண்டானதும் அது பக்குவமாகக் காய்ச்சினதற்கு அடையாளமென்று கண்டுகொண்டு இறக்கி ஆறவைத்து, தாம்பிர பாத்திரம் நீங்கலாக வேறெதிலேனும் பத்திரப்படுத்திக்கொள்ளவும். வாரத்துக்கு மூன்று தடவை காலைஸ்நானம் நல்லது. நன்ருக ஊறவேண்டும். ஸ்நானம் செய்த தினம் புளி மட்டும் நீக்கிப் பத்திய மிருக்கவேண்டும். இது அனுபவ முறை. 17. பிரமேக ரோகத்தில் நீர்த்தாரையிலிருந்து வெளிப்படும் ஜலம் முதலியவற்றில் கைப்பட்டிருந்தால், நன்ருக்க் கழுவவேண்டும். அந்தக்கை கண்களில் பட்டால், அத்துர்நீர் கண்களில் இறங்கி கண்ணைக் கெடுத்துவிடும். 18. அன்றன்று ஸ்நானம் செய்து கொண்டபிறகுதான் வெளிப்பட வேண்டுமென்ற கட்டுப்பாடும், வாரத்திற்கு இரண்டு முறை எண்ணெய் ஸ்நானமும் நேத்திர ஸம்ரக்ஷணத்திற்கு நல்ல மார்க்கங்கள். "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு" என்று பெண்களும் சொல்லுவார்கள். ஐயோ! கண்ணில்லாதவன் வாழ்க்கை எத்தனை பரிதாபகரமானது? அவனுக்கு இவ்வுலக ஸுகம் ஏது? பால்யம், யௌவனம் இவற்றின் பலத்தால் உடனே கண்களுக்குக் கெடுதி நேரிடா திருக்கலாம். ஆனல் பிறகு வட்டியும் முதலுமாக வாங்கப்படுமென்பதை மனதிற் கொள்ளுங்கள். இராக்கண் பகற்கண் விழித்துப் படித்துத்தான் ஜான் மில்டன் இரு கண்களும் கெட்டுக் குருடானர். படித்தாயிற்ற? படித்ததைத் தெரிந்து கொள்ளுங்கள்.—பிரஜானுகூலன்.

## LADIES' SECTION.
## ஸ்திரீகள் பகுதி.

HOT WATER.

**வெந்நீர்.**—ஒழுங்குப்படி சுடவைத்து ஆறின ஜலத்தைக் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கிறதற்கு இடையில் கொடுத்தால், ஜீரண சக்தியை அதிகப்படுத்தி தேகாரோக்கியத்தை யுண்டுபண்ணும்.

A PARSI LADY LAWYER.

**பார்ஸி ஸ்திரீ லாயர்.**—பம்பாய் ஸர்வகலாசாலையில் டிஸ் இஞ்சினீர் என்கிற பார்ஸி மாது எல். எல். பி. என்கிற லாயர் பரீக்ஷையில்தேறிப் பட்டம் பெற்றிருக்கிறாள். இந்தியாவில் லாயர் பரீக்ஷைக்குப் படித்துத் தேறின ஸ்திரீகளில் இவள் முதன்மையானவள். ஏற்கனவே எம். ஏ. என்கிற பட்டமும் பெற்றிருக்கிறாள். இதற்கு முந்தி மிஸ் கர்னேலியா ஸொராப்ஜி என்னும் மாதும் லாயர் பரீக்ஷை கொடுத்திருக்கிறாள். ஆனால் இந்தப் பெண்மணி இங்கிலாந்தில் படித்துத் தேறினவள்.

A NOBLE WOMAN.

**ஒரு உத்தமி.**—ஸமீபத்தில் கல்கத்தாவில் சுந்தரியென்னும் குலமகள் நோயா யிருக்கும் தனது கணவன் பிழைக்க மாட்டானென்று நிச்சயமாக அறிந்ததனால், சுமங்கலியா யிறக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கங்காதீர்த்தத்தைக் கொண்டுவந்து தனது கணவனது வாயில் விட்டு, பிறகு தன்னை ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு ஓரறைக்குட் சென்று உடல் முற்றும் எண்ணெயை யூற்றிக்கொண்டு தீயிட்டுக்கொண்டு மாண்டாள். ஜலத்தை விட்டுத் தன்னைக் காப்பாற்ற வந்தவர்களை அப்படிச் செய்யவேண்டாமென்று தடுத்துவிட்டாளாம். இவ்வுத்தமிக்கு வயது 22 இருக்குமாம், அவளுடைய கணவனுக்கு வயது 32 இருக்குமாம்.

OPINIONS ABOUT WOMEN.

**ஸ்திரீகளைப் பற்றி சில அபிப்பிராயங்கள்.**—"பெண்ணும் திராக்ஷாஸமும், வாலிபனையும் வயோதிகனையும் எருப்போல வசிகரப்படுத்துகின்றன."
—மில்டன்.

"நான் படித்த நூலெல்லாம் பெண்களின் கண்ணோட்டமே. என் பிழைகளெல்லாம் அவற்றினின்றும் கிடைத்தனவே."
—மூர்.

"நீ உன் இஷ்டப் பிரகாரம் எல்லாப் பந்தங்களையும் நீக்கி நில்;—என்றாலும், பெண் உன்னை ஆளுகிறாள்."
—மூர்.

"புருஷர் அவர் இஷ்டப்படி செல்லட்டும்; செய்யட்டும்; அவரை ஆளுவது பெண்களேயாம்.'
—பிக்கர்ஸ்டர்.

"எந்தக் காலம் வரை பெண்கள் முகமலர்ச்சியில்லாதிருக்கின்றனரோ அந்தக் காலம் வரை உலகம் சூனியப் பரதேசமாகவே இருக்கும். மனிதரோ, முயற்சியற்றவர்களா யிருப்பார்கள்." —காம்பெல்.

"பெண்மணியே, ஆடவரை நற்குணமுடையவராக்க கடவுள் உன்னைப் படைத்தார். நீ இல்லாவிட்டால், நாங்கள் முழு மூடராகவே இருப்போம்."
—தாமஸ் வுட்வே.

"ஆடவர் மனது எத்தகைய துன்பங்களால் வருத்தப்பட்டிருந்தாலும் மாதர்களின் கடைக்கண் பார்வை ஒன்றுக்கு அவரை அத்துன்பங்களிலிருந்து கரையேற்ற சக்தியுண்டு."
—கே.

"பூமியில் மிகரம்மியமான பொருள் பெண்ணேயாம்."
—லவல்.

"நாணமில்லா மனைவி அவள் புருஷனுக்கு அநுகூல சத்துரு."
—யங்க்.

A BRAVE WOMAN.

**மனோதிடமுள்ள மாது.**—வேல்ஸ் தேசத்து மிஸ்டர் எச். ஆர். தாமஸ் என்பவரின் மனைவியார் ரோடீஷியாவில் ஸமீபத்தில் ஒரு பெரிய சிறுத்தைப்புலியைச் சுட்டாளாம். எவ்விதமென்றால், சில விவஸாயிகள் தங்களுடைய வயல்களிலிருந்து வேலைசெய்துகொண்டிருக்கும்போது அச்சிறுத்தைவந்துவிடவும், அவர்கள் அவ்விடத்துக்கு அருகாமையில் குடியிருந்த தாமஸின் வீட்டில்போய் அடைக்கலம் புகுந்தார்கள். அந்நேரத்தில் தாமஸ் என்பவர் வீட்டிலில்லை. அவருடைய பாரியாள் மாத்திரம் வீட்டிலிருந்தாள். இவர்கள் தாங்கள் வயலிலிருந்து ஒரு சிறுத்தையால் துரத்தப்பட்டார்கள் என்று சொல்லவே, மேற்படி மாது இதைக்கேட்டு தனது நாய்களை அழைத்துக்கொண்டு ஒரு கைத்துப்பாக்கியுடன்சென்றுஷை வயலில் அச்சிறுத்தை நிற்கக்கண்டு வெகு வீரா வேசத்துடன் அம்மாது அம்மிருகத்தை அணுகித் துப்பாக்கியால் வெகு நிதானமாய்ச் சுட்

டாள். அச்சுடானது அம்மிருகத்தைப்படுகாயப்படுத்திவிட்டதினால் அது பிறிதொன்றும் செய்யவில்லை. நாய்களும் இதற்கிடையில் அம்மிருகத்தை யணுகி யுத்தஞ் செய்தன வென்றும், இப்படிப்பட்ட பெண்கள் தான் எம் சேத்துக்கு வேண்டுமென்றும் ரொடீஷியாவில் பிரசுரமாகும் ஹெரல்ட் என்னும் பத்திரிகை கூறுகிறது.

A Noble Confession.

ஒரு பெருந்தன்மையான உறுதிமொழி —சென்ற ஏப்ரல் மாதத்தில் அமெரிக்காவில் ஒரு பரிதாபமான நிகழ்ச்சி நடந்தது. சிக்காக்கோ பட்டணத்தில் டாக்டர் ஆல்டென் க்ளெமின்ஸன் என்னும் பிரபல வைத்தியர் தன்னுடைய மனைவியைக் கொன்றுவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு முடிவில் உயிருள்ள பரியந்தம் சிறைச் சாலையில் இருக்க வேண்டுமென்று தண்டனை விதிக்கப்பட்டார். இந்த தண்டனையை ஸுப்ரிம் கோர்ட்டாரும் உறுதிப்படுத்தி விட்டார்கள். இந்த ஸமயத்தில் மிஸ்ஸிஸ் ஷ்மிட் என்னும் பெண்பிள்ளை அழுதுகொண்டே நியாயஸ்தலத்துக்கு முன் வந்து டாக்டர் குற்றவாளி அல்ல வென்றும், தன்னுடைய மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றே அவர் அப்படி குற்றவாளி யென்று ஒப்புக்கொண்டதாகவும் சொன்னாள். பின்னும், தனக்கும் டாக்டருக்கும் கடந்த ஐந்து மாதங்களாக ஸ்நேகம் உண்டென்றும், தான் தன் புருஷனோடு அற்ப விஷயத்தில் சண்டைபோட்டுக் கொண்டு சிக்காக்கோவுக்குப் போனதாகவும், அவ்விடத்தில் டாக்டரோடு ஸ்நேகிதம் செய்ததாகவும், கொலை நடந்த இரவில் டாக்டர் இல்லினாயிலுள்ள தன் வீட்டில் இல்லாமல் வெகு தூரத்திலுள்ள சிக்காக்கோவில் தன்னோடு இருந்ததாகவும், கேஸ் ஆரம்பிப்பதற்கு முன்னமே உண்மையைச் சொல்லித் தப்பித்துக்கொள்ளும்படி தான் கேட்டுக்கொண்டும் டாக்டர் மாட்டேனென்று பிடிவாதமாய்ச் சொன்னதாகவும், இப்படிச் சொன்னதற்குத் தன் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்கிற நல்லெண்ணமே என்றும், தனக்காகப் பிராணனை விட வித்தமாயிருந்த டாக்டருக்கு விதிக்கப்பட்ட அநியாய தண்டனையை விலக்கும்படி தன் மானம் போனாலும் போகிறதென்று முன் வந்து சொன்னதாகவும், பரிதாபமுண்டாக அழுது சொன்னாள். இதன் மேல் மறு விசாரணை செய்ய தீர்மானமாயிருக்கிறது. அந்தப் பெண்பிள்ளையின் கணவன் பேர்போன வர்த்தகனாகிய மிஸ்டர் ஷ்மிட் என்பவர். தன் பெண்சாதி பிசகிப் போனாலும், நல்ல எண்ணத்தால் குற்றம் செய்யாதவனைக் காப்பாற்றினதற்காக அவளைக் கல்யாண சம்பந்தத்திலிருந்து விலக்கமாட்டேனென்று பஹிரங்கமாகச் சொன்னாரென்று நியூயார்க் என்னும் பட்டணத்தில் பிரசுரமாகும் டேய்லி மெயில் என்னும் பத்திரிகை கூறுகிறது.

A Prolific Woman.

ஏராளமான ஸந்ததிகளுள்ள ஸ்திரீ.—ட்ரான்ஸ்வால் பிரதேசத்தில் கிரான்ஸ்டாட் என்னும் ஊரில் வான் ஒய்க்கென்பவள்-1832 வது வருஷம் அக்டோபர் மாதம் 20௳ பிறந்தவள். இவள் 18-வது வயதில் பீட்ரஸ் ஜேகோபஸ் லப்பீ என்பவரைக் கலியாணம் செய்து அவரோடு சுகமாயிருந்து இரண்டு வருஷத்தின்பின் ஒரு குழந்தையைப் பெற்றாள்; அவர் இறந்த பிறகு அவள் பத்துமாதம் விதவையா யிருந்து நான்கு குழந்தையுள்ள மனைவி யிழந்திருந்த நிக்கொலஸ் மார்த்தினஸ் ப்ரிடோரியஸ் என்பவனைக் கலியாணஞ் செய்து ஒருவருஷம் ஐந்து மாதம் அவனோடு சுகமாய் வாழ்ந்தாள். அவன் தனது ஐந்து குழந்தையையும் விட்டு இறந்துபோனான். பின் அவள் 5 மாதம் விதவையா யிருந்து மூன்றாவதாக ஏழு பிள்ளையுடைய டேவிட் ஸ்டீபன்ஸ்பீடர்ஸ் என்பவனைக் கலியாணஞ் செய்து அவனோடு 11 வருஷம் வாழ்ந்திருந்து 7 குழந்தைகளைப் பெற்றாள்; அவன் இறந்தபின்பு அவள் ஒரு வருஷகாலம் விதவையாயிருந்தாள். பிறகு அவள் நான்காவது முறை 8 குழந்தையுடைய டாணி லாட்பிவிகஸ் க்ரான்ஜி என்பவனைக் கலியாணஞ் செய்து அவனோடு 11 வருஷம் சுகமாய் வாழ்ந்திருந்து 4 பிள்ளைகளைப் பெற்றாள். அவன் இறந்த பின்பு அவள் 2 வருஷம் விதவையா யிருந்து 6-வது முறை 5 குழந்தையுள்ள கோன்ராட் ஹென்ரிக்லான் ஒய்க்கென்பவனைக் கலியாணஞ் செய்து அவனுடன் 11 வருஷம் சுகமாயிருந்து 4 குழதைகளைப் பெற்றாள். அவன் இறந்தான். இப்படி அவளுக்கு நேரே 26 பிள்ளைகளும், தான் கலியாணஞ்செய்துகொண்ட புருஷர்களுக்கு 24 பிள்ளைகளும் ஆக 50 பிள்ளைகளும் அவர் மூலமாக அவளுக்கு 270 பௌத்திர பௌத்திரிகளுமிருக்கிறார்கள். அவளுக்குத் தற்காலம் 78 வயது.

# DEPARTMENTAL NOTES.
# பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

POTASH.

**பொட்டாஷ்.**—பயிர் வளருகிறதற்கு நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ், சுண்ணும்பு, ஆகிய இந்த இந்திரிய வஸ்துக்கள் அவசியம். களிமண் நிலங்களில் அநேகமாய்ப் பொட்டாஷ் நிறைந்திருக்கும். மணல் பாங்கான நிலங்களில் பொட்டாஷ் குறைவா யிருக்கும்.

WEEVIL.

**அந்துப்பூச்சி.**—நெல், துவரை இவைகளைப் போலுள்ள மற்ற தானியங்களைச் சேகரித்து சில காலம் ஓரிடத்திலேயே வைத்திருந்தால், அவைகளுக்கு அந்துப் பூச்சியினல் உண்டாகும் நாசம் எவ்வள வென்று எல்லோரும் அறிவார்கள். இதைத் தடுப்பதற்கு ஒரு நண்டைக் கொன்று நெல், துவரை முதலிய குவியல்களின் நேரே தொங்கவிடவும். இதைச் சிலர் செய்து வந்து பலனை அடைந்திருக்கிருர்களாம்.

AGRICULTURAL INSTRUCTION.

**விவஸாய போதனே.**—புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் ஊரூராய்ப் போய் விவஸாய விஷயமாய் ஒரு நிபுணர் ஜனங்களுக்கு போதித்து வருகிருர். தவிர, அந்தஸமஸ்தானத்து ட்ரெயினிங் ஸ்கூல்களிலுள்ள ரூரல் ஸ்கூல் வாத்தியார்களுக்கு விவஸாய விஷயமாக போதனை செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளாகி யிருக்கின்றன.

ONIONS.

**வெங்காயம்.**—இப்பயிர், நிலம் எவ்வளவுக்கெவ்வளவு நெகிழ்ந் திருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நன்ருய் வளர்கிறது. நிலம் மிகவும் இறுகும் பக்ஷத்தில் வெங்காயம் சிறுத்துவிடுவது மல்லாமல், நீர் வடியாததால் உண்டாகும் நோய்க்கும் இடமாகிறது. ஆனல் பட்டம் பட்டமாகச் செய்து, அதில் நட்டால் பயிர் மிக நன்ருய் வளருகிறது.

THE USE OF DEAD DOGS.

**செத்த நாயின் பிரயோஜனம்.**—சீமை அத்திச் செடிக்கு செத்த நாயைப் புதைத்தால் புதைத்த பக்கமே செடி உலர்ந்து விடுகிறதென்றும், புதைத்த சில வாரங்களுக்குள் மட்கிய நாயை எடுத்து நாலா பக்கத்திலும் புதைப்பது நல்லதென்றும் கர்னூல் தோட்டத்தார் தெரிவிக்கிருர்கள்.

DRIED LEAVES AS MANURE.

**சருகு சேத்தை எருவாவது.**—புதுக்கோட்டை ஸமஸ்தானம் திருமயம் தாலூக்காவில் அரிம்பளம், கீழாநிலே, புதுப்புட்டி என்னும் கிராமங்களில், சாலை யோரங்களிலுள்ள மரங்களின் சருகு சேத்தைகளைத் திரட்டி, நிலத்துக்கு எருவாக உபயோகப்படுத்துகிருர்களாம். அந்த ஊர்களில் நிலத்தின் மண் கடினமாயிருப்பதாலும், நிலங்களில் களர் அதிகமா யிருப்பதாலும் இப்படி சருகு சேத்தைகளின் எருவை உபயோகிக்கிருர்கள். அதே மண்பாடுள்ள மற்ற இடங்களிலும் இப்படி அனுஷ்டிக்கலாம்.

A WATER LIFT.

**ஜலமிறைக்கும் யந்திரம்.**—சென்னை ப்ராட்வேயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸெல்ப் கார்டிங் ஸேப் பாக்டரியின் போர்மன் ஒரு ஜலமிறைக்கும் யந்திரத்தை, நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கிருரென்றும் அதற்கு பேடன்டு கொடுக்க கல்கத்தா பேடன்டாபீஸுக்கு அவர் மனுச்செய்து கொண்டிருக்கிருரென்றும் அறிகிருேம்.

CAMPHOR CULTIVATION.

**கற்பூரமர ஸாகுபடி.**—பர்மாவில் கற்பூரப் பயிர் செய்வது மிகுந்த லாபம் தரும் தொழில் என்று தெரிகிறது. சின்லம்காபா என்னும் ஊரில் கற்பூரச் செடி நன்ருய் வளர்கிறதென்று பரீக்ஷித்து அறிந்திருக்கிருர்கள். சீனுவிலிருந்து வரும் "ஙாமி" கற்பூரத்தை இறக்கும் செடியாகிய 'புளுமியா' என்னும் செடி பர்மாவில் சுலபமாக விருத்தியாகிறபடியால், சீக்கிரத்தில் பர்மாவில் ஜனங்கள் கற்பூரச் செடி விருத்தி செய்வதில் முயன்று வருவார்கள். ரப்பர், கெரொஸின் எண்ணெய், முதலியனபோல் கற்பூரமும் பர்மாவிலிருந்து சீக்கிரத்தில் ஏராளமாகவெளி நாடுகளுக்கு ஏற்றப்படும்,

MESTON PLOUGHS.

மேஸ்டன் கலப்பைகள்.—"பர்ன் அண்டு கம்பெனியாருடையமெஸ்டன் இரும்புக்கலப்பையைப் பற்றிய விளம்பரமொன்றை விவஸாய நேயர்கள் கவனித்திருப்பார்கள். அதில் 10 கலப்பைகள் வரையில் வாங்கி உபயோகித்ததில் மற்ற இரும்புக் கலப்பைகளை விட சேற்றிலும் புழுதியிலும் சுலபமாக உழக்கூடியதாயும், லகுவாயுமிருக்கிறது. இரும்புக் கலப்பையென்றால், எட்டி நிற்கும் தஞ்சை விவஸாயிகளுக்கு மிகவும் ஏற்றதாயிருக்கிறது. ஆயினும், வைத்து எடுக்கும்போதும் மூலை முடுக்குகளில் திருப்பும்போதும் சற்று கெட்டியான தரையாயிருந்தால், கொழு முதலிய பாகங்கள் முறிந்து விடுகின்றன. இவைகளை உறுதியாகச் செய்விப்பார்களானால், தஞ்சை ஜில்லாவிலேயே ஏராளமாக விலையாகும்."—எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை.

WET CULTIVATION ON SEA COAST LANDS.

சமுத்திரக்கரை யோரங்களிலுள்ள நஞ்சை ஸாகுபடி.— ஸாதாரணமாக சமுத்திரக்கரையோரங்களிலுள்ள நிலங்கள் ஸாகுபடிக்குலாயக்கில்லை என்று தள்ளிவிடப்படுகின்றன. ஏனெனில் சமுத்திர ஜலம் ஏறி உப்பு அளராயிருக்குமென்பது அநேகரது துணிபு. ஆயினும் தஞ்சாவூர் ஜில்லாவில் காரைக்கால் பிரையாறு போன்ற இடங்களில் இந்நிலங்கள் ஸாகுபடி செய்யப்பட்டு நல்ல முதல்தர நஞ்சை நிலத்தைப் போல் விளைகின்றன. இந்த நிலங்களுக்கு உழவு முதலியவை மற்ற நிலங்களைப் போலவேயாயினும் அதற்கு அடிக்கடி நல்ல தண்ணீர் பாய்ச்சி ஏற்கனவே இருக்கும் ஜலத்தை வடிக்கட்டியிருக்க வேண்டும். ஒரு ஸமயம் சமுத்திர ஜலம் உள்ளே பிரவேசித்து நஞ்சையில் சென்றாலும் குற்றமில்லை. உடனே செய்யவேண்டியதென்னவென்றால், நல்ல தண்ணீர்விட்டு உப்பு ஸாரத்தை இரண்டு மூன்று தடவையாக எடுத்து விடவேண்டும். அப்படி எடுக்காவிட்டால், பயிர் அப்படியே ஒரு வாரத்துக்குள் காய்ந்துபோகும். ஆகையால், இந்நிலங்களுக்கு வேண்டியது நல்ல தண்ணீர் மேல்வாயில் வித்தமாயிருக்கவேண்டும். இவைகளில் விளையும் தானியங்கள் நெல், பயறுமுதலியவை. அதிக ருசிகரமானவை. விளைவும்குறைவில்லை.—சோமசுந்தர தேசிகர்.

BONES.

எலும்புகள்.—நமது தேசத்திலிருந்து வருஷம் ஒன்றுக்கு ஸுமார் 100,000 டன் நிறையுள்ள எலும்பு அயல் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாய்க் கணக்கிடப்பட்டிருக்கிறது. தென்ஜில்லாக்களிலிருந்துமட்டும் 10,000 டன் நிறையுள்ள எலும்புகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனவாம். இவ்வெலும்புகளை இத்தேசத்துக் கிருஷிகர் வாங்கி எருவாக உபயோகித்தால், நமது நிலங்களின் ஸாரம் கெடாமல் வளம் நிறைந்திருக்கும்.

A CORRECTION.

ஓர் பிழை திருத்தம்.—"சென்ற வைகாசி மாத ஸஞ்சிகையில் "நெல் விதை" என்று தலைப்புள்ள எனது வியாஸத்தில், 100 குழி அதாவது 33 ஸெண்டு நாற்றங்காலில் 2 பட்டணம் படிக்குமேல் தெளிக்கப்படாத நாற்று என்று எழுதப்பட்டிருப்பது கைதவறுதலாகும். 2 படி விதை விட நிலத்தின் தன்மைக் கேற்றவாறு 3 முதல் 4 ஸெண்டு நாற்றங்கால் போதும்," என்று மிஸ்டர் எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை எழுதுகிறார்.

PUDDLED AND DRY SEEDBEDS.

சேற்றுக்கால் புழுதிக்கால் நாற்றங்கால்கள்.—பி. எல். தேவி ஸிங் என்பவர் "தஞ்சாவூர் ஜில்லாவில் நாற்றங்கால்கள்" என்ற வியாஸத்தில் சேற்றுக்கால் நாற்றைவிட புழுதிக்கால் நாற்று விளைமுதல் ஜாஸ்திப் படுகிறதென்று அபிப்பிராயங் கொண்டிருப்பது ஸரியாகத் தோன்றவில்லை. யென்று எழுதுகிறார். எனது அனுபவத்தில் சென்ற வருஷத்தில் பரீக்ஷைக்காக ஒரே ஸ்தலத்தில் இரண்டுவித நாற்றுகளையும் தனித்தனியாக நட்டதில், சேற்றுக்கால் நாற்றைவிட புழுதிக்கால் நாற்று ஏக்கருக்கு 250 படி ஜாஸ்தி கண்டது. இரண்டுவித நாற்று விட்ட இடமும், நட்ட இடமும் ஒரே செய்நேர்த்திதான். ஒரே பூஸாரமும் உடையன. பல சாஸ்திரிகளும் அனுபவஸ்தர்களும் புழுதிக்கால் நாற்று மாசூல் ஜாஸ்தி காணுமென்றே அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விதமாக மிஸ்டர் எஸ் வைத்தியலிங்கம் பிள்ளை எழுதுகிறார்.

## INDUSTRIAL NOTES.
## கைத்தொழில் குறிப்புகள்.

SILK WEAVING.

**பட்டு நெசவு.**—இந்தியாவின் வடமேற்கு எல்லையிலுள்ள காஷ்மீரத்தில் பட்டு நெசவுத் தொழில் வெகு மும்முரமாய் நடைபெறுகிறது. ஸ்ரீநகரிலுள்ள பட்டுத் தொழிற் சாலையில் சம்பந்தப்பட்டவர்கள் 70,000 பேருக்கு அதிக முண்டு. காஷ்மீர தேசப் பட்டுத்தொழிலால் கவர்ன்மெண்டாருக்குச் சென்ற வருஷத்தில் கிடைத்த லாபம் 6 லக்ஷம் ரூபாய் என்று மதிக்கப்படுகிறது.

BUTTONS OUT OF COCOANUT SHELL.

**தேங்காய்க் கொட்டாங்கச்சியில் பொத்தான் செய்தல்.**—இது தஞ்சாவூர் ஜில்லா பின்னத்தூரில் நடைபெறுகிறது. இதில் தேங்காயின் முற்றல் தன்மைக்குத் தகுந்ததுபோல் தினுசுவாரிகள் இருக்கின்றன. இளந்தேங்காயில் செய்யப்பட்டவைகள் சிறிது வெளுப்பாயும், அதனிலும் முற்றல் சிறிது கறுப்பாயும், நல்லமுற்றல் கொட்டாங்கச்சியில் செய்தது நல்ல கறுப்பாயும் இருக்கிறது. இதைச் செய்பவர் பி. ஏ. சுப்பிரமண்ய அய்யர்.

BRONZE BELLS.

**வெண்கல மணிகள்.**—"அந்த மணி எவ்வளவு நன்றாய் சப்தம் கொடுக்கிறது", என்று அநேகர் சொல்லுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு விதமான சப்தம் உண்டு பண்ணுவது எப்படி என்று தெரியாது. ஒவ்வொரு மணியும் உருக்கி வார்த்த பிற்பாடு சப்தம் கொடுக்கும் பொருட்டு ஒரு பிரத்தியேகமான முறைப்படி அது செம்மையாக்கப்படுகிறது. ஒவ்வொரு மணியிலும் ஐந்து சப்தங்களிருக்கின்றன. இவைகளெல்லாம் சேர்ந்து தான் கடைசியில் நல்ல ஓசையுண்டாகிறது. சப்தம் உண்டாவதற்காக, மணியில் நாலா பக்கங்களிலிருந்தும் வெண்கலத்தைச் செதுக்கி எடுத்து விடுகிறார்கள். வீணையில் நல்ல ஸ்வரம் எவ்வளவு எளிதில் வாத்தியக்காரன் உண்டாக்கி விடுகிறானோ, அவ்வளவு எளிதில் வேலை தெரிந்தவன் வெண்கல மணிகளில் சப்தம் உண்டாக்கி விடுகிறான். ஐந்து வித சப்தங்களும் ஒத்து ஒலிக்கும்படி ஐந்து விதமாக உலோகத்தைச் செதுக்கி எடுத்து விடுகிறான். அப்போது கடைசித் தடவையில் அளவுக்குமேல் கொஞ்சம் அதிகமாய்ச் செதுக்கி விட்டால், மறுபடியும் முதல் நான்கு சப்தங்களையும் செம்மைப்படுத்த முதலிலிருந்து செதுக்கிக்கொண்டு வரவேண்டும்.

PAPER.

**காகிதம்.**—நம் நாட்டில் விளையும் மக்காச்சோளத் தட்டிலிருந்தும், வைக்கோலிலிருந்தும் நம் மலைகளில் விசேஷமாய் அகப்படக்கூடிய புற்களிலிருந்தும், புல்லின் வேரிலிருந்தும், காகிதம் செய்யலாம். பர்மா கவர்ன்மெண்டார் மூங்கிலிலிருந்தும் மிகவும் நேர்த்தியான பலவிதமான காகிதங்கள் செய்யலாமென்று ஒரு காகிதம் செய்யும் விற்பன்னரைக் கொண்டு வெளிப்படுத்தினார்கள். பருத்திப் பஞ்சுச் செடிகளின் அடிக்கட்டையைக் கொண்டு செய்யும் காகிதமானது மரத்திலிருந்தும் செய்யப்படும் ஒருவித கூழால் ஆகிய காகிதத்தை விடப் பலமுள்ளதாயும் அழகாயும் இருக்கிறதாம்.

TO PREVENT DECAY OF WOOD.

**மரம் உளுக்காதிருக்க.**—பெரிய கட்டிடங்களில் எல்லாரும் தேக்கு மரத்தையே உபயோகிக்க முடியாது. இதையும் கற்பூர மரத்தையும் கரையான் அரிக்கிறதில்லை. ஆகையால், இதர மரங்களை இதற்கிரையாகாமல் காப்பாற்ற வேண்டும். சில கட்டிடங்களின் மேல் மரங்கள் அப்படியே யிருக்கும். ஆதலால், உளு விழுவதற்குமுன் இதை அறிய வழியில்லை. கட்டிடத்துக்கு உபயோகப்படுத்துமுன் மரத்தை வெல்லத் தண்ணீரில் ஊறவைத்து உலரப் போட்டு விட்டால், அதைக் கரையான் நாடுகிறதில்லை.

DEPARTMENT OF INDUSTRIES.

**தொழிலிலாக்கா.**—இந்த ராஜதானியில் தொழிலிலாக்கா ஸ்தாபிப்பதைப்பற்றி அது கூடாதென்று லார்டு மார்லி செய்த உத்தரவை மறுபடியும் ஆலோசனை செய்து உதகமண்டலத்தில் கூடின தொழில் கான்பரென்ஸில் செய்யப்பட்ட சிபார்சின்படி இந்த ராஜதானியில் தனியான தொழிலிலாக்கா ஸ்தாபிக்கும்படி சென்னை கவர்ன்மெண்டார் இந்தியா ஸெக்ரிடேரியைக் கேட்கவேண்டும் என்று ஸமீபத்தில் கூடிய மதராஸ் ப்ரொவின்ஷியல் கான்பரென்ஸில் தீர்மானம் செய்யப்பட்டது.

## EDUCATIONAL NOTES.

## வித்யாவிஷயக் குறிப்புகள்.

---

THE GAEKWAR ON EDUCATION.

**கைக்குவார் படிப்பைப் பற்றி.**— கைக்குவார் மகாராஜா அவர்கள் ஒரு தடவை சொன்னதை எல்லாரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேணும். அதாவது—"இந்தியாவில் பரோடாவாகிய என் ராஜ்யம் ஒன்றில்தான் பள்ளிக்கூடங்கள் சம்பளங் கேட்காமல் படிப்புச் சொல்லிக்கொடுப்பதும், பிள்ளைகள் படித்துத்தீரவேண்டுமென்கிற நிர்ப்பந்தமிருப்பதும். இந்தியர்களுக்குள் மூடத்தனம் கொஞ்சம் குறைந்தாலொழிய, அவர்கள் முன்னுக்கு வருவார்களென்று நம்புவது வீண். ஆதலால், நான் மேற்கண்ட நிர்ப்பந்தத்தை உண்டாக்கி, ஸௌகரியமும் செய்தேன். ஏதோ கொஞ்சம் ஆரம்பம் செய்திருக்கிறோம். எழுதப்படிக்கவும், கூட்டல் கழித்தல் தெரியவும் இப்போது கற்பித்து வருகிறோம். இனிமேல் அதிகமாகக் கற்பிக்கப் பிரயத்தனம் நடக்கலாம். தேகப்பயிற்சிக்காக, கொடி, பந்து விளையாடல், முதலியவைகளை வெகுதூரம் பரவச்செய்ய வேண்டுமென்பது எனக்கு மனதில் ஆழ்ந்துள்ள ஆக்கிரகம். ஏனெனில், இந்தியர்களில் யாராகிலும் சிலர் படிக்க ஆரம்பித்தால், வெகு சீக்கிரத்தில் தங்கள் உடம்பைக் கெடுத்துக்கொண்டு, இரவும் பகலும் படித்து, வியாதிஸ்தராகி விடுகிறார்கள்" என்கிறார்.

EDUCATION IN MYSORE.

**மைஸூரில் படிப்பு**—மைஸூர் கவர்ன்மெண்டார் தாழ்ந்த வகுப்பாருக்குள் படிப்பு விருத்தியாகும்படியாக ஏற்கனவே பல ஸாதகங்கள் செய்திருக்கிறார்கள். பஞ்சமர்கள், லம்பானிகள், ஹோலியர்கள், போன்ற தாழ்ந்த வகுப்பினருக்குத் தனியான ஸ்கூல்கள் ஸ்தாபித்து அவர்களுக்கு மாஸம் இரண்டு ரூபாய் ஸ்காலர்ஷிப்பும் கொடுத்துவரப்படுகிறது. இராப்பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மூலாதாரப் படிப்பும் தொழிற்படிப்பும் இப்போது கலந்து நடத்தப் படுவதில்லை. ஆகையால், ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு விவஸாயிகளுக்கு அவர்கள் தொழில் ஸம்பந்தமான படிப்பையும் ஸாதாரணப் படிப்பையும் கலந்து சொல்லிவைக்க முடியுமாவென்று யோசிக்கப்பட்டு வருகிறது. இது கைகூடுமானால், படிப்பைக் கட்டாயப்படுத்துவதால் நன்மையுண்டாகக்கூடும். மூலாதார ஸ்கூல்களில் பிள்ளைகளிடத்தில் சம்பளம் வாங்குவதில்லையென்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் இந்த ஸ்கூல்களில் வாசிக்கும் பிள்ளைகள் அதிகப்பட்டிருக்கிறார்கள். வாத்தியார்களுடைய சம்பளம் 10 ரூபாய்க்குக் குறையாமற் செய்யப்பட்டிருக்கிறது. ஆண் ஸ்கூல்களுக்கும் பெண் ஸ்கூல்களுக்கும் வாத்தியார்கள் தயார் செய்வதற்காக ஆறு ட்ரெய்னிங் ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

AN EDUCATIONAL CONFERENCE IN BENGAL.

**வெங்காளத்தில் ஒரு கல்விக் கான்பரேன்ஸ்.**— போன ஈஸ்டர் விடுமுறையில், அதாவது, ஏப்ரல் மாஸத்தில், வெங்காள தேசத்திலுள்ள மைமென் ஸிங் என்ற ஊரில் வெங்காளக் கல்வி கான்பரென்ஸ் ஒன்று கூடிற்று. அப்போது 5,000 ஜனங்களும் சுமார் 100 ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். ப்ரொபெஸர் ஜே. ஸி. போஸ் என்ற பேர்போன சாஸ்திர விற்பன்னர் ப்ரெஸிடெண்டாயிருந்தார். இந்த ப்ரொபெஸர் தம்முடைய சாஸ்திர வன்மையாலும், ஜடபதார்த்தங்களென்று சொல்லப்படும் பதார்த்தங்களுக்கு ஜீவ உணர்ச்சியிருக்கிறதென்ற உண்மையைக் கண்டுபிடித்தும், ஐரோப்பிய சாஸ்திர வல்லோருக்கும் ஆச்சரியத்தை யுண்டுபண்ணியிருக்கிறார். இவர் இன்னும் பல சாஸ்திர நுட்பங்களைக் கண்டுபிடித்து நம் தேசத்தாருக்குப் பெருமையையும், ஐரோப்பியருக்குத் திகைப்பையும் உண்டு பண்ணியிருக்கிறார். இவர் மைமென்ஸிங்கில் பேசினது வெங்காள பாஷையில். மிஸ்டர் போஸ் பேசினது சாஸ்திர விஷயமானதால், சாஸ்திர நுட்பங்கள் பலவற்றைத் தம் பிரஸங்கத்தில் உதகரிக்க வேண்டியிருந்தது. அப்படியிருந்தும் கஷ்டமில்லாமல் ஸமயோசிதமான வார்த்தைகளை உபயோகப்படுத்திக் கேட்போருக்கு ஆனந்தத்தையும் எழுச்சியையும் உண்டாக்கினது அந்த வெங்காள பாஷை தற்காலம் அடைந்திருக்கும் அபிவிருத்தியைக் காட்டுகின்றது. இந்த மீட்டிங்கில் கல்வி யபிவிர்த்தி விஷயமாய் அநேக தீர்மானங்கள் செய்யப்பட்டன. அன்னிய பாஷைகளிலிருந்து சிறந்த நூல்களை வெங்காள பாஷையில் மொழிபெயர்த்து எழுதுவோருக்கும் பொதுவாய் பணமின்றிக் கஷ்டப்படும் வெங்காள நூலாசிரியருக்கும் ஸாதகமாக நிதிகள் சேர்க்கவேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டன. உடனே ஒரு ஜமீன்தார் ஆயிர ரூபாய் ரொக்கமும் தம் ஜமினில் ஒரு கிராமத்தையும் கொடுத்தார்.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

### Powers of Observation of Men.

**ஜனங்களின் கவன சக்தி.**—ஸான் ப்ரான்ஸிஸ்கோ நகரில் ஜனங்களின் கவன சக்தியைச் சோதிக்கும்படி ஒரு காரியஞ் செய்யப்பட்டது. புதிய டாமா நாணயமொன்றை ஜனங்கள் நடக்கிற பாதையில் ஓரிடத்தில் ஆணியா லடித்து வைத்துவிட்டார்கள். அப்பாதையில் நடந்துபோன 218 பேரில் ஒருவன் தான் அதைக் கண்டுபிடித்துத் தன் காலாலுதைத்து எடுத்துகொண்டு போனான். நமது கவன சக்தி அதிகப்படவேண்டும்.

### Mungoose and Snake Bite.

**கீரிப்பிள்ளையும் பாம்புக்கடியும்.**—பாம்புக் கடியினால் கீரிப்பிள்ளைகளுக்கு அபாயம் வராமலிருப்பது என்னத்தினாலெனில், பாம்பின் விஷத்தை ஒன்றுமில்லாமலாக்கும் ஓர்விதசெடியையோ,பூண்டையோ கீரிப்பிள்ளையானது தன் இயற்கை அறிவால் தின்பதினாலாவது அல்லது அதில் விழுந்து புரளுவதினாலாவது உண்டாகிறதென்று நமது தேச ஜனங்கள் நினைக்கிறார்கள். கிப்ளிங் என்ற பிரபல நூலாசிரியர் கீரிப்பிள்ளை நாகப்பாம்புடனும் மற்ற ஸர்ப்பங்களுடனும் போர் செய்யும்போது அது காட்டும் சுறுசுறுப்பால் கடிபடாமல் தந்திரமாய்த் தப்பிக்கொள்வதால் பாம்புக் கடியை அது விலக்கிக் கொள்ளுகிறதென்று தம்முடைய புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார். ஆனால் இப்போது சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்து முன்சொன்ன இரண்டு காரணங்களையுந் தப்பெனத் தீர்த்துப் போட்டார்கள். அதாவது கீரிப்பிள்ளைக்கு பாம்பின் விஷம் ஏறுகிறதில்லையாம். கீரிப்பிள்ளையைப் போலவே தகசு என்ற ஒரு மிருகம், பூனை, முதலான சிறு மிருகங்களும் இன்னும் அநேக பெரிய மாமிச பக்ஷண விலங்குகளும் பாம்பு விஷம் ஏறாத ஸத்துடையனவைகளா யிருக்கின்றனவாம். மனிதருக்குள் சிலருக்குத் தேள் கொட்டினால் விஷம் ஏறாமலிருக்கவில்லையா?

### An Electric Pencil.

**மின்சாரப் பென்ஸில்.** — எழுதும்போது வெளிச்சங் கொடுத்துக் கொண்டிருக்கத் தக்கதான பென்ஸி லொன்றைத் தற்போது ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். அது இருட்டிலும் எழுத உதவுமாம். மின்சா ரஸத்தைப்பென்ஸிலில் அமைத்திருக்கிறார்களாம்.

### A New Instrument.

**ஒரு நூதன ஸூத்ரம்.**—வெகு தூரத்தில் நடக்கிற ஸங்கதிகளை இருந்த இடத்திலிருந்தே தெரிந்து கொள்வதற்காக வித்யுத் ஸம்பந்தமான ஸூத்ரமொன்றை ருஷியாவிற்குத் தலை நகரான ஸெண்ட் பீடர்ஸ்பர்க்கிலுள்ள பிரோவிங் என்னும் புலவர் கண்டுபிடித்திருக்கிறார்.

### The Sun.

**சூரியன்.**—சூரியன் பார்வைக்குப் பிரமாணத்தில் சிறியதாகத் தோன்றினாலும், அது பூமியைவிடப் பன்னிரண்டரை லக்ஷம் மடங்கு பெரிது. சூரியனுடைய சுற்றளவு 28 லக்ஷம் மைல், குறுக்களவு 9,04,000 மைல். பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் 9 கோடியே 20 லக்ஷம் மைல். அவ்வளவு தூரத்தில் இருப்பதனால்தான் நமது கண்ணுக்கு அது சிறிதாகத் தோன்றுகிறது.

### Radium.

**ரேடியம்.**—இந்த உலோகத்தின் விலை முன்னைக் காட்டிலும் குறைந்திருக்கிறது. இப்போது இதன் விலை ஒரு அவுன்சு கொண்டது 65 லக்ஷம் ரூபாய். மூன்று அவுன்ஸ் நிறையுள்ள ரேடியந்தான் இது வரையிலும் உலகத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.

ரேடியத்தைக் கடன் கொடுக்கும் பொருட்டு பாரிஸ் நகரத்திலும் லண்டன் நகரத்திலும் பாங்குகள் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஒன்றரை க்ரேயின் அல்லது ஒரு அவுன்ஸில் 320-ல் ஒரு பாகம் கொண்ட ரேடியத்தைக் கடன்வாங்கி உபயோகிக்க நாளொன்றுக்கு ரூ. 618 மேற்படி பாங்குகள் சார்ஜ் செய்கின்றன. ஒரு வங்காள கனவான் அதில் ஒரு க்ராம் (15.43 க்ரேயின் எடைக்குச் சமம்) நிறையுள்ளதை 15,000 பவுன் அல்லது 45,000 ரூபாய்க்கு வாங்கி லண்டனிலுள்ள புண் பரிசோதனைச் சாலைக்கு இனாமா யளித்திருக்கிறார்.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

INDIGESTION AND ITS REMEDY.

**அஜீரணமும் அதைப் போக்கும் முறையும்.**—1. ஒரு நாளைக்கு இரண்டுமுறைக்கு மேற்பட ஆகாரங் கொள்வது கூடாது. பெரும் பசியா யிருக்கும்போது வேண்டுமானால், மூன்று தடவை புசிக்கலாம். மூன்று முறைக்கும் மேற்பட எவ்வித உணவையுங் கொள்வது முற்றுங் கூடாது.

2. ஒருமுறை உணவுகொண்ட காலம் தொடங்கி மற்றொரு முறை உணவு கொள்ளுங் காலம்வரையில் இடையிலே எவ்வகையான பதார்த்தத்தையும் எவ்வளவு சிறிதா யிருந்தபோதிலும் புசிப்பது கூடாது. இவ்வொழுக்கத்தை நெடுங்காலம் கவனியாமல் விட்டதே அஜீரணத்திற்குக் காரணமாகும்.

3. சுலபத்தில் ஜீரணமாகத் தகாத வஸ்துக்களைப் புசிப்பது கூடாது.

4. ஒவ்வொரு முறையும் சாப்பிடும்போது எவ்வளவு மெதுவாகவும் கால தாமதத்தோடும் சாப்பிடக் கூடுமோ அவ்வளவு மெதுவாகவும் அவகாசமாகவும் சாப்பிடவேண்டும். அதிக வேகமாய் நெடுங்காலம் சாப்பிட்டுக்கொண்டு வந்ததே இப்போது அஜீரணத்திற்குப் பெரும்பாலும் காரணமா யிருக்கக் கூடும். குறைந்தது அரை மணி நேரத்திற் குள்ளாகச் சாப்பிட்டெழுந்திருப்பது உத்தம மல்ல.

5. போஜன பதார்த்தங்கள் ஒவ்வொன்றும் கூடியவரையில் நுண்ணிய பொருள்களாகச் செய்யப்பட்டும், நன்றாய் வெந்து இளகியதாகவு மிருக்க வேண்டும். அவற்றையும் ஏனைய பதார்த்தங்களையும் உட்கொள்ளும்போது வாயில் ஊறும் எச்சில் நன்றாய்க் கலக்கும்படி ஒமென்று மெதுவாய் விழுங்கவேண்டும்.

6. சாப்பிட்டவுடனே சோம்பலாவது தூக்கமாவது வேலை செய்ய ஒரு வகையான அஸம்மதமாவது உண்டாகும்படியாக அவ்வளவு வயிறார உண்பது கூடாது.

7. சாப்பிட்டெழுந்தது முதல் சுமார் ஒரு மணி நேரம் வரையில் தேகத்திற்குக் கஷ்டந் தரத்தக்கதான எவ்வித வேலையையும் செய்யக்கூடாது. மனதுக்குப் பிரயாஸையைத் தரத்தக்க சிந்தித்தல் முதலிய வேலையிலும் பிரவேசிக்கக்கூடாது.

8. எந்தக் காரணத்தினால் அஜீரணம் உண்டானதோ, அந்தக் காரணத்தைக் கண்டறிந்து நிறுத்த வேண்டும். இதுவே முதல் ஔஷதம்.

அஜீரண முள்ளவர்கள் மேற்குறித்த விஷயங்களைச் சிறிது நாட்களாவது கைக்கொண்டு வருவார்களாயின், ஜீரண சக்தி அதிகரிக்கு மென்பதற்கு எள்ளளவும் சந்தேக மில்லை.

SALT.

உப்பு.—நாம் உணவு உட்கொள்ளும் பொழுதெல்லாம், ஏராளமாக உப்பும் மோருஞ் சாதத்துடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். உப்புக் குறைந்தால் தான், குடலில் நாக்குப் பூச்சி உண்டாகின்றது. அஜீரண முண்டாவதற்கும் இதுவே காரணமாகும்.

MALARIAL FEVER.

**முறை ஜுரம்**—முறை ஜுரம், குளிர் ஜுரம், மலைக் காய்ச்சல் என்ற நானுவிதப் பெயர்களால் வழங்கும் காய்ச்சல் எவ்விதமாய் உண்டாகிறதென்று உங்களுக்குத் தெரியவருமா? கொசுக்கடியல்லவோ இவ்வியாதிக்குக் காரணம். மிகவும் அற்பமான இந்த ஜெந்து மனிதர்களுக்குப் பொறுக்க முடியாத தொந்தரவை விளைவிக்கிறது. நாம் கொசுக்களுக்கு இரையாகாம லிருக்கவேண்டு மென்றால், சக்தி யிருந்தால கொசு வலைக்குள் நித்திரை செய்ய வேண்டும், அல்லது வேறு சுகமான இடத்திற்குப் போகவேண்டும். வேறுவழி யுண்டோ?

OATHS OF TURKISH DOCTORS.

**துருக்கியில் டாக்டர்கள் பிரதிக்கினை.**—துருக்கியில் வைத்தியப் பரீக்ஷையில் தேறின வாலிபர்கள் டாக்டர்கள் சங்கத்துக்கு முன்னிலையில் பிற்கூறிய பிரதிக்கினை செய்யவேண்டுமாம்:— "என்னை ஏககாலத்தில் ஒரு பணக்கார நோயாளியும் ஏழை நோயாளியும் கூப்பிட்டனுப்பினால், வருமானம் இல்லாவிட்டாலும் ஏழை நோயாளியிடமே சென்று அவனுக்குமருந்து கொடுப்பேன். தவிர, தேசத்தில் பெருவாரி நடமாடும்போது ராத்திரியானாலும் பகலானாலும் எந்நேரத்திலும் நோயாளிகளைப் போய்ப் பார்ப்பேன்." இந்தப் பிரதிக்கினை செய்த பிறகு தான் அவர்களுக்கு அதிகாரப் பத்திரம் கொடுக்கப் படும்.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

---

Unregistered Partition Deed.

**ரிஜிஸ்டர் செய்யப்படாத பாகபத்திரங்கள்.**—சில பேருக்குள் குடும்ப ஸொத்தை என்ன விதமாகப் பாகம் பிரித்துக்கொள்ளுகிற தென்று ஒரு பாகப் பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்த பாகப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. அந்தப் பத்திரத்தில் ஒரு ஷரத்து எழுதப்பட்டிருந்தது. அதாவ தென்ன வென்றால், அவரவர்கள் பட்ட கடன்களுக்கு அவரவர்கள் பாகத்தின் ஸொத்துகள் மட்டும் கட்டுப்படும் என்று எழுதப்பட்டிருந்தது. அவர்களுக்குள் ஒருவன் பட்ட கடனுக்கு மற்றொரு பாகஸ்தனுடைய ஸொத்தை ஜப்தி செய்தால், ஷ ரிஜிஸ்டர் செய்யப்படாத பாக ஆதாரவை சாக்ஷியாகப் போட்டு தாக்கல் செய்து ஷ ஸொத்து கட்டுப்படாது என்று கக்ஷி சொல்ல முடியாது. ஏனெனில் ஸ்தாவர ஸம்பந்தப்பட்ட ஆதாரவுகள் கட்டாயம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கவேண்டு மென்பது சட்டம்.

Joint Hindu Family.

**சேர்ந்த ஹிந்து குடும்பம்**—சேர்ந்த ஹிந்துக் குடும்பத் தகப்பன் துன்மார்க்கச் செலவுகளுக்காக ஷ குடும்ப ஸொத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்க, ஷ ஸொத்துக்கள் பேரில் வியாஜ்யம் கொண்டுவரப்பட்டு டிக்ரி பிறந்து ஸொத்தும் ஏலம் போடப்பட்டது. தகப்பன் சேர்ந்த ஹிந்து குடும்ப ஸொத்தைத் துர்வினியோகம் செய்திருப்பதால், ஷ டிக்ரியும் ஏல விற்பனையும் ஷ ஸொத்திலிருக்கும் தன்னுடைய பாகத்தைக் கட்டுப்படுத்த மாட்டாதென்றும், ஆதலால் ஸொத்தில் தனக்கு பாத்தியதை யிருக்கிற தென்று கூறும்படியாக புத்திரன் டெக்ளரேட்டரி வியாஜ்யம் கொண்டுவந்தான். வாதி ஷ ஸொத்திலிருக்கும் தன்னுடைய பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்படியாக வியாஜ்யம் கொண்டுவர பாத்தியதை யுடையவனாகையால், அப்படிக் கேட்காமல் தனக்கு ஷ ஸொத்தில் பாத்தியதை யிருக்கிற தென்று மட்டிலும் கோர்ட்டார் கூறும்படியாக டெக்ளரேட்டரி வியாஜ்யம் கொண்டு வந்தது ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் 42-வது பிரிவிற்கு விரோதமென்று சொல்லி வியாஜ்யத்தைத் தள்ளும்படி செய்து விட்டார்கள்.

Gift to a Wife.

**பெண்சாதிக்கு தானம்.**—புருஷன் பெண்சாதிக்குச் செய்யும் தான ஸம்பந்தமாக அனுஷ்டானத்திலிருக்கும் விதி என்னவென்றால், அவள் புருஷனிடமிருந்து தானமாகப் பெறும் ஸொத்தை அவள் ஜீவ தசையிலுள்ள பரியந்தம் அனுபவிக்க மட்டிலும் பாத்திய மிருப்பதாக எண்ணப்பட்டு வருகிறது. ஆகையால், அவள் அந்த ஸொத்தை இஷ்டப்பட்டால், பராதீனம், தானம், விற்கிரையம் முதலியவைகளும் செய்யலா மென்று அதிகாரம் கொடுத்து தானம் செய்யும் புருஷர்கள் இந்த விபரத்தைத் தானப் பத்திரத்தில் அவசியமாக எழுதவேண்டும். இ. லா. ரி. 27 சென். 498.

Right to Maintenance.

**ஜீவனாம்ச பாத்தியதை.**—புருஷன் தன்னுடைய வீட்டில் வைப்பாட்டியையுங் கூட வைத்து அவளுடன் வஸித்து வந்தானேயாகில், பெண்சாதி தனக்குப் பிரத்தியேகமாக வீடு கேட்கவும் ஜீவனாம்சம் கேட்கவும் அதுபோதுமான தென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

Son's Marriage.

**புத்திரனின் விவாகம்.**—ஒரு ஹிந்து தகப்பனார் தன்னுடைய புத்திரனுக்கு விவாகம் செய்ய மத ஸம்பந்தமாகவாவது அல்லது ஸன்மார்க்க முறைப்படியாவது அல்லது சட்டப்படியாவது கட்டுப்பட்டவனல்ல. ஆகையால் தன்னுடைய புத்திரர்களில் ஒருவனுக்கு விவாகம் செய்ய பிதிரார்ஜித நிலத்தை அவன் விற்பனை செய்வானேயாகில், அந்த விற்பனைக்கு ஸம்மதிக்காத மற்ற புத்திரர்களுக்கு ஷ ஸொத்திலிருக்கும் பாகம் ஷ விற்பனைக்குக் கட்டுப்படாது என்று தீர்மானிக்கப்பட்டது.—லாயர்.

---

## PERSONAL NOTES.

## மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

LATE EDWARD.

**காலஞ்சென்ற எட்வர்ட்.**—சில வருஷங்களுக்கு முன் விக்டோரியா சக்ரவர்த்தினியார் காலத்தில், காலஞ்சென்ற எட்வர்ட் அரசர், இளவரசராய் (பிரின்ஸ் ஆப் வேல்ஸ்) ஸான்ட்ரிங் ஹாம் என்ற இடத்தில் வஸித்து வந்தார். அப்போது ராஜ குடும்பத்தினரும் மற்றும் சிலரும் அவ்விடம் இருந்து வந்தார்கள். அவர் தினந்தோறும் வேட்டையாடுவதற்கேற்ற உடை தரித்துக்கொண்டும், தனது சட்டையின் பைகளில் கையை நுழைத்துக்கொண்டும், ஏழை அனாதிகளைத் தேடிக்கொண்டும் சுற்றுப் பக்கங்களில் திரிவது வழக்கம். இப்படித் திரிகையில், ஒரு நாள் அவர் கண்ணுக்கு ஒரு சிறிய குடிசை புலப்பட்டது. உள்ளே நுழைந்தார். அங்கு ஒரு வயது முதிர்ந்த நோயாளிக் கிழவி படுத்திருந்தாள். அரசர் அவளுடைய படுக்கையண்டை போனவுடனே குனிந்து அவளை முத்தமிட்டார். உடனே கிழவி கண்ணைத் திறந்து பார்த்து, "என் அருமைக் குழந்தையாகிய பர்டியா", என்று சொன்னாள். அரசர் "ஆம். எப்போதும் உனக்கு பர்ட்டிதான்" என்றார். பிறகு விசாரித்ததில் இந்தக் கிழவி, விக்டோரியா அரசியின் குழந்தைகளையெல்லாம் தாதித்தொழில் செய்து காப்பாற்றியவளெனத் தெரியவந்தது. அதன் பேரில், தன்னுடைய குழந்தைப் பருவ சிநேகிதியைக் காண அவருக்கு அளவற்ற மகிழ்ச்சி யுண்டாகியது. அப்பால் அவர் அவளுடைய யோகக்ஷேமங்களையெல்லாம் விசாரித்தும் தன் குடும்ப வைத்தியரை அவளுக்குச் சிகிச்சை செய்ய அனுப்பியும், தாதிகளை ஏற்படுத்தியும், அக்கிழவிக்கு அனுகூலமாயிருக்கக்கூடிய ஒவ்வொரு ஸௌகரியத்தையும் செய்தார். அன்றியும், தமக்கு ஒழிந்த வேளைகளில் ஒவ்வொரு நாளும் அவளைப் போய்ப் பார்த்துவருவார். இது மாத்திரமோ? இச்சங்கதியைப் பற்றி அவர் தமது ஸகோதரர் ஸகோதரிகளெல்லாருக்கும் நிருபம் எழுதினார். அவர்களும் அக்கிழவியைப் போய்ப் பார்த்தார்கள். தற்கால ஜர்மானிய சக்ரவர்த்தி வில்லியமென்பவருடைய தாயாகிய தம் ஸகோதரி விக்டோரியா சக்ரவர்த்தினியாரும், அக்காலத்தில் இக்கிழவியைப் பார்த்தார். பிறகும் அக்கிழவி இறந்ததும் உத்தரக்கிரியைச் செலவுகளையும் நடத்தி டாக்டர் பில்லுக்கெல்லாம் அவர் பணம் கொடுத்தார். அப்பால் அவளைப் புதைத்த இடத்தின்மேல் அரசியின் குழந்தைகள் கூடி, ஒரு பெரிய கல்லறை எழுப்பினார்கள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டது:—"ஒரு பழைய சிநேகிதருடைய ஞாபகத்திற்காக"; விக்கி, பர்ட்டி, ஆல்பி, லௌஸ் ஆலீஸ், ஆர்ட்டி, ஹெலினா, பிரியாட்ஸ், அண்டு லியோபால்டு (இவ்வொன்பது பெயர்களும் ராஜ வம்சக் குழந்தைகளின் அருமைப் பெயராம்.) இக்கதையை நியூயார்க் 'எக்ஸாமினர்' பத்திரிகையில் ரெவரெண்ட் ஹார்வி வுட் எழுதியிருக்கிறார்.

MR. BEHRAM KHAN.

**மிஸ்டர் பைராம்கான்.**—ஜாஜார் என்னும் ஜில்லாவிலிருந்த பைராம் கான் என்னும் பெயருடைய ஒரு மகம்மதிய ஜமீன்தார் ஸமீபத்தில் இறந்து போனார். இறக்கும்போது அவருக்கு வயது 125. இவர் 1831-ம் வருஷத்தில் மகாராஜா ரஞ்சித்சிங் ஆப்கானியரோடு யுத்தஞ்செய்தபோது, ஆப்கானியர் சார்பாக விருந்து குண்டுகாயம் பட்டுத் தப்பிப் பிழைத்தவராம்.

MR. VENKATASAMI NAIDU.

**ஸ்ரீ வேங்கடசாமி நாயுடு.**—ஸ்ரீ வெங்கடஸாமி நாயுடு அவர்கள் 25-3-11ல் ரங்கூனில் ஏறக்குறைய 2000 ஜனங்களுக்கு எதிரில் 4000 ராத்தல் பாரமுள்ள பெரிய கல்லை வைத்து தமது மார்பிலே நால்வர் சம்மட்டியாலடித்து உடைக்கும்படி இருந்தார். பின்பு அதை விழுத்தி எழுந்தபின் இரு தோளிலும் பூட்டப்பட்டிருந்த இரும்புச் சங்கிலிகளை அறுத்தார். ஒன்றேகால் அங்குலகனமுள்ள இரும்பை வளைத்தார். முழுதும் ஜனங்கள் ஏறிய இரு நாட்டு வண்டிகள் மார்பின் மேலேறிப்போக நிமிர்ந்து படுத்திருந்தார். மோட்டார்வண்டியை இழுத்து நிறுத்தினார். இவர் ஸ்ரீராமமூர்த்தியின்பின் தோன்றி விளங்குபவர்.

## FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

HOW IS COAL?

**நிலக்கரி எப்படி இருக்கிறது.**—ஒரு பிரபு நிலக்கரிச் சுரங்கத்திற்குச் சென்று என்ன விலை என்று கேட்பதற்கு ஒருவனை நோக்கி, "நிலக்கரி எப்படி இருக்கிறது" என்று கேட்க, அவன் "நிலக்கரி எப்பொழுதும் கறுப்பாய்த் தானிருக்கிறது" என்றான்.

A BLUNT SAW.

**ஒரு மொட்டை ரம்பம்.**—ஒரு ரம்பக்காரனைப் பார்த்து, அந்த ரம்பத்திற்கு பலமிடக் கூடாதா? என்று கிருஷ்ணய்யர் கேட்க, ரம்பக்காரன், (மொட்டை ரம்பத்தைக் காட்டி) "எப்போதும் எனக்கு இந்த ரம்பத்துடன் வேலை யிருந்துகொண்டே இருக்கிறது. பதம் வைக்கிறதற்கு ஒழிவேது?" என்றுபதில் சொன்னான்.

WHO SPEAKS FIRST?

**யார் முதலில் பேசுகிறார்?**—ரொம்ப நேரம் சண்டைபோட்டு ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளாமல் முகம் திருப்பிக்கொண்டு ஓரிடத்தில் உட்கார்ந்திருந்த தம்பதிகளின் அருகே போய், ஒரு துஷ்டப் பையன் தான் தின்றுகொண்டிருந்த பக்கவடாத்தில் இரண்டு கையில் வைத்துக்கொண்டு "உங்களில் யார் முன்னே பேசுகிறீரோ அவருக்கு இந்தப் பக்கவடாம் கொடுக்கிறேன்" என்று காட்டினான். அப்பொழுது புருஷன் கோபங்கொண்டு சீ! போ! என்று சொல்லி எழுந்து அவனை அடிக்கப் போக, நீயே கெலித்தாய், என்று சொல்லி அந்தப் பக்கவடாத்தை அவன்மேல் எறிந்துவிட்டுப் பையன் ஓடிப்போனான்.

CAUGHT A TARTAR.

**விட்டால் போதும்.**—ஒரு நாள் ஒரு நதிக் கரையில் இரண்டு காட்டாள்கள் நின்றுகொண்டிருந்தார்கள். நதியில் வெள்ளம் பூர்ணமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அதில் அகப்பட்ட கரடி யொன்று மேலுங் கீழுமாக உருண்டுபோய்க்கொண்டிருந்தது. அதை யேதோ கம்பளி மூட்டை யென்றும், அதற்குள் ஏதாகிலும் நல்ல ஸாமான் இருக்கவேண்டுமென்றும் இவர்கள் எண்ணியபடியால், ஒருவன் உள்ளே குதித்து நீந்திப்போய் அதைப் பிடித்தான். தனக்குப் பற்று ஏதாகிலும் கிடையாதா வென்று கரடி தபஸ் பண்ணிக் கொண்டிருந்ததால், ஆள் அகப்பட்டதும் அவனைக் கெட்டியாக இறுக்கிப் பிடித்துக் கட்டிக்கொண்டது. உடனே அவன் அதைத் தப்பித்துக்கொள்ளப் பார்த்து முடியாமல், அதுவும் தானும், மேலுங் கீழுமாய்ப் போராடுவதைக் கரையிலிருப்பவன் கண்டு, 'தம்பீ கம்பளி மூட்டை கிடக்கட்டும், நீகரைவந்து சேர்,' என, அவன், 'அண்ணு, கம்பளி மூட்டையை நான் விட்டுவிட்டேன். ஆனால், கம்பளி மூட்டை என்னை விடமாட்டேன் என்கிறது. என்ன செய்வேன்!' என்று சொல்லி இறந்தானும்.

MALAPROPISM.

**ஒன்றுக்கொன்று உளறுதல்.**— பிண்ணாக்குத் தின்ன விரும்பிய ஒரு வாணியன்தன் கருத்தை வெளியிட்டால், "பெண்டாட்டி யாத்தாள் பெரியாத்தாள்" ஆகிய தன் மனைவி தன் தொழிலுக்கு ஆரம்பித்து விடுவாளே யென்று பயந்து பகல் முழுதும் அதே தியானமாகவும் இரவில் பிண்ணாக்குத் தின்பதாகக்கனவும் கண்டுகொண்டே கஷ்டப்பட்டு பல நாள் கழித்துவந்தான். ஒருநாள் பகலில் அப்புண்யவதியாகிய மனைவி பிண்ணாக்கை வெளியில் உலர்த்தித் தன் தங்கக்கம்பியாகிய புருஷனைக் காவல்வைத்திருந்தாள். ஐயோ பாவம்! விரும்பிய பொருள் எதிரிலிருக்க அதை யடையக் கூடாமலிருந்தால் அதைவிட வேறுண்டோ? தன் தலைவிதியை நொந்து கொண்டு அவ்வாணியன் வாயில் பாக்கைப் போட்டுக்கொண்டிருந்தான். வெற்றிலை யிருந்தது. ஆனால் அதற்கு வேண்டிய சுண்ணாம்பு இல்லை. பிண்ணாக்கே ஸதா அவன் ஞாபகமா யிருக்கும் பொழுது தன் மனைவியைப் பார்த்துச் சிறிது சுண்ணாம்பு கொடுக்க உத்தரவளிக்கவேண்டி, அடி, அடி, உன்னைத்தானே! கொஞ்சம் எனக்கு வெற்றிலைக்குச் சுண்ணாக்குத் தாடி, சுண்ணாக்கு, என்றான். சுண்ணாக்கு என்ற புதுவார்த்தையைக் கேட்ட அவன் மனைவி என்ன உளறுகிறீர்கள், என்றாள். உடனே அவன், அதுதாண்டி, 'புண்ணாம்பு', 'புண்ணாம்பு' என்றானாம்.

## CURIOSITIES.
## விநோதங்கள்

BOAR.

முட்பன்றி.—கொழும்புக் கண்காட்சி சாலையில் வைக்கும்படியாக ஒரு வெண்ணிற முட்பன்றி வாங்கப்பட்டிருக்கிறதாம். இந்த வகை கிடைப்பது மிகவும் அபூர்வம்.

BIG LEAVES.

பெரிய இலைகள்.—அமெஸான் நதி தீரத்தில் வளரும் ஒருவித மரத்தின் இஜஜ என்னும் இலையே உலகத்திலுள்ள இலைகளிற் பெரிதாம். இதன் நீளம் 50 அடி, அகலம் 12 அடி.

SIGN OF MOURNING.

துக்கக் குறி.—சிட்கா என்னுமிடத்தில் ஒரு இந்து ஸ்திரீ தன் கணவனைச் சாகக் கொடுத்து விட்டால், தன் முகத்தின் மேற்பாகத்தில் கனதியாய்க் கறுப்பு வர்ணம் பூசிக் கொள்வாளாம்.

THE LONGEST FENCE IN THE WORLD.

உலகில் நீளமான வேலி.—உலகிலுள்ள வேலிகளிலெல்லாம் நீளமானது அமெரிக்கா ஐக்கியமாகாணத்துக்கும் மெக்ஸிகோவுக்குமிடையில் பஸிபிக் ஸமுத்திரக் கரையில் போட்டிருப்பதேயாம். அதன் நீளம் 1,100 மைல். முட்கம்பியால் போட்டிருக்கிறது.

THE OLDEST TREES.

மிகப் பழமையானமரங்கள்.—உலகத்திலுள்ள மரங்களில் அதிகம் முதுமையானவை இரண்டு. அவைகளில் ஒன்று கன்பூஷியஸ் என்பவராற் சீனவிலே நடப்பட்டது. இதை அவர் கி. மு. 500-ம் ஆண்டிலே தமது ஸமய ஸ்தாபக ஞாபகமாய் நட்டார்.

இரண்டாவதானது அனுராசபுரத்திலுள்ள வெள்ளரசு. இது கி. மு. 288-ம் ஆண்டில் நடப்பட்டது.

THE WEALTH OF A BEGGAR.

ஓர் பிச்சைக்காரனின் ஐசுவரியம்.—ருமேனியா நாட்டைச் சேர்ந்த காசகா என்னும் பட்டினத்து வீதியிலே சிலநாட்களுக்குமுன் செத்துக்கிடந்த ஒரு பிச்சைக்காரனின் பழைய மேற்சட்டைப் பையிலே பாங்கி நோட்டுகளும் பிராமஸரி நோட்டுகளுமாய் 1,80,000 ரூபா யிருந்தது. இவன் தன் ஜீவிய காலத்தில் அதிக பாகம் பிச்சை யெடுத்தே திரிந்தானும்.

AN AUTOMATIC WHIP.

தானுயடிக்கும் சவுக்கு.—ஐரோப்பாவில் பல தேசங்களில் இராணுவத்தில் குற்றஞ் செய்தவர்களை ஆட்களைக்கொண்டு கசையடி அடிக்காமல் யந்திர வியக்கத்தால் தானு யடிக்கும் சவுக்கால் அடித்து வருகிறார்கள். குற்றவாளிகளை ஒரு நிலையில் நிறுத்திக் கட்டிவிட்டு ஒரு யந்திரத்தை இயக்கி விட்டவுடன் எத்தனை அடி வேண்டுமோ, அதை அச்சவுக்கு அடித்துவிடுகிறதாம். அடி ஒரேயிடத்தில் விழுகிறது மில்லையாம்.

COW-SUCKLING SNAKES.

பாம்புகளுக்குப் பால் கொடுத்த பசு.—இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த கிலாஸ்றஸ் என்னும் மாகாணத்திலுள்ள ஆடிங்டன் என்னும் பட்டணத்தில் வாஸஞ் செய்யும் ஒர் துரைசானியிடம் சுகமும் திடகாத்திரமும் உள்ள இரண்டு பசுமாடுகள் இருக்கின்றனவாம். சிறிது தினங்களாக அம்மாடுகள் கொடுத்துவந்த பால் குறைந்துகொண்டே வந்ததாம். இவ்விதம் பால் குறைவதற்குக் காரணம் அம்மாதுக்குத் தெரியாமலிருந்ததாம். ஒருநாள் அம்மாதின் பால்காரன் அம்மாடுகள் மேயும் புல் மைதானத்துக்குச் சென்றபோது ஒருமாடு சுகமாய் புல்லில் படுத்துக் கிடந்ததாம். படுத்துக் கிடந்த மாட்டுக்குச் சமீபமாய் அவன் போனபோது இரண்டு பெரிய பாம்புகள் அம்மாட்டின் மடியில் பால் குடித்துக்கொண்டு கிடந்தனவாம்.

A SWAMIAR AND A SERPENT.

ஒரு ஸ்வாமியாரும் பாம்பும்.—பர்மாவில் பீமா என்னும் ஊரில் ஒரு காட்டு மத்தியில் ஸ்வாமியார் மடம் ஒன்றிருக்கிறது. இதில் தனியாக ஒரு ஸ்வாமியார் இருக்கிறார். இவருக்குக் காவலாக ஒரு பெரிய கிருஷ்ண ஸர்ப்பம் இருக்கிறது. இவர் கண்ணை மூடிக்கொண்டு யோகஞ் செய்யும்போதும், நித்திரை செய்யும்போதும் அது அவருடைய தலையண்டை வந்து படுத்துக் காவல் செய்கிறதாம். ஸ்வாமியாருக்கு ஸம்ஸ்கிருத பாஷை நன்றாய்த் தெரியும். காட்டில் பழுக்கும் பழங்களையே ஸ்வாமியாரும் பாம்பும் ஒன்றாயிருந்து சாப்பிட்டு வருகிறார்கள். இப்படியாக அப்பர் பர்மாவில் ஒரு ஸமாசாரப் பத்திரிகை தெரிவிக்கிறது.

# NEWS OF THE MONTH.
# மாஸ வர்த்தமானம்.

## INDIAN NEWS.
## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

A SPECIAL THIRD CLASS PASSENGER TRAIN.

**தென்னிந்தியா ரயில்வே ஸ்பெஷல் பிரயாணிகள் வண்டி.**—மேமீ 1௳ முதல் மதராஸ் பீச் ஸ்டேஷனிலிருந்து பிரதி தினமும் தஞ்சாவூருக்கு 3-வது க்ளாஸ் பிரயாணிகளுக்கு மாத்திரம் ஒரு ஸ்பெஷல் வண்டி ஓடுகிறது. இந்த வண்டி மாலை 7-55 மணிக்கு பீச்சை விட்டுப் புறப்பட்டு மறுநாட் காலை 8-2 மணிக்குத் தஞ்சாவூர் போய்ச் சேருகிறது. தஞ்சாவூரில் இரவு 10-5 மணிக்குப் புறப்பட்டு சென்னை பீச்சுக்கு மறுநாட் காலை 10-7 மணிக்கு வந்து சேருகிறது. இந்த வண்டியினல் மூன்ரும் வகுப்புப் பிரயாணிகளுக்கு ஸௌகரியம் அதிகமுண்டு என்பதற்கு ஆக்ஷேபணையில்லை.

NEW RUPEES.

**புதிய நுபாய்கள்.**—புதிதாய் ஜார்ஜ் சக்ரவர்த்தி தலையுடன் வெளிப்படும் ரூபாய்க்கு டிஸைன்கள் (மாதிரிகள்) செய்து முடிவுபெற்று விட்டன. இவைகளை சக்ரவர்த்தி அங்கீகர்த்துவிடுவார். ரூபாயின் ஒரு பக்கத்தில் ஜார்ஜ் சக்ரவர்த்தி முடியுடனிருக்கும் உருவமும், அடுத்தபக்கத்தில் ரோஜா, தாமரை முதலிய மலர்மாலையும் அதன் மத்தியத்தில் "ஒரு ரூபாய், இந்தியா, வருஷம்" என்பதும் போடப்பட்டிருக்கும். இம்மாதிரி புதிய ரூபாய்கள் அச்சிடப்பட்டு டெல்லி முடிசூட்டு வைபவத்தின்போது செலாமணிக்கு வரும்.

TIRUPPUR CATTLE SHOW.

**திருப்பூர் கால்நடைக் காக்ஷி.**—கோயம்புத்தூர் ஜில்லா திருப்பூரில் நாளது மாஸம் 11, 12, 13-ந் தேதிகளில் கால்நடைக் காக்ஷிநடந்தது. கடைசி நாளன்று குதிரைப் பந்தயமும் நடந்தது. மேற்படி காக்ஷிக்கு அநேக காங்கய நாட்டு மாடுகளும் காங்கயக் குதிரைகளும் கொண்டுவரப்பட்டிருந்தன. பாளையங்கோட்டை பட்டைக்கார் அநேக நல்ல மாடுகளைக் கொண்டுவந்திருந்தார். காக்ஷியில் பால் கறக்கும் மாடுகள் மூன்று நாலு மாடுகளைத் தவிர வேறு கொண்டுவரப்படவில்லை. குதிரைகளில் மாத்திரம் நல்ல நாட்டுக்குதிரைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. மாடுகளின் விலை ஜாஸ்தியாயிருந்ததே தவிர ஸாதாரணவிலை யென்று சொல்ல இடமில்லை. இக்காக்ஷியில் அநேகர்கள் விவஸாயத்தைக் குறித்தும், கால்நடை அபிவிர்த்தியை குறித்தும், ஆயில் இஞ்சின்களைக் குறித்தும் பிரஸங்கங்கள் செய்தார்கள். கோயம்புத்தூர் விவஸாய காலேஜிலிருந்து இரண்டொரு உத்தியோகஸ்தர்கள் பசுந்தாள் எருப் பயிர்கள் வளர்ச்சியையும், ஒற்றைநாற்றுப் பயிர் வளர்ச்சியையும் மாஜிக்லாண்டர்ன் படங்களில் காட்டி உபந்யாஸம் செய்தார்கள்.

GOLDEN BRICKS.

**தங்கக்கல்லுகள்.**— கோல்கொண்டா என்ற கிராமம் நைஸாம் அவர்களுக்குச் சேர்ந்தது. இது ஐதராபாத்திலிருக்கிறது. எரு கண்டிராக்டர் செங்கல் சுட பழயகோட்டைக்குச் சமீபத்தில் ஒரு இடம் பெற்று செங்கல்சுட ஏற்பாடு செய்தார். செங்கல் நன்ருக சுடப்பட்டிருக்கிறதாவென்று அறிய ஒரு செங்கல்லை எடுத்துப்பார்த்தார். அது முழுமையும் பளபளப்பாகத் தென்பட்டதாம். இதென்ன ஆச்சரியமாக யிருக்கிறதென்றெண்ணி இரண்டு மூன்று செங்கல்களை எடுத்துப்பார்க்கவே அவைகளும் அவ்வித மிருந்தன. உடனே இவைகளைப் பரிக்ஷித்தறிய ஏற்பாடு செய்தார். அவைகளின்மேல் சுவர்ணப்பொடி அதிகமாக சேர்ந்திருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டதாம். இவைகளில் சுவர்ணப்பொடி எங்கிருந்து வந்ததென்று அநேகர் எண்ணக்கூடும். முன்காலத்தில் கோல்கொண்டாவில் பொன்சுரங்கங்களிருந்தன. இந்த யிடம் சுரங்கமுள்ள யிடமா யிருந்திருக்கக்கூடுமல்லவா? நைஸாம் அவர்களுக்குத் தெரியவே, உத்தியோகஸ்தர்கள் வந்து இவைகளைப் பரிக்ஷை செய்து செங்கல்களிலுள்ள பொன் விலை எவ்வளவோ கோடி ரூபாய் இருக்குமென்று மதிப்புப் போட்டிருக்கிருர்களாம். அது போலீசாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறதாம்.

A BRAHMIN CONFERENCE.

**ஒரு பிராமண கான்பரேன்ஸ்.**—ஸமீபத்தில் பாலக்காட்டிலுள்ள பிராமணர்கள் சேர்ந்து ஒரு கான்பெரென்ஸ் நடத்தினுர்கள். விவாக காலங்களில் வரசுல்கம் வாங்கக் கூடாதென்றும், ஜாதி உட்பிரிவுக்குள் விவாகம் நடப்பது சாஸ்திர ஸம்மதமென்றும், பூர்வமீமாம்ஸம், உத்தரமீமாம்ஸம், ஜோதிஷம், ஆயுர்வேதம், இவைகளைக் கற்பிப்பதற்காகப் பாடசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், ஜயிலுக்குப் போன பிராமணன் பிராயஸ்சித்தம் செய்துகொண்டால், ஜாதியில் சேர்க்கப்படலாமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. இந்த ஸபைக்கு 'கேரளஸேயபட்ட பிராமண வைதிக யோகக்ஷேம ஸபை' யென்று பெயர்.

THE MADURA TAMIL SANGAM.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்.**—போன மாஸம் 26-ம் தேதி காலமே மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஜெனரல் மீட்டிங் நடந்தது. அதில் 3 வியாஸங்கள் எழுதி வாசிக்கப்பட்டன. தவிர நிருவாக மீட்டிங் ஒன்று கூட நடந்தது. அதில் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்குப் பொருளுதவி கேட்க விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அச்சமயம் கானுடு காத்தான் மிஸ்டர் பெத்தாச்சி செட்டியார் அந்தச் சங்கத்துக்குத் தாம் ரூபா 1000 நன்கொடையும், கலாசாலைக்கு மாதம் ரூபா 50 நன்கொடையும்கொடுப்பதாய்த்தெரிவித்தார். பாண்டித்துரை தேவர் அவர்கள் செட்டியார் அவர்களுக்கு நன்றி செலுத்தி, பெத்த ஆச்சி என்பதற்குப்பெரிய தாய் என்று அர்த்தமாதலால், மிஸ்டர் பெத்தாச்சி செட்டியார் தமிழ்ச் சங்கத்தின் தாயாகிவிட்டதாய்ச் சொன்னுர்.

THE MADRAS PROVINCIAL CONFERENCE.

**மதராஸ் ப்ரோவின்ஷியல் கான்பரேன்ஸ்.**—இந்தக்கூட்டம்போன மாஸத்தில் சென்னப்பட்டணத்தில் ராவ்பகதூர் வி. கே ராமானுஜாசாரியார் அக்ராஸனத்தின் கீழ் நடந்தது.

மிஸ்டர் ராமானுஜாசாரியார் தமது பிரஸங்கத்தின் ஆரம்பத்தில் மகாராஜா முடிசூட்டுக்கு இந்தியாவுக்கு வருவதைப்பற்றிச் சந்தோஷத்தைத் தெரிவித்துவிட்டு, இப்போது ஜனங்கள் கவனத்தைக் கவர்ந்துகொண் டிருக்கும் பல விஷயங்களைப் பற்றி பிரஸ்தாபிக்கப் புகுந்தார். மகம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் உண்டாயிருக்கும் வித்தியாஸம், தாழ்ந்த வகுப்பாரை உயர்த்துதல், ஸாதாரண ஜனங்களுக்குள் படிப்பு, கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் இந்தியர்கள், லர்ன்ட் ரெவினியூ ரெவிஷன்கள், ஐக்கிய நாணயச் சங்கங்கள், தென்னுப்பிரிக்காவில் இந்தியர்களின் நிலைமை, கிராமப் பஞ்சாயத்து முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள், இவைகளையும் இன்னும் சில விஷயங்களையும்பற்றி விவகரித்துப்பேசி தமது அபிப்பிராயத்தைச் சொன்னுர்.

THE ARYA VISYA CONFERENCE.

**ஆரிய வைசியரின் கான்பரேன்ஸ.**—சென்னையில் ஸமீபத்தில் ஆரியவைசியர் என்று சொல்லிக்கொள்ளும் கோமுட்டி செட்டிகள் அவர்களுடைய 5-வது கான்பரென்ஸை நடத்தினுர்கள். சென்னையில் பேர்போன வர்த்தகராகிய மிஸ்டர் அய்யண்ண செட்டியார் வந்த டெலிகேட்டுகளை வரவேற்றுப் பேசினுர். பிறகு மைஸூர் ஸமஸ்தானத்தில் டிப்டி கமிஷனராயிருந்த மிஸ்டர் எம். செங்கய்ய செட்டியார் பிரஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப் பட்டு, தெலுங்கில் நீண்ட பிரஸங்கமொன்று செய்தார். இந்தக் கான்பெரென்ஸானது வைசிய ஜாதியின் முன்னேற்றத்தை யுத்தேசித்துக் கூடினபடியால், படிப்பையும் ஆசாரத் திருத்தங்களையும் பற்றி முக்கியமான தீர்மானங்கள் செய்யப்பட்டன. விவஸாயமும் தொழில்களும் வைசியப் பிள்ளைகள் ஸ்கூல்களில் கற்கவேண்டு மென்றும், அன்னிய தேசங்களுக்குப் போய்த் தொழில்களில் பயிற்சி பெறவேண்டுமென்றும், ஆனரபில் மிஸ்டர் கோகலேயின் மசோதாவை, இந்த கான்பெரென்ஸ் ஆதரிக்கவேண்டு மென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. ஸ்திரீகளைப் படிப்பிக்க வேண்டு மென்றும், சிறு பிராயத்தில் விவாகம் செய்வதை யொழித்து, பிள்ளைகளுக்கு 16 வயசும் பெண்களுக்கு 10 வயசும் வந்த பிறகு விவாகம் செய்யவேண்டுமென்றும், கன்னியா சுல்கம், வரசுல்கம், முதலியவைகள் விவாக காலத்தில் வாங்கக்கூடாதென்றும், அதனுல் பிள்ளைகளின் படிப்பு தடைப்பட்டுப் போகிறதென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

FROM LONDON TO INDIA.

**லண்டனிலிருந்து இந்தியாவிற்கு.**—இப்போது லண்டனிலிருந்து இந்தியாவிற்குவர ஒரு இருப்புப் பாதை போட உத்தேசமாயிருக்கிறதாம். இது காஸ்பியன் கடற்கரையிலுள்ள பேக்கவிலிருந்து ஆரம்பித்துப் பலூசிஸ்தானத்திலுள்ள துஸ்கிப் பட்டணத்தில் வந்து முடிவு பெறுமாம்; அங்கிருந்து இந்திய இருப்புப்பாதை இணைக்கப்படுமாம். இவ் விருப்புப்பாதையில் ஏறிவருபவர் 8½ நாளில் லண்டனிலிருந்து இந்தியாவிற்கு வரலாமாம். மொத்தத்தில் பிரதி மனிதருக்கும் பிரயாணச்செலவு 40 பவுனுமாம்.

ENGLISH BISCUITS.

**இங்கிலீஷ் பிஸ்கோத்துகள்.**—வெள்ளைக்காரர்களால் செய்தனுப்பப்பட்டு வரும் "பிஸ்கட்" என்று சொல்லும் பக்ஷணங்கள் செய்வதில் பன்றிக் கொழுப்பைக் கலக்கிறார்களாம். இதைக்கலந்தால்தான் பிஸ்கட்கள் எவ்வளவு நாளானாலும் ஈரம்பிடிக்காமல் அப்போது தான் செய்த 'பிஸ்கட்'கள் மாதிரி முடமுடவென்றிருக்குமாம். இப்படி பர்மாவில் பிரசுமாகும் சுதேசபரிபாலினி என்னும் பத்திரிகை எழுதுகிறது. இது வாஸ்தவமோ?

A CURIOUS GUN.

**ஒரு நவீன துப்பாக்கி.**—பெரிய பட்டினங்களில் ஐந்தாறுக்கு மேற்பட்ட மாடியுள்ள வீடுகளில் தீப்பற்றிக்கொள்ளும் பொழுது அவைகளில் வசிக்கும் ஜனங்கள் இறங்க வகை யில்லாமல் நெருப்புக்கிறை யாகிறார்கள். இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்குத் தகுந்த உபாயம் இதுவரை கண்டிபிடித்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது ந்யூயார்க் பட்டினத்தில் ஒரு துப்பாக்கி செய்திருக்கிறார்களாம். மேற்கண்ட ஆபத்துக் காலத்தில் அத்துப்பாக்கியைச் சுட்டால், ஒரு மெல்லிய நூல் அதன் வழியாகச் சென்று அதன் கடைசியில் ஒரு பலமான கயிறு கட்டப்பட்டிருப்பதாயும், அதைக் கண்டு பிடித்து மாடியிலுள்ளவர்கள் உயிருடனிறங்கும்படியாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

FLOWERS IN EUROPE.

**ஐரோப்பாவில் புஷ்பங்கள்.**—ஐரோப்பா கண்டத்தில் 4,300 வகைப் புஷ்பங்கள் பயிராகின்றன. இவைகளைப் பரிசோதித்துப் பார்த்த ஜர்மன் தேசத்து ஸ்தாவர சாஸ்திரி ஒருவர் சுகந்தமுள்ள புஷ்பங்கள் 420 வகைதானிருக்கின்றன வென்றும், 4,300 வகையில் பாதிக்கு மேற்பட்ட புஷ்பங்கள் துர்க்கந்த முடையனவா யிருக்கின்றன வென்றும், பல புஷ்பங்கள் வாஸனை யில்லாம லிருக்கின்றன வென்றும் கண்டு பிடித்திருக்கிறார். மேலும் வெண்மை நிறங்களுடையன சுகந்தமலர்களா யிருக்கின்றன வென்றும், ஊதா நிறமுடையன வாஸனை குறைந்தனவென்றும் அவர் சொல்லுகிறார்.

4000 NEWSPAPERS.

**4000-வர்த்தமானப் பத்திரிகைகள்.**—ஜப்பான் ராஜ்யத்தில்ஐரோப்பியதேசத்து நாகரிகம் பரவியது முதல் அவர்கள் அநேகம் வர்த்தமானப் பத்திரிகைகளைப் பிரகடனம் செய்கிறார்கள். பத்திரிகைகளின் சங்கியை பிரதிவருஷமும் அதிகரிக்கின்றன. 1852-ம் வருஷத்தில் முதல் பத்திரிகை பிரகடனமாயிற்று. அதுமுதல் இது வரையில் 4000-வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன. ஜப்பான் தேசத்தார்கள் வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிப்பதில் விசேஷமான ப்ரீதியைக்காட்டுகிறார்கள். டோக்கியோ நகரில் மட்டும் 12-பேபர்கள் வெளியாகின்றன. இவைகளில் பிரக்யாதி பெற்ற "டிலீஸ் கிம்போ" என்னும் பத்திரிகைக்கு நான்கு லக்ஷம் சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். நம் நாட்டில் பத்திரிகாட்மானமோ மிக்க விசித்திரமாயிருக்கிறது.

BRITISH AID TO INDIA.

**இந்தியாவுக்கு ப்ரிட்டிஷ் உதவி.**—அன்னிய தேசங்களுக்குப் போயிருக்கும் ப்ரிட்டிஷ் மூலதனம் 350,00,00,000,(350கோடி) பவுன். இந்த மூலதனத்துக்கு 1911-ம் வருஷத்தில் 18,00,00,000 (18 கோடி,) பவுன் வட்டியாகக் கிடைக்கும். இது நூற்றுக்கு 5-க்கு மேல் வட்டியாகிறது. இந்த மூலதனத்தில் இந்தியாவுக்கும் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கும் போயிருப்பது 65,00,00,000 (65 கோடி)பவுன். அதற்கு வட்டி நூற்றுக்கு ஒன்று குறைத்துக் கிடைப்பதால், அத்தேசங்களுக்குக் குறைந்த பட்சம் 1,00.00,000 (ஒருகோடி) பவுன் லாபமாகிறது. இப்படி அன்னிய தேசங்களுக்குப் போயிருக்கும் மூலதனங்களுக்கு வாங்கும் வட்டியைவிட இந்தியாவுக்கும் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கும் போயிருக்கும் மூலதனத்துக்குக் குறைந்தவட்டி வாங்கப்படுகிறபடியால், அது ப்ரிட்டிஷ் மூலதனக்காரர்கள் அத் தேசங்களுககுச் செய்யும் நன்மை யென்று ஒருவர் சொல்லுகிறார்.

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

(தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் ஜூன்மீ 21உ ரிபோர்ட்டுப்படி.)

PIECE GOODS.

ஜவுளி ஸாமான்கள்.

மதராவில் ஜாக்கிநெட் தவிர மற்ற எல்லா தினுஸுகளுக்கும் நல்ல கிராக்கி.

GREY SHIRTINGS—காடா.

லேடி மார்க்கு. ரூ. அ. பை.

| | | | |
|---|---|---|---|
| No. 1110—$37\times37\frac{1}{2}\times46''$ .. | 8 | 0 | 0 |

கூண்டு மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| No. 2500—$37\times37\frac{1}{2}\times41''$ .. | 6 | 1 | 0 |
| ,, 3500 ஷை 46" .. | 7 | 15 | 0 |
| ,, 7500 ஷை 54" .. | 6 | 5 | 0 |
| ,, 5000 ஷை 41" .. | 6 | 3 | 0 |

பறவை நாகம் மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| $37\times37\frac{1}{2}\times41''$ .. .. | 5 | 8 | 6 |
| No. 126—46"—$37/7\frac{1}{2}$ .. | 9 | 12 | 0 |

GREY MULLS—காரிகம்பீஸ் (காஸாக்கச்சை).

20 கஜம் இஞ்சின் மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| $20\times20\times46''$ .. .. | 4 | 7 | 0 |
| ஷை 51" .. .. | 4 | 15 | 0 |
| $22\times22\times51''$ .. .. | 5 | 7 | 0 |
| ஷை 46" .. .. | 4 | 15 | 0 |

20 கஜம் புற மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| $20\times20\times46''$ .. .. | 4 | 7 | 0 |

நுபா மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| 40"—$20\times20$ .. .. | 4 | 7 | 0 |
| 45"—$22\times22$ .. .. | 4 | 14 | 0 |

BOOK MUSLINS.—புக் மஸ்லின்கள்.

சங்கு மார்க்கு 12 கஜம்.

ரூ. அ. பை

| | | | | |
|---|---|---|---|---|
| 51"—94, ஷை—95, ஷை—96, ஷை—97 .. | (ஸாராஸரி) | 4 | 1 | 0 |
| ஷை—84, ஷை—85, ஷை—86, ஷை—87 .. | (ஸாராஸரி) | 4 | 5 | 0 |

JACONETS.—ஜாக்கிநெட்டுகள்.

46" தங்க விநாயகர் மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| No. 888 .. .. .. | 5 | 9 | 6 |
| ,, 777 .. .. .. | 5 | 4 | 6 |
| ,, 666 .. .. .. | 5 | 3 | 6 |
| ,, 555 .. .. .. | 5 | 0 | 6 |
| ,, 444 .. .. .. | 4 | 13 | 6 |
| ,, 333 .. .. .. | 4 | 10 | 0 |

20 கஜம் 46" தங்கக் குழந்தை மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| No. 2662 .. .. .. | 4 | 11 | 0 |
| ,, 89 .. .. .. | 4 | 14 | 0 |
| ,, 898 .. .. .. | 4 | 15 | 0 |
| ,, 8989 .. .. .. | 5 | 2 | 0 |
| ,, 89898 .. .. .. | 5 | 4 | 0 |
| ,, 898989 .. .. .. | 5 | 6 | 0 |

WHITE MULLS—ஸலவை மல்லுகள்.

| | | | |
|---|---|---|---|
| No. 1703 .. .. .. | 7 | 4 | 0 |
| ,, 1503 .. .. .. | 7 | 0 | 0 |
| ,, 1502 .. .. .. | 6 | 2 | 6 |
| ,, 1702 .. .. .. | 6 | 6 | 0 |
| ,, 1704 .. .. .. | 7 | 8 | 0 |
| ,, 136—40"—18 கஜம் .. | 2 | 2 | 0 |
| ,, 9072—46" 20 கஜம் .. | 4 | 12 | 0 |
| ,, 9073—51" ஷை .. | 5 | 4 | 0 |
| ,, 5072—46" ஷை .. | 4 | 12 | 0 |
| ,, 5073—51" ஷை .. | 5 | 4 | 0 |
| ,, 912—46" ஷை .. | 4 | 9 | 0 |
| ,, 913—51" ஷை .. | 5 | 1 | 0 |
| ,, 3073 .. .. .. | 5 | 12 | 0 |
| ,, 7073 .. .. .. | 5 | 13 | 0 |
| ,, 973 .. .. .. | 5 | 13 | 0 |

மேடல் மார்க்கு.

| | | | |
|---|---|---|---|
| ,, 7773 .. .. .. | 6 | 4 | 0 |

| ஸவரன் மார்க்கு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| No. 273 .. .. .. | 6 | 5 | 0 |
| 72—46″ 20 கஜம் .. .. | 4 | 2 | 0 |
| 73—51″ ஷை .. .. | 4 | 10 | 0 |
| **WHITE SHIRTINGS—லாங் க்லாத்.** | | | |
| H. K. 62 36″ 40 கஜம் .. | 9 | 8 | 0 |
| ஷை 82 ஷை .. | 9 | 12 | 0 |
| **RED SHIRTINGS—தோம்பு.** | | | |
| ஸ்வதன்வா மார்க்கு. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 6 | 4 | 6 |
| 7 ஷை .. .. .. | 6 | 8 | 6 |
| 8 ஷை .. .. .. | 6 | 12 | 6 |
| No. 10—41″ 40 கஜம் .. .. | 8 | 3 | 0 |
| ஒட்டை மார்க்கு. | | | |
| 7 டிக்கெட்டு .. .. | 7 | 3 | 0 |
| 8 ஷை .. .. | 7 | 7 | 0 |
| **YARN AND TWIST—நூலும் முறுக்கு நூலும்.** | | | |
| ஆமதாபாத் காரம் 40—சைஞ டிக் கெட்டு—செகப்பும் மஞ்சள் முடியும். | 2 | 15 | 6 |
| பம்பாய் காரம் 40 டவர் அண்ட் ஸேட் மார்க்கு .. .. .. | 3 | 10 | 0 |
| **MANCHESTER YARN—சீமை நூல்.** | | | |
| காரம் 40 ஜி. எம். (G.M.) ட்ரம்மர் | 3 | 15 | 6 |
| ஷை க்ளாஸ்கோ .. | 4 | 3 | 0 |
| ஷை தங்கமயில் .. .. | 3 | 15 | 6 |
| ஷை மதுராபட்டணம் ஜி.எம். | 3 | 15 | 6 |
| ஷை பாக்கு வெட்டி .. | 3 | 15 | 6 |
| ஷை ஆதிசேஷன் .. | 4 | 2 | 0 |
| ஷை ஸலைவை 80 மகாராஜா | 7 | 8 | 6 |
| ஷை 30 கெடிகாரம் .. | 3 | 15 | 0 |
| ஷை ஷை தண்ணித்துறை .. | 3 | 15 | 0 |
| ,, 50 ம்யூல்-கிழவன் .. | 4 | 7 | 0 |
| ,, ஷை ஷை 70/80 .. | 6 | 2 | 0 |
| 50 மீடியோ G. F. M. ஒட்டையும் யானையும் | 5 | 12 | 0 |
| 60 மீடியோ .. .. .. | 6 | 3 | 0 |
| **RED—செகப்பு.** | | | |
| 60 இரட்டைமயில் .. .. | 8 | 9 | 6 |
| 40 முனிவிபாலிட்டி (புல்வெயிட்) | 11 | 3 | 0 |
| 40 புத்தா .. .. | 6 | 0 | 0 |
| ,, வில்லேஜ் 4 டிக்கெட்டு .. .. | 5 | 3 | 0 |
| ,, ராவணேஸ்வரன் .. | 11 | 3 | 0 |
| ,, அஹல்யை ராமர் .. | 11 | 2 | 0 |
| , பொம்மி செட்டி .. .. | 11 | 2 | 0 |
| , மோட்டார்கார் .. .. | 10 | 6 | 0 |
| , போரா பஸார் .. .. | 6 | 0 | 6 |
| , பூப்ஸானி இரண்டு கட்டு .. | 11 | 2 | 0 |
| 60 ஆதிசேஷன் .. .. | 8 | 4 | 0 |

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| **YELLOW—அரை மஞ்சள்.** | | | |
| 42/40 இஞ்சின் .. .. | 4 | 12 | 0 |
| 40 ஸ்டீமர் .. .. | 4 | 12 | 0 |
| 44/40 யானை .. .. | 4 | 8 | 0 |
| 40 செங்கை (ஜகன்மோஹினி) புல்வெயிட் | 4 | 13 | 6 |
| காசி ராஜா .. .. | 4 | 13 | 0 |
| 44/40 கிருஷ்ணன் .. .. | 4 | 10 | 0 |
| **LEMON AND ORANGE—கால் மஞ்சள் முழு மஞ்சள்.** | | | |
| 44/40 கால் மஞ்சள் கிருஷ்ணன் . | 4 | 10 | 6 |
| ,, முழு மஞ்சள் ஷை .. | 5 | 0 | 0 |
| 40 முழு மஞ்சள் ஷை .. | 5 | 2 | 0 |
| ,, ஷை காசி ராஜா .. | 5 | 2 | 0 |
| 40 கால் மஞ்சள் ஸ்டீமர் .. | 4 | 12 | 6 |
| ,, முழு மஞ்சள் ,, .. | 5 | 3 | 0 |
| **BLACK—கறுப்பு.** | | | |
| 44/40 குதிரை .. .. | 4 | 12 | 0 |
| **HIDES AND SKINS—மாட்டு ஆட்டுத் தோல்கள்.** | | | |
| மானு (மாட்டுத்தோல்) | | | |
| பல்லாரி .. .. | 0 | 13 | $5\frac{1}{2}$ |
| பங்களூர் கமேலா .. .. | 0 | 13 | 2 |
| ஹைதராபாக்கம் 0 13 $2\frac{1}{2}$ முதல் | 0 | 13 | 5 |
| மட்வாடா .. .. | 0 | 12 | 7 |
| ஏலூர் ராஜமஹேந்திரபுரம் 0 12 8 முதல் | 0 | 12 | 10 |
| செட்டி கடல்கரை 0 12 6 முதல் | 0 | 12 | 10 |
| சீவரம் 0 12 0 முதல் | 0 | 12 | 3 |
| குடியாத்தம் 0 12 0 முதல் | 0 | 12 | 3 |
| பல்லாவரம் .. 0 11 3 முதல் | 0 | 11 | 7 |
| யேனு (எருமைத்தோல்) | | | |
| ராயதுர்க்கம் .. .. | 0 | 10 | 6 |
| பல்லாரி .. .. | 0 | 10 | 6 |
| பங்களூர் 0 9 3 முதல் | 0 | 9 | 4 |
| வேனு (வெள்ளாடு) | | | |
| ஹைதராபாக்கம். (நல்லவர்ணம்.) .. | 1 | 8 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | 1 | 5 | 6 |
| சேனு (செம்மறி ஆடு) | | | |
| ஹைதராபாக்கம் (நல்லவர்ணம்) | 1 | 2 | 0 |
| ஷை (ஸாதாரணவர்ணம்) | 1 | 1 | 0 |
| சேலம் 1 10 0 முதல் | 1 | 14 | 0 |
| மட்வாடா 1 4 6 முதல் | 1 | 5 | 0 |

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 20 முதல் 30 |
| கொன்னைப்பட்டை ஷெ | 15 முதல் $17\frac{3}{4}$ |
| கடப்பை கடுக்காய் ஷெ | 7 முதல் 10 |
| சேலம் அரசகிரிஷெ ஷெ | 14 முதல் 19 |
| நல்லெண்ணெய் ஷெ | 100 முதல் 118 |
| புங்கம் எண்ணெய் ஷெ | 65 முதல் 80 |
| எட்டிக்கொட்டை ஷெ | 16 முதல் $17\frac{1}{2}$ |
| பூந்திக்கொட்டை ஷெ | 10 8 0 |
| விளக்கெண்ணெய் ஷெ | 71 முதல் 72 |
| மணிலாக்கொட்டை வியாபாரமில்லை. | |
| கொட்டை முத்து 165 ராத்தல் .. | $9\frac{1}{2}$ முதல் 111 |

| | ரூ. அ. பை. |
|---|---|
| ரங்கூன் அரிசி 63 படி .. | வரவில்லை |
| பந்தர் பச்சை அரிசி 44 படி .. | 7 8 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 6 6 |
| கோதுமை 4 படி முதல் $4\frac{1}{2}$ படி .. | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் .. | |
| வெங்காயம்(தாட்பத்திரி)பாரம் .. | 12 0 0 |
| ஷெ (பல்லாரி) ஷெ .. | 13 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ஷெ | 22 8 0 முதல் 23 |

METALS—லோகங்கள்.

| | ரூ. |
|---|---|
| பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ—ம் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் .. | 206 |
| செப்புத் தகடுகள் பாரம் .. | 242 |
| செப்புக்கட்டி ஷெ .. | 212 |
| நாகம் ஷெ .. | 84 |
| ஷெ (உள்ளூர்) ஷெ .. | 74 |
| ஈயம் ஷெ .. | 54 |
| காரீயம் ஷெ .. | 49 |
| வெள்ளீயம் ஷெ .. | 189 வராகன். |

IRON—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் ரூ. | 21—23 |
| சீமை .. .. .. | 43 |
| மருக்கி தகடு 6—9, 12—13, | 24—37 |
| பீப்பாய்க் கட்டு .. .. | 27—28 |
| 8 பட்டை எஃகு .. .. | 23 |
| எஃகு வில்கட்டு .. .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. .. | 21 |
| சீமை .. .. .. | 40-46-49 |

SEASON.

## காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911ஸூ ஏப்ரல் மீ 1-உயிலிருந்து, ஜுலைமீ முதல்உ வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 7·97 | 8·93 |
| வால்டேர் | 4·55 | 6·89 |
| காக்கிநாடா | 8.15 | 5·86 |
| மசூலிப்பட்டணம் | 4·83 | 6·42 |
| நெல்லூர் | 1·38 | 1·99 |
| மதராஸ் | 0·64 | 3·64 |
| கூடலூர் | 1·59 | 2·98 |
| நாகப்பட்டணம் | 2·96 | 3·59 |
| பாம்பன் | 0·10 | 3·06 |
| கொழும்பு | 16·45 | 31·27 |
| திருவநந்தபுரம் | 19·06 | 25·95 |
| கொச்சி | 52·98 | 45·03 |
| கள்ளிக்கோட்டை | 48·61 | 46·83 |
| மங்களூர் | 41·18 | 43·31 |
| மெர்க்காரா | 52·13 | 34·79 |
| ஐதராபாத் | 3·72 | 5·86 |
| ரெய்ச்சூர் | 5·19 | 4·35 |
| பல்லாரி | 2·20 | 4·44 |
| கர்நூல் | 4·09 | 5·09 |
| கடப்பை | 9·23 | 5·60 |
| ஹாஸ்ஸான் | 10·47 | 13·24 |
| பெங்களூர் | 7.47 | 8·43 |
| கொடைக்கானல் | 21·53 | 12·81 |
| உதகமண்டலம் | 27·05 | .. |
| கோயம்புத்தூர் | 8·29 | 5·58 |
| வேலூர் | 4·95 | .. |
| சேலம் | 6·91 | 9·91 |
| திருச்சிநாப்பள்ளி | 5·16 | 6·56 |
| புதுக்கோட்டை | 7·67 | .. |
| மதுரை | 8·77 | 6·21 |
| திருநெல்வேலி | 3·48 | 5·21 |